

பாரதியார்

மறுமலர்ச்சிக் கவிஞர்

டாக்டர் ச.ஞா.கணேசன்

பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு — 1986-87

பாரதியார்

மறுமலர்ச்சிக் கவிஞர்

டாக்டர் **ச. நா. கணேசன்**
பேராசிரியர் — தலைவர்
இந்தித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
1988

© முதற் பதிப்பு : 1988

உரிமம் : சென்னைப் பல்கலைக்கழகம்

விலை ரூ. 20/-

அச்சிட்டோர் :

அவ்வை அச்சுக்கூடம், சென்னை-13.

வாழ்த்துரை

டாக்டர் ஆ. ஞானம்
துணைவேந்தர்
சென்னைப் பல்கலைக்கழகம்

பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவுத் திட்டத்தில், பாரதியார் மறுமலர்ச்சிக் கவிஞர் என்ற தலைப்பில் தமிழ் இலக்கியத் துறையில் பேராசிரியர் ச. நா. கணேசன் அவர்கள் நிகழ்த்திய சொற் பொழிவுகள் இப்போது நூல் வடிவில் வெளிவந்திருப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதல் சொற்பொழிவு இந்திய மறுமலர்ச்சிச் சூழலையும் அதில் பாரதியாரின் ஆளுமை உருப்பெற்ற முறையினையும் விளக்குகிறது. இரண்டாவது சொற்பொழிவு தமிழுலகில் தேசியக் கவியாக விளங்கும் பாரதியையும் இந்தி உலகில் தேசியக் கவியாக விளங்கும் மைதிலி சரண் குப்தரையும் மிகச்சிறப்பாக ஒப்பிட்டு ஆராய்ந்து விளக்குகிறது. மூன்றாம் நாள் சொற்பொழிவு மகாகவி பாரதியின் சிந்தனைப் போக்கைத் தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியில் இந்தியச் சிந்தனைப் போக்கோடு பொருத்திப் பார்த்து விளக்குகிறது.

மகாகவி பாரதியை ஏனைய இந்திய மொழிகளில் உள்ள பெருங் கவிஞர்களோடும் உலகப் பெருங்கவிஞர்களோடும் ஒப்பிட்டு ஆராயும்போதுதான் பாரதியின் தனிச் சிறப்புகள் புலப்படும். அத் தகைய ஆய்வுகள் தமிழிலக்கியத் தரத்தை மேலும் உயர்த்த ஏதாவது ஒருவகையில் உதவும் என்பதில் ஐயமில்லை.

ஆய்வுச் செய்திகளை எளிய முறையில் சுவைபடச் சொற் பொழிவுகளாக வழங்கியுள்ள இந்திப் பேராசிரியர் டாக்டர் கணேசன் நம் பாராட்டுக்கு உரியவர். சென்ற ஆண்டில் நடந்த சொற்பொழிவுகளை இவ்வளவு விரைவில் நூல் வடிவில் தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ள தமிழிலக்கியத் துறைக்கு என் அன்பு நிறைந்த பாராட்டுகள்.

இத்தகைய நூல்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று விரும்புகிறேன். நூலாசிரியர்க்கும் தமிழிலக்கியத் துறைக்கும் என் வாழ்த்துக்கள்.

சென்னை
5—9—88

ஆ. ஞானம்

முன்னுரை

டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)

பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டித் தமிழக அரசு அறக்கட்டளைகளை நிறுவிப் பாரதியாரின் சிந்தனைப் போக்கிற் கேற்ப ஆண்டுதோறும் தமிழகப் பல்கலைக் கழகங்களில் சொற் பொழிவுகளும் கருத்தரங்குகளும் நிகழ ஏற்பாடு செய்துள்ளது. பொதுவாகத் தமிழுலகுக்கும் சிறப்பாக ஆய்வுலகுக்கும் கிடைத்த நற்பேறு இது.

பாரதியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு வரிசையில் இந்தித் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் ச. நா. கணேசன் அவர்கள் 1987ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11, 14, 15 ஆகிய மூன்று நாள்களிலும் 'பாரதியார் மறுமலர்ச்சிக் கவிஞர்' என்ற பொருளில் தமிழிலக்கியத்துறையில் மூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். கவிதையுலகில் மிக உயர்ந்த இடத்துக்குரிய தமிழ்க்கவி பாரதி யாருடன் இந்திக்கவி மைதிலி சரண் குப்தரை ஒப்பு நோக்கிச் சொற் பொழிவாளர் தமிழ்மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ள முறை பெரிதும் போற்றத்தக்கதாக அமைந்துள்ளது.

இந்தச் சொற்பொழிவுக்கு வேண்டிய முன்னேற்பாடுகளை முன் கூட்டியே திறம்படச் செய்து வைத்தவர் தமிழிலக்கியத்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் என்பதை இங்கே சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

கருத்தரங்கும் அறக்கட்டளைச் சொற்பொழிவும் சிறப்பாக நிறைவேற உதவிய சென்னைப் பல்கலைக்கழகம், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் விரைவில் நூலாக வெளிவரவும் உறுதுணை புரிந்திருக்கிறது.

நமது பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய துணைவேந்தர் பெருந்தகை மனமுவந்து இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித் திருக்கிறார்.

இந்த நூலின் அச்சுப் படியினைச் செம்மை செய்து தமிழிலக்கியத்துறை விரிவுரையாளர் டாக்டர் வீ. அரசு அவர்கள் நூலுருவாக்கப் பணியில் பெரிதும் உதவி செய்திருக்கிறார்.

'பாரதியார் மறுமலர்ச்சிக் கவிஞர்' என்ற தலைப்பில் உங்கள் கைகளில் தவழும் இந்த நூல் தமிழுக்குப் புதுமையும் பொலிவும் சேர்த்து ஒப்பாய்வுச் சிந்தனைக்கு வளம் சேர்க்கும் என்று நம்பு கிறோம். இந்த நூல் சிறப்பாக வெளிவரப் பல்லாற்றானும் உதவிய அன்புத் தமிழ் நெஞ்சங்களுக்கும் நூலை உருவாக்கிய ஆசிரியர் அவர்கட்கும் வாழ்த்துரை வழங்கியருளிய துணைவேந்தர் பெருந் தகைக்கும் தமிழிலக்கியத் துறையின் சார்பில் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

பொற்கோ
பேராசிரியர் — தலைவர் (பொறுப்பு)
தமிழிலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை
16—9—88

நன்றி

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நூற்றாண்டு விழாவினை யொட்டித் தமிழக அரசால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவு வரிசையில் எனக்கு முதலாவதாக வாய்ப்பளிக்கப்பட்டது நான் பெற்ற பெரும் பேறாகும். என் ஊனிலும் உணர்விலும் நீண்ட காலமாகத் தங்கி நின்ற பாரதியைப் பற்றிய உணர்ச்சிகளையும், கருத்துகளையும் ஆய்வுரைகள் வாயிலாக வெளியிட வாய்ப்பு தந்த சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினர்க்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

இவ்வுரைகளை வழங்கும் பணியை நான் செய்யக் காரணமாக இருந்து செம்மையாகச் செய்து முடிக்க ஊக்கமளித்த பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் இவ்வுரைகள் அச்சிடப் பெற்றதைக் கண்டிருந்தால் மிகவும் மகிழ்ந்திருப்பார். 22—8—1988 அன்று இயற்கை எய்திவிட்ட அவருக்கு இப்பொழுது உள்ளத்திலேயே நான் என் மௌன நன்றியைச் செலுத்துகிறேன். ஆய்வுரைகள் விரைவில் அச்சிட்டு வர வேண்டியன செய்து, அதற்காக அயராது ஆர்வம் காட்டிய தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்களுக்கு என் மனமுவந்த நன்றிகள்.

1987 செப்டம்பர் 11, 14, 15ஆம் நாள்களில் இவ்வுரைகள் வழங்கப்பட்டன. இவற்றில் முதல் ஆய்வுரை இந்தியாவின் பரந்த வரலாற்றுப் பின்னணியில் பாரதியைக்கண்டு மதிப்பீடு செய்வதாகும். இரண்டாவது உரையில் இந்தி மொழியின் தலைசிறந்த சுதந்திரக் கவிஞர் மைதிலி சரண் குப்தரோடு ஒப்பிட்டுப் பாரதியின் தனித் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. மூன்றாவது உரையில் இந்திய மண்ணில் ஆழமாக வேரோடிய உணர்ச்சிகளுடன், அதிலிருந்து பெற்ற புது மணத்தைப் பாரெங்கும் பரப்பிய பெருங்கவிஞன் என்ற நிலையில் பாரதியைக் காண முயற்சி செய்யப்பட்டுள்ளது. அறிஞர் பெருமக்கள் இதை விரும்பி வரவேற்பார்கள் என்று கருதுகின்றேன்.

ச. நா. கணேசன்
பேராசிரியர் — தலைவர்
இந்தித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை
16—9—88

பொருளடக்கம்

பொருள்		பக்கம்
இந்திய மறுமலர்ச்சியும் சுப்பிரமணிய பாரதியாரும்	...	1
பாரதியாரும் மைதிலி சரண் குப்தரும்	...	30
மகாகவி பாரதியும் இந்தியச் சிந்தனையும்	...	53

இந்திய மறுமலர்ச்சியும் சுப்பிரமணிய பாரதியும்

0.1. மறுமலர்ச்சி

0.0. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளும் இந்திய வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சிக் காலமாக இருந்தது. இக்காலத்தில் அரசியல் சிந்தனையிலும் சமுதாய வாழ்விலும் இலக்கியக் கோட்பாடுகளிலும் அடிப்படையாக மாறுதல் ஏற்படத் தொடங்கின. மறுமலர்ச்சித் தன்மைகளை உட்கொண்டு தம் படைப்பாற்றலால் மறுமலர்ச்சிக்கு சக்தியும் திசையும் கொடுத்த இந்திய மொழி எழுத்தாளர் பலர். இவ்வெழுத்தாளர்களில் நாட்டுப்பற்று, சமுதாயச் சீர்திருத்த நோக்கு, வாழ்க்கைத் தத்துவ உணர்வு, கவித்திறன் எதை நோக்கினும் முதல் வரிசைக்கு உரியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

0.1. பாரதியார் அடிமை வாழ்வின் அவல நிலையிலிருந்த நம் நாடு விடுதலை பெற்று ஒரு முழு மாற்றம் அடைய வேண்டுமென்று விரும்பினார், அறமும், செல்வமும் நிரம்பி உலகுக்கே ஓர் எடுத்துக் காட்டாகத் திகழும் பாரதத்தைக் கனவு கண்டார். அத்தகைய பாரதத்தைப் பெற நாட்டு மக்களை எழுப்பித் தன் சிங்கக் குரலால் ஊக்குவித்தார். சுதந்திரம் பெற்று விட்டோம் என்றே வெற்றி முரசு கொட்டியும், சங்கநாதம் முழக்கியும் மக்களுக்கு நம்பிக்கை யளித்தார்.

0.2. இவ்வாறு ஒருபுறம் இந்தியாவின் விடுதலைக்கும், இந்திய சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கும் ஊக்கம் கொடுத்த பாரதியார், தமிழின் பழமையையும், இனிமையையும் சிறப்பினையும், நன்கறிந்து மனமாரப் பாராட்டி, கன்னித் தமிழின் கவினையும், திறனையும் எடுத்துக்காட்டி, 'நாட்பட நாட்பட பலவிதத்திலே அழிந்து கொண் டிருக்கும், தமிழினத்துக்கும் புத்துயிர் கொடுத்தார். ஆயினும் எந்தக் குறுகிய எல்லைக்குள்ளும் நில்லாது மனித வாழ்வின் இன்னல்களை அறிந்து வாழ்க்கையின் ஒரு தத்துவ நோக்கம் தந்து மனித இனத் தின் மறுமலர்ச்சிக்கும் வழிகாட்டினார் என்பது பாரதியாரின் தனிச் சிறப்பு. இவ்வாறு பன்முக மறுமலர்ச்சியின் பெருங்கவிஞராக விளங்கும் பாரதியார் கவிதைகளில் காணும் மறுமலர்ச்சித் தன்மை களின் பின்னணியை ஆராய்ந்து கவிதையை மதிப்பீடு செய்வதே இம்முதல் உரையின் நோக்கமாகும்.

1.0. மறுமலர்ச்சியின் தேவை

பண்பாடுகளும், நாகரிகங்களும் தோன்றுகின்றன: முதிர்ச்சி அடைந்து ஓங்கி நிற்கின்றன: பின் பற்பல பிணிகளால் தம் சிறப்பு களை யிழந்து சில வேளைகளில் முற்றிலும் அழிந்தும் போகின்றன. உலக வரலாற்றில் தோன்றியுள்ள பெரும் நாகரிகங்கள் கூடக் காலப் போக்கால் தம் கொள்கைகளை இழந்து, பலம் குன்றி அழிந்திருக் கின்றன. வரலாற்றுக் காரணங்களால் ஒரு சமுதாயம் சீர்குலைந்து எல்லாவிதமான ஆக்கத் திறன்களும் குன்றி, தனித்துவம் இழக்கும் ஆபத்தான நிலை (Identity crises) வரும்பொழுது அதன் பண்பாட் டில் நிலையான கருத்துகளும், அழியாத மானிடக் கொள்கைகளும், திடமான தன்மானமும் சற்று மிஞ்சியிருந்தால் சமுதாயத்தின் ஆக்கத் திறன்கள் செயல்பட்டு ஒரு மறுமலர்ச்சி வருகின்றது.

அப்பொழுது இரவுக்குப் பின் காலையில் கதிரவன் தோன்றுவது போல் அறிவுச்சுடர்கள் தோன்றுகின்றன. பறவைகள் பாடுவது போல் இலக்கியத்தில் புதுக் குரல்கள் எழுகின்றன. எங்கணும் விழிப்பு ஏற்பட்டு வாழ்க்கை முழுவதும் புத்துயிர் தோன்றுகிறது. இப்படிப்பட்ட ஒரு பெரும் மறுமலர்ச்சிதான் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் தோன்றியது.

1.1. மறுமலர்ச்சியின் தன்மைகள்

காலத்துக்கேற்ப மாறாமலும், அறிவு வளர்ச்சி பெறாமலும் பழங் கருத்துகளைக் கண்மூடித்தனமாகப் பிடித்துக் கொண்டிருத்தல், தமக்குள் பூசல்கள், அல்லது, தம் வலிமையிழத்தல் காரணம் அன்னிய பண்பாட்டுத் தாக்குதல்களை எதிரிடும் சக்தி இல்லாதிருத் தல், சுகபோகங்களில் மூழ்கி செயற்றிறன் கெடுதல் இவையே பண் பாட்டு வீழ்ச்சியின் காரணங்கள். ஆகவே இவைக்கு மாறான சக்திகள் மறுமலர்ச்சியில் தோன்றுகின்றன. அறிவு வளர்ச்சியின் பயனாக அவ்வக்கால அறிவுக்கு உகந்தவாறு விஞ்ஞானம், தொழில் முதலியவற்றில் பெரும் முன்னேற்றம் ஏற்படுகின்றன. சிந்தனை மலர்ச்சி ஏற்பட்டு புது தத்துவக் கருத்துகள் நிரூபிக்கப் படுகின்றன. வாழ்வின் நோக்கம், சமுதாய உறவுகள், பொருளாதாரம், வரலாற்றுப் பிரக்ஞை முதலியவற்றைப் பற்றிய கருத்துகளில் அடிப்படை மாறு தல்கள் வருகின்றன. சமயம், இறை போன்றவை கூட காலத்துக் கேற்றவாறு புது உருவங்கள் பெறுகின்றன. அழகியல் கருத்துகள் வளர்ச்சியடைந்து இலக்கியம், கலை, சிற்பம் முதலியவற்றிலும் புதிய கருத்துகளும், நடைகளும் தோன்றுகின்றன. சுருக்கமாகச் சொன் னால் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பெருமளவில் அடிப்படை மாறுதல்கள் ஏற்படுகின்றன.

1,1.1. இந்திய மறுமலர்ச்சி

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய தொழில் புரட்சி உலக வரலாற்றை மாற்றி அமைத்து

சமுதாய வாழ்வுக்கு புது திசை கொடுத்ததென்றால், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலக நாடுகள் பலவற்றிலும் அரசியல் சமுதாய விழிப்பு உண்டாகி புரட்சிகரமான மாற்றங்களும் தொடங்கின. தொழில்புரட்சி உடனே நம் நாட்டைப் பாதிக்காதபோதிலும் பிற்காலத்தில் அதன் தாக்குதல் பல மாற்றங்களுக்குக் காரணமாக இருந்தது. ஆங்கில ஆட்சி நிலைபெற்றதும் கல்வியிலும், சிந்தனையிலும், சமுதாய உறவுகளிலும், வாழ்க்கை முறையிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. பரம்பரையான வாழ்வுக்கும் சிந்தனைப் பாணிக்கும் முன் கேள்விக் குறிகள் எழுந்தன. அதோடு இந்திய மொழிகளின் இலக்கியங்களும் சமுதாயத்தின் சீர்குலைந்த நிலையைக் காணவும், அதைச் சீர்திருத்தும் மறுமலர்ச்சியைத் தூண்டவும் செய்தன. எல்லா இலக்கியங்களிலும் மறுமலர்ச்சிக் கவிஞர்கள் தோன்றினார்கள்.

இந்த மறுமலர்ச்சிக்கு முன் நாட்டில் இருந்த அரசியல்—சமுதாய நிலைகள் என்ன என்பதையும் ஆராய்ந்தால்தான் மறுமலர்ச்சியின் இன்றியமையாமையையும் அதன் பொருளையும் சரியாக உணர முடியும்.

நாட்டின் நிலை

(1) நூற்றாண்டுகளாக நாடு முழுதும் ஆட்சி புரியும் நிலையான ஒரு அரசு இல்லாததாலும், சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் ஒருவரோடொருவர் போர் செய்து சுகபோக வாழ்வில் மூழ்கி இருந்ததாலும் மக்கள் வாழ்வு அவலநிலையை அடைந்தது. ஆங்கில ஆட்சி ஓரளவுக்கு நிலையான ஆட்சியான போதிலும் அதனால் அடிமை வாழ்வும் வந்தது.

(2) தொழில்கள் வளரவில்லை. அயல்நாட்டினர் ஆட்சியில் தொழில், வணிக நீதிகள் காரணமாகச் சிறுதொழில்கள் அழிந்தன.

(3) நாட்டின் செல்வம் அயல் நாட்டுக்குச் சென்று கொண்டிருந்தது.

(4) அடிக்கடி வந்து கொண்டிருந்த பஞ்சங்கள் மக்களை வாட்டி வதைத்தன. கூலி வேலைக்கும் ஒப்பந்த அடிமைப்பணிக்கும் செல்லும் நிலை வந்தது.

(5) செல்வந்தர்களும், வியாபாரிகளும் அரசாங்க சேவகர்களோடு சேர்ந்து சாதாரண மக்களைச் சுரண்டிக் கொண்டிருந்தனர்.

(6) கல்வியும் பலவிதத்தில் சீரழிந்திருந்தது. பழமைப் பற்றும் மூடநம்பிக்கைகளும் அறிவு வளர்ச்சியில் தடையாக இருந்தன. ஏற்கெனவே பெரும்பாலோருக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்தது. ஆங்கிலக் கல்வி பரவிய போது அதன் செயலும் ஒரு எல்லைக்குள் மட்டும் பரவுதலும் காரணமாகப் பாமர மக்கள் இன்னும் தாழ்த்தப்பட்டனர். ஆங்கிலக் கல்வி பெற்றசெல்வந்தர் பலரும் நம் நாட்டுப்

பண்பாட்டிலிருந்து விலகி அதை வெறுப்புடன் காணவும் தொடங்கினர்.

(7) சாதி வேற்றுமை வளர்ந்து பெரும்பாலோர் சமுதாயத்தில் கீழ்நிலைக்கு ஒதுக்கப்பட்டதால் நாட்டின் பொது முன்னேற்றத்துக்கு அவர்கள் ஒத்துழைப்பு இல்லாமல் போனது. நாட்டில் ஒற்றுமையும் இழக்கப்பட்டது.

(8) புரோகித வர்க்கம் தியாகம், பண்பு, பிரம்ம ஞானம் இவற்றை விட்டுவிட்டு லௌகிக சுகங்கள் பெறுவதிலும், சமயத்தை வியாபாரமாக்கிச் செல்வம் சேர்ப்பதிலும் முனைந்து இருந்தனர்.

இவ்வாறு நாட்டில் முன்னேற்றப் பாதைகள் அனைத்தும் அடைந்து நின்ற காலத்தில்தான் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றியது அவ்வியக்கத்தில் பாரதியாரின் பங்கு நிகரில்லாதது.

1. 1. 2. இலக்கிய மறுமலர்ச்சியின் அரசியல் சமுதாயப் பின்னணிகள்

(1) 1885- ல் ஏ. ஓ. ஹியூம், வில்லியம் வெடர்பர்ன், தாதாபாய் நவரோஜி போன்றவர் தொடங்கிய இந்திய தேசிய காங்கிரஸ் ஆங்கில ஆட்சிக்கு ஆலோசனை தரும் மிதவாதிகளின் இயக்கமாகத் தான் இருந்தது. பல ஆண்டுகள் அது அதிகமாக யாரையும் கவர வில்லை. ஆனாலும் 1892-ல் அது வளர்ந்து ஆயிரக்கணக்கான உறுப்பினர்களை உடையதாகவும், நீதிமன்றச் சட்டத்தை (Courts Act) நேரடியாகக் கண்டிக்கும் அளவு சக்தி வாய்ந்ததாகவும் இருந்தது (தோம்ப்ஸன் — காரட், ஏகநாத்ரானடே: 1978, ப. 14) மேலும் வளர்ந்து வங்கப் பிரிவினை (1905)க்கு மேல் அது சுதந்திரத்துக்காக நிரந்தரம் போராடும் இயக்கமாக மாறியது. சூரத் காங்கிரசில் (1907) பிளவுபட்டு, அதற்குள்ளேயே மிதவாதிகள் கட்சியும், தீவிரவாதிகள் கட்சியும் தோன்றின. இவற்றில் தீவிரவாதிகளுடன் பாரதியார் தொடர்பு இருந்தது என்பது அனைவரும் அறிவர்.

(2) சமய இயக்கங்கள்

இதைவிட அதிகம் தீவிரமான இயக்கங்கள் சமுதாயத்திலும் இலக்கியத்திலும் தோன்றின. பாரதியார் காலத்தில் அரசியலிலும் சமுதாயத்திலும் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது இந்து மறுமலர்ச்சி இயக்கம்தான்.

மறுமலர்ச்சி இயக்கங்களுக்கு மூன்னோடியாக இருந்தவர் இராசாராம் மோகன்ராய். அவர் நிறுவிய வேதாந்தக் கல்லூரி (1825)யும், பிரம்ம சமாஜமும் முக்கியமாக அன்னிய சமயப் பிரசாரங்களுக்குத் தடையிட்டு இந்து சமயத்துக்குப் புத்துயிர், ஒற்றுமை கொடுத்தன. 'ஒன்றே கடவுள்' என்ற கொள்கை, மனித இனத்தின் மூட நம்பிக்கைகளையும், ஆசாரங்களையும் கண்டித்தல், போன்ற

சமயச் சீர்திருத்தச் செயல்கள் பிரம்ம சமாஜத்தின் முக்கிய கொள்கை களாகும். சிறு வயதில் மணம், சதி போன்றவை எதிர்க்கப்பட்டது. கல்வியில் இராசாராம் மோகன்ராய் ஆங்கிலத்துக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டுமென்று கூறினாரென்றால் அதற்குக் காரணம் அது வழியாக நாம் பெறும் பரந்த அறிவு ஆக இருந்தது. மேனாட்டின் முன்னேற்றம் அவரைக் கவர்ந்தது,

சமயத்தையும், தத்துவத்தையும் விஞ்ஞான முறையில் அணுகி விவேக பூர்வமான கருத்துக்களை ஏற்கும் அறிவு வளர்ச்சி முறை மோகன்ராயிலிருந்து தொடங்கியது.

பின் இராமகிருஷ்ண பரம ஹம்சரும், சுவாமி விவேகானந்தரும் நம் பழங்காலத் தத்துவம், பண்பாடு இவற்றுக்குப் புத்துயிர் கொடுத்து சமுதாயத்தில் விழிப்பு ஏற்பட முயற்சித்தனர். வேத காலத்தை இந்து சமயத்தின் பொற்காலமாகக் கண்டு "வேத காலத்துக்குத் திரும்புவோம்" என்று அவர்கள் கோஷமிட்ட கொள்கை தயானந்த சரசுவதியால் ஏற்கப்பட்டு அவர் நிறுவிய 'ஆரிய சமாஜ'த்தின், (1877) அடிப்படைக் கொள்கையாகக் கருதப் பட்டது. முதலில் வங்கத்திலும், பின் பஞ்சாபிலும் அவர் சமாஜத்தின் பிரசாரம் செய்தார். நவீன விஞ்ஞான வளர்ச்சியால் வந்துள்ள அறிவுகள் எல்லாம் வேதங்களில் விதையுருவத்திலாவது இருந்தது என்பது அவர் கருத்து.[1]

இந்தப் பழைமைப் பற்றின் விளைவாக ஒருபுறம் மக்களின் தற் பெருமையும், தன்னம்பிக்கையும் வளர்ந்தது. ஆனால் மறுபுறம் அது பழமைப் பற்று (obscurantism) ஆக வளர்ந்து நம் சிந்தனை வளர்ச்சியில் இடராகி, நம் முன்னேற்றத்துக்குத் தடையாகவும் இருந்தது.

ஓரளவுக்குப் புரட்சி நோக்கம் உடைய திலகர் கூடப் பரம்பரை இந்து சமயத்தின் நம்பிக்கைகளிலும். ஆசாரங்சளிலுமிருந்து விடுதலை பெறாததற்குக் காாணம் இத்தகைய சிந்தனை முறையே.

ஆகிலும் தயானந்தர் ஐரோப்பியப் பண்பாட்டின் பல கூறுகளை விரும்பினார். ஆன்மீக வாழ்க்கைக்காக லௌகீக வாழ்க்கையைப் புறக்கணிக்காதிருத்தல் மேனாட்டுத் தத்துவத்தின் முக்கிய பண்பாகும் என்பதை அவர் கண்டார். அவர்கள் சமுதாயத்தில் இளவயது

1. Everything worth knowing even in the most recent inventions of modern Science, was alluded to in the Vedas, Steam engines, railways and steam boats — all were shown to have been known atleast in their germs to the poets of the Vedas.

— Max Muller, Chips from a German Worshop, quoted: Edward Thompson and G. T. Garret, Vivekananda Patrika, VII, I, p. 15.

மணம் இல்லை; பெண்களுக்கும் நல்ல கல்வியும் சம உரிமையும் கொடுக்கப்படுகிறது, பெண்களுக்கு வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுண்டு. குழந்தைகள் அதிகம் கவனிக்கப் படுகின்றனர். சமுதாயத்துக்காகத் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றனர். ஒவ்வொருவனும் தன் கடமையை உணர்ந்து நன்றாக உழைக்கிறான்; அவரவர் வாழ்க்கை முறைகளைப் பின் பற்றுகிறார்கள் — இத்தன்மைகள் தயானந்த சரசுவதியைக் கவர்ந்தன; இவற்றைப் பின்பற்ற வேண்டுமென்று அவர் கூறவும் செய்தார் (சத்தியார்த்தப் பிரகாசம், 443–444).

இவ்வியக்கங்களைத் தவிர தேவேந்திரநாத டாகூரின் 'ஆதி பிரம்ம சமாஜம்', கேசவ சந்திர சென்னின் 'பாரதீய பிரம்ம சமாஜம்', 'பிரார்த்தனை சமாஜம்' (1867) போன்ற பல இயக்கங்களும், அனு சீலன் சமிதி போன்ற ரகசியக் குழுக்களும் நாட்டின் பல பாகங்களி லும் செயல் புரிந்து வந்தன. இவற்றின் காரணமாக ஏற்பட்ட விழிப்பு, பழமை புதுமைக்கிடையே வளர்ந்த சிந்தனைக் குழப்பம் முதலியவற்றைப் பாரதியார் நன்கு அறிந்திருந்தார் என்பதை அவர் கட்டுரைகளிலும் சில கவிதைகளிலும் காண முடியும்.

இவ்வியக்கங்களும் பல சிறு நேர்முக இயக்கங்களும் சில வேளைகளில் தீவிரவாதக் கொள்கைகளைக் கைக்கொண்டன. காங்கிரசில் கூட சில வேளைகளில் தீவிரவாதம் தலைதூக்கியது. இதன் பயனாக அன்னிய சமயங்களுடன் விரோதம் வளர நேர்ந்தது. முதலில் காங்கிரசுடன் ஒத்துழைத்த மிதவாதிகளான முஸ்லீம்கள் கூட 1900-க்கு மேல் காங்கிரசிலிருந்து பின் வாங்கவும் பின் முஸ்லீம் லீகில் சேர்ந்து பல சந்தர்ப்பங்களிலும் காங்கிரசுக்கு எதிராக இயங்க வும் செய்தனர் (தோம்ப்ஸன், காரட்: ஏகநாத் ரானடே: 1978:16).

(3) அன்னிய இயக்கங்கள்

இவ்வாறு சுதந்திர இயக்கங்களும் மறுமலர்ச்சி இயக்கங்களும் நடந்து கொண்டிருக்கும்பொழுது குப்த சமாஜம் (ரகசியக் கழகம்), பரமஹம்ச சபா, பிரார்த்தனை சபா போன்ற ரகசிய சங்கங்கள் தோன்றி சமயச் சீர்திருத்தங்களில் ஈடுபட்டன. இவற்றில் பரம ஹம்ச சபாவினர் கூட்டங்கள் கூடி 'ரத்னமாலா' என்ற பஜனைகள் பாடி கடைசியில் கீழ் சாதியினன் ஒருவன் சமைத்த உணவு உண் பதை வற்புறுத்தியது சாதி ஒழிப்பின் முக்கிய திட்டமாகக் கருதலாம். மற்ற சங்கங்களும் உருவ வழிபாட்டின் எதிர்ப்பு, அவதாரவாதத்தின் கண்டனம், சாதி ஒழிப்பு, பெண் கல்வி போன்ற சீர்திருத்த காரியங் களில் ஈடுபட்டிருந்தனர்.

இதைத் தவிர வங்கத்தில் தோன்றி பஞ்சாபிலும், உத்தரப்பிர தேசத்திலும் பரவிய புரட்சி இயக்கத்தில் கணேச சங்கர் வித்தி யார்த்தி வடுகேசுவர் தத்து, ராஜகுரு, பகத்சிங், சுகதேவ், சுரேந்திர பாண்டே, ஜிதேந்திர நாத சன்யால், ஆசாத், அஜயகோஷ் போன்ற

வீரர்கள் ஆங்காங்கு ஆயுதப்புரட்சிக்கு முயன்றபோதிலும் அவ்வியக்கம் அதிகம் முன்னேற முடியவில்லை. தமிழ்நாட்டிலும் இதோடு சார்புடைய இயக்கத்தில் வாஞ்சிநாதன், வி.வி.எஸ். அய்யர் முதலியோர் ஈடுபட்டிருந்தனர்.

1.1.3. தமிழ்நாட்டுச் சூழ்நிலைகள்

தமிழ்நாட்டு அரசியல் சமுதாய நிலை பொதுவாக இந்திய அரசியல் நிலையோடும் மறுமலர்ச்சி இயக்கத்தோடும் தொடர்புடையதாக இருந்தபோதிலும் மாறுபட்ட சில சூழ்நிலைகளும் உருவாயின என்பதை மறக்க முடியாது.

காங்கிரசின் இயக்கங்கள் தமிழ்நாட்டிலும் பரவின. சத்தியமூர்த்தி, திரு.வி.க., வ.ஊ.சி. போன்றவர்களால் அரசியல் விழிப்பு ஏற்பட்டது. வணிக சங்க இயக்கத்தில் ஈடுபட்ட திரு.வி.க. தொழிலாளர் விழிப்புக்கும் காரணமாக இருந்தார்.

இதைத் தவிர முக்கியமாக வேறு இரண்டு இயக்கங்களும் தமிழ்நாட்டு அரசியலிலும் சமுதாயத்திலும் அலைகள் எழுப்பின. ஒன்று தமிழின் மறுமலர்ச்சி இயக்கமும் அதோடு தொடர்புடைய தனித் தமிழ் இயக்கமும் ஆகும். ஆங்கிலத் தொடர்பால் வந்த விழிப்பும், தமிழில் சென்ற நூற்றாண்டில் நடந்த ஆராய்ச்சிகளும் காரணமாகத் தன்மானமும் மொழிப்பற்றும் உருவெடுத்து வளர்ந்தன. ஆங்கில, வடமொழி ஆதிக்கங்களிலிருந்து தமிழரை விடுவித்துத் தமிழின் தனிச் சிறப்பையும் உரிமையையும் நிலைநாட்ட தீவிரமான முயற்சி செய்யப்பட்டது.

இரண்டாவதாக முதலில் சமுதாயச் சீர்திருத்தத்திலும், பின் அரசியலிலும் இறங்கிய ஜஸ்டிஸ் பார்ட்டியின், பிராமணரல்லாதார் உரிமைகளைப் பெறவும், பாதுகாக்கவும் தொடங்கிய இயக்கம்.

இவ்வாறு அரசியல் சமுதாயச் சூழ்நிலைகள் பல்வேறு சக்திகளுக்கும், இயக்கங்களுக்கும் இடையே அகப்பட்டு மிகச் சிக்கலான நிலையில் இருக்கும் பொழுதுதான் பாரதியார் தோன்றினார். அரசியல், சமுதாயப் பண்புகளை நன்கு ஆராய்ந்தறிந்து, சிந்தனையில் சமநிலை தவறாது, தற்கால உணர்ச்சியை முழுமையாக அனுபவித்து, மக்கள் கனவுகளை முற்றிலும் உணர்ந்து அவர்கள் புரியும் மொழியிலே எழுதும் கவிஞன் தான் இச்சூழ்நிலையில் காலத்தின் பிரதிநிதியாக வளர முடியும். இந்த நிலை பாரதியார் ஒருவருக்குத் தான் கிடைத்தது.

1.1.4. மறுமலர்ச்சி : பாரதியாருக்கு முன்

பாரதியாருக்குச் சற்று முன்னயே தமிழ் இயக்கத்தில் மறுமலர்ச்சியின் முதல் கதிர்கள் தோன்றத் தொடங்கியிருந்தன. கோபாலகிருஷ்ண பாரதியின் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'

முற்றிலும் சமுதாய மறுமலர்ச்சியின் கருத்தினைத் தராதபோதிலும் பக்தியைச் சார்ந்த புது நோக்கத்தைக் காட்டியது. வள்ளலார் இராமலிங்க அடிகள் (1824–1874) முதன்மையாக சைவ பரம் பரையைச் சார்ந்த பக்தராக இருந்தும் இறைவனை அருட்பெரும் சோதியாகக் கண்டு தன் 'சுத்த சமரச சன்மார்க்க சங்க'த்தின் கொள்கைகளைப் பிரசாரம் செய்து சமுதாய வாழ்வில் சமரசமும் சன்மார்க்கமும் ஜீவகாருண்யமும் பரப்ப முயன்றார். மாயூரம் வேதநாயகம் பிள்ளை குறுகிய சமயக் கொள்கைகளுக்கப்பால் மானிட சமயத்தின் கொள்கைகளைத் தரும் 'சர்வசமய சமரச கீர்த்தனைகள்' வழியாகவும் மறுமலர்ச்சிக்கு உதவினார். இவர்கள் அனைவரும் ஒருபுறம் சமுதாய மறுமலர்ச்சியைத் தூண்டியதோடு, மறுபுறம் தமிழின் சிறப்பினையுணர்ந்து அதற்குப் புத்துயிர் கொடுப்ப திலும் வெற்றி பெற்றனர். பரிதிமார் கலைஞரும் (வி. கே. சூரிய நாராயண சாஸ்திரி) மறைமலை அடிகளும் தனித்தமிழ் இயக் கத்துக்கு விசை கொடுத்து பிறமொழி ஆதிக்கத்தை எதிர்த்தனர். இவர்கள் வடமொழியிலும் ஆங்கிலத்திலும் பற்று இருந்தபோதிலும், அவற்றின் ஆதிகத்தை எதிர்க்கவும், தமிழுக்கு முதலிடம் கொடுத்து அதற்குத் தூய வடிவமைக்க முயற்சிக்கவும் செய்தனர். இவற்றைத் தவிர உ. வே. சாமிநாதய்யர், ராபர்ட் கால்டுவெல், ஜி. யு. போப், வீரமாமுனிவர், மனோன்மணி சுந்தரம் பிள்ளை, போன்றவர்கள் பன்முகத் தமிழ்த் தொண்டுகளும் தமிழின் மறுமலர்ச்சிக்கு ஆரம்பம் குறித்தன. இவ்வாறு தமிழ் ஒரு புது வாழ்வை எதிர்பார்த்து, புது ஆவல் களுடன், புது கடமையுணர்ச்சியுடன் இருக்கும்பொழுது தோன்றிய பாரதியார் அதன் எதிர்பார்ப்புகளை முற்றிலும் பூர்த்தி செய்யும் ஆற்றல் நிரம்பிய ஒரு மாபெரும் சக்தியாகத் தோன்றினார்.

1.2. சூழ்நிலைகளும் பாரதியார் தனிப் பண்புகளும்

பாரதியாரின் வாழ்க்கைச் சூழ்நிலைகளும் இயல்பான அவர் தன்மைகளும், பரம்பரையிலிருந்து மாறுபட்ட கவிஞராக அவர் வளர்ச்சியடைய உதவியாக இருந்தன. எட்டயபுரம் அரசவையில் கவிஞர், புலவர்களுடன் அவர் தொடர்பு சிறுவயதிலே கவித்திறன் வளர உதவியது. காசி வாழ்க்கையும், அங்கே அவர் பெற்ற கல்வி யும் இந்தியப் பண்பாட்டின் பரப்பினை அறியவும், பரந்த மனப் பான்மை பெறவும் உதவி புரிந்தன. மறுமொழி பேசும் இடத்திலும் சில ஆண்டுகள் வாழ்ந்து, இந்தியப் பண்பாட்டின் பல்வேறு முகங் களையும் அறிந்த பாரதியார் பெற்ற பரந்த அனுபவங்கள் வேறு எந்தத் தமிழ்க் கவிஞனும் என்றல்ல எந்த இந்திய மொழிக் கவிஞனுமே பெற முடியவில்லை. பின் தமிழ் நாட்டில் வந்து இலக்கிய நண்பர்களோடும் பத்திரிகை உலகோடும் அவர் கொண்ட தொடர்பு அவர் உலகச்செய்தி அறிவு பெருகவும், ஆக்கத் திறன்கள் விரைவில் வளர்ச்சி அடையவும் உதவியாகத்தான் இருந்தன.

1.2.2. ஆனால் வாழ்க்கை முழுதும் அவர் அநுபவித்த துயரங்கள் எந்த மனிதனுக்கும் சோதனையாக இருந்திருக்கும். இளவயதிலேயே

தந்தையை யிழத்தல், உறுதியான ஒரு முன்னேற்றப் பாதை காண முடியாமல் அலைதல், தானாகவே வரவழைத்துக் கொண்ட அரசாங் கத்தின் விரோதம், வாழ்க்கை முழுதுமே வறுமை—இவற்றின் சோதனைகளுக்கிடையே, எந்தப் பேரொழுக்குக்கும் எதிரே எதிர் நீச்சலிடும் மனோதிடம் உடைய ஒரு பெரும் வீரனைத் தவிர எவனும் சோர்ந்து போயிருப்பான். தன் லௌகீக சுகங்களுக்கப்பால் எதோ ஒரு குறிக்கோள் வாழ்வுக்குண்டு என்றுணர்ந்து அதை அடைவதற் காக எத்தகைய தியாகம் செய்யவும் எத்துணைத் துயரம் சந்திக்கவும் தயாரான ஒருவன்தான் இவ்வாறு எதிர்நீச்சலிட்டு ஆத்ம வளர்ச்சியும் பெற்று நாட்டின் மறுமலர்ச்சிக்கும் உதவியாக இருக்க முடியும். அப் படிப்பட்ட ஒருவனிடம் அளவற்ற துயரிலும் வாடவோ, அழியவோ செய்யாத படைப்பாற்றலும் கவித்திறனும் இருந்தால் அவன் நாட்டு மக்களை முழுதும் எழுப்பும் கவிதைகள் எழுதி அழியாப் புகழ் பெற முடியும். இவ்வாறு உயிர் கொடுக்கும் கவிதை எழுதி உயிரற்றதற்குச் சமமாக இருந்த ஒரு சமுதாயத்தை எழுப்பி, அதன் முன்னேற்றத் துக்கு லட்சிய உணர்வோடு வழிகாட்டிய கவிஞர் பாரதியார்.

இதைத்தவிர மனிதர்களிடம் மட்டுமல்லாமல் எல்லா உயிரினங் களிடமும் பாரதியார் வைத்திருந்த அன்பும் இரக்கமும் அவரை உயிரினத்தின் துயரினை மாற்ற முயற்சி செய்யும் கவிஞராக ஆக்கி விட்டன.

1.3. பாரதியார் சுதந்திர வேட்கையும் மறுமலர்ச்சியும்

பாரதியார் தனிமுறையில் முழு சுதந்திரத்தை விரும்பியவர், எல்லாவித கட்டுகளையும், அடிமை வாழ்க்கையையும் அவர் வெறுத்தார். கடும் துயரங்களைச் சகிக்க அவர் தயங்கவில்லை. கடினமாக உழைப்பதையும் அவர் வெறுக்கவில்லை. ஆனால் சுதந்திரம் இழந்து ஒரு சிறைச்சாலைக்குள் வாழ்வதுபோல் வாழவோ, அன்னியர் அதிகாரத்துக்கு அடங்கியும் ஆசாரங்களுக்குக் கட்டுப் பட்டும் எதுவும் செய்யவோ அவர் விரும்பவில்லை. தங்கக் கூட்டில் சிறைபட்டு வாழ்வதை விரும்பாது திறந்த வானத்தில் பறந்து இயற்கையோடு இணைந்து பாடிக் களிக்கின்ற பறவையைப் போன் றவர் பாரதி என்ற கவிஞர். தான் எந்தத் துயரத்தையும் சகித்தாலும் அன்னியர் சிறிதளவுகூட துயரம் அடைவதைத் தாங்க முடியாத உள்ளம் படைத்தவன் பாரதி என்ற மனிதன். இந்நிலையில் இந்திய மக்களை முழுதும் தற்கால அவல நிலையிலிருந்து விடுவித்து நல் வாழ்க்கை நல்க சுதந்திரமும் மறுமலர்ச்சியும் அவர் உள்ளத்தின் இன்றியமையாத் தேவைகள் ஆயின. நாட்டு மக்களும் அடிமைப் பட்டு, மானம் இழந்து வாழ்வதைப் பார்த்து அவர் உள்ளம் குமுறியது. வேடன் எய்து வீழ்த்திய ஒரு பறவையின் துயரம் வான்மீகியின் உள்ளத்தைக் குலுக்கி கவிதையைத் தூண்டியது என்றால், ஒரு நாட்டு மக்களின் துயரம் பாரதியின் உள்ளத்தைக் கலக்கி, அவர் துன்பங்களை நீக்கி மறுமலர்ச்சி பெறும் கவிதைகள் எழுதச் செய்தது.

1.4. மறுமலர்ச்சியும் கவிதையும்

மறுமலர்ச்சிக் கருத்துக்கள் கவிதையின் இன்றியமையாத கூறுகள் இல்லையென்றாலும், சுதந்திரத்துக்காகவும், மறுமலர்ச்சிக் காகவும் எழுதப்படும் கவிதைகள், வெறும் பிரசாரக் கவிதைகளாகத் தரம் தாழ வாய்ப்பு இருந்தபோதிலும் பாரதிக் கவிதைகளை இவ்வாறு தரம் தாழ்த்தி ஒதுக்கிவிட முடியாது. கவிதைக்கு கருப் பொருளாக எப்பொருளும் பொருந்தும். அது கவிஞன் உள்ளத்தின் இன்றியமையாத் தன்மையாக அமைந்து, அடக்கி வைக்க இயலாத உணர்ச்சியாக வளர்ந்து வெளிப்பட்டு, தன் தீவிர ஒளியால் அன்னி யரை பரவசப்படச் செய்யும்பொழுதுதான் உண்மையான கவிதை எழுகிறது. பாரதியாரைப் பொறுத்த வரையில் சுதந்திரம், அவர் உள்ளத்தின் இன்றியமையாத் தன்மை. சுதந்திர நாட்டமும் மறு மலர்ச்சி வேட்கையும் அவர் மேல் தற்காலச் சூழ்நிலைகளால் சுமத் தப்பட்ட தன்மைகள் அல்ல. அவர் ஊனோடும், உயிரோடும் ஒன்று பட்டுக் கலந்திருந்த குணங்கள். ஆகவேதான் அவர் கவிதைகள் உள்ளத்தின் உண்மைகளிலிருந்து உதிக்கும் ஒளிக்கதிர்களாகி அவற்றைப் பாடுவோர் உள்ளங்களையும் ஒளி மயமாகச் செய் கின்றன.

இவ்வாறு ஒரு கொள்கைப் பற்று (Commitment) கவிதைக்கு உயர்வு கொடுக்கின்றதா, அதைப் பிரசாரக் கவிதையாகத் தாழ்த்து கின்றதா என்பது ஒரு அடிப்படைக் கேள்வி. ஒரு தடவை மகாத்மா காந்தியின் வாழ்வின் ஆடம்பரங்களையும், அழகிய பொருள்களை யும் தவிர்க்கும் கொள்கையையும், அழகில்லாத ஆடைகள் அணிய வற்புறுத்தும் பிடிவாதத்தையும் கண்டித்து இரவீந்திரநாத தாகூர் சொன்னார் "பறவைகள்கூட இயற்கையின் அழகினால் கவரப்பட்டு பாடிக் களிக்கின்றன" என்று. காந்திஜி பதில் கொடுத்தார் "பறவை கள் வயிற்றின் பசியை ஆற்றித்தான் பாடிக் களிக்கின்றன". காந்திஜியின் முன் நாட்டு மக்களின் வறுமையை மாற்றுவது முதல் பிரச்சினையாக இருந்தது.

பாரதியாரோ ஒரே நேரத்தில் வயிற்றின் பசியையும் ஆற்ற விரும்பினார். உள்ளத்தின் தாகத்தையும் அதாவது அழகின் தாகத் தையும் தணிக்க முற்பட்டார். ஆகையால் அவர் கவிதை பசிப் பிணியால் வாடிய மக்களின் உணர்ச்சிகளைப் புறக்கணித்து இயற்கை அழகிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் மயங்கி விடவும் இல்லை. வாழ்க்கைப் பிரச்சினைகளிலே மூழ்கி அழகின் இன்பத்தை புறக்கணிக்கவும் இல்லை. வாழ்வினை மலரச்செய்ய கவிதை பயன் பட்டது. கவிதைக்குச் சக்தியும் அழகும் கொடுக்க வாழ்க்கையும் உதவியது. இரண்டுமே பாரதிக் கவிதையில் மறுமலர்ச்சி கண்டன.

1.5.1. நாட்டு மக்கள் முன்னேற்றமடைந்து நல்வாழ்வு பெற முதல் படி சுதந்திரம் என்பது காலத்தின் கருத்து. அந்தக் காலத்தில் சமுதாயச் சீர்திருத்தவாதிகளும், அரசியல் தலைவர்களும், எழுத் தாளர்களும் ஏன்—சாதாரண மக்களும் நன்கறிந்த உண்மை. எல்லா

மொழிகளிலும் பல கவிஞர்கள் இந்தச் சுதந்திர வேட்கைக்கு ஊக்கம் கொடுத்தனர். அந்தக் கால கட்டத்தில் காற்றிலே கலந்திருந்த உணர்ச்சிகளைத் தீவிரமாக அனுபவித்து, அவற்றைக் கவிதை மூலம் சாதாரண மக்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார் பாரதியார்.

பொதுவாகக் கூறினால் பாரதியார் விடுதலையின் கோட்பாடுகள் இவை:

1. அரசியல் சுதந்திரம் மட்டுமல்லாமல், நாட்டை வாட்டிக் கொண்டிருக்கும் எல்லாப் பிணிகளிலிருந்தும் மக்கள் விடுதலை பெற வேண்டும்.

2. நூற்றாண்டுகளாக வாழ்க்கையைச் சிதைத்து வரும் பொருளற்ற நம்பிக்கைகளிலிருந்தும் விடுதலை பெற வேண்டும்.

3. நீதியும், அறமும் நிலைநாட்டப் பெற்று அனைத்து மக்களும் சம உரிமைகளுடனும், சம சுகங்களுடனும் வாழும் சூழ்நிலை உருவாக வேண்டும்.

4. நாட்டின் ஆக்க சக்திகளும் படைப்புத் திறன்களும் ஒன்றுபட்டு வளர்ந்து எல்லா நிலைகளிலும் மறுமலர்ச்சி காணும் சுதந்திரம் வரவேண்டும்.

5. அதற்கும் அப்பால் அது மனித இனம் முழுதுக்கும் மறுமலர்ச்சி கொடுக்கும் சுதந்திரமாக அமைய வேண்டும்.

6. இன்னும் சொன்னால் மனித இனம் மட்டுமல்ல உயிரினங்கள் அனைத்துமே இன்பம் பெற்று, இயற்கையோடும், இன்பமயமான இறையோடும் இணங்கி முற்றிலும் இயல்பான வாழ்க்கை வாழும் சூழ்நிலை தரும் சுதந்திரம் வரவேண்டும்.

இவற்றையெல்லாம் கற்பனை செய்கிறது பாரதிக் கவிதை.

1.5.2. பாரதியாரின் சுதந்திர இயக்கப் பாடல் முக்கியமாக நான்கு வகைப்படும்.

1.5.2.1. பாரத நாட்டில் பழம்பெருமையையும் சித்திகளையும் புகழ்ந்து பாடும் பாடல்கள். இவற்றில் நம் நாட்டினர் பெற்றிருந்த ஞானம், கவித்திறன், படைவீரம் சாத்திரம், உடல் வன்மை, தொடங்கி எல்லா உயர் தன்மைகளையும் புகழ்ந்திருக்கிறார்.[1]

---

1. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர்நாடு—இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு.

ம. பா. க., பக். 19—20.

அடிமை நிலைவிலகப்பட்டு அவல நிலையிருக்கும் மக்களுக்குத் தன்னம்பிக்கை கொடுப்பதே இதன் நோக்கம். சிறந்த சிந்தனையிலும் அறத்திலும் அசையாது நிற்கும் பாரத மாதாவின் உருவில் நாட்டைக் கண்டு அதன் பெருமைகளை பாரதியார் மெய்சிலிர்க்கக் கூறி வாழ்த்துகிறார்.

சிறந்து நின்ற சிந்தையோடு
தேயம் நூறு வென்றிவள்
மறந்தவிர்ந்தந் நாடர் வந்து
வாழி சொன்ன போழ்தினும்
இறந்து மாண்பு தீரமிக்க
ஏழ்மை கொண்ட போழ்தினும்
அறந்தவிர்க்கிலாது நிற்கும்
அன்னை வெற்றி கொள்கவே.

— ம. பா. க., ப. 22

இராவணனைக் கொன்ற இராமன் வில்; வேதங்கள், வதைத்த கைகள், சகுந்தலையின் பிள்ளை பரதன், அர்ச்சுனன் காண்டீபம், கர்ணனின் தானம் — இவ்வாறு வரலாற்றில் அல்லது புராணங்களில் வரும் செய்திகளை நினைவுப்படுத்தி பாரதியார் நமக்கு ஊக்கம் தருகின்றார் (பாரத மாதா, ம. பா. க. பக். 23 — 24). நாவினில் வேதமும், கையில் வாளும் உடைய பாரத மாத தீயரை ஒழித்திடு பவள் ஆவாள். அவள் யோகத்திலே நிகரற்றவள் என்றால், போகத்திலும் சிறப்புற்று விளங்கினவள் (ம. பா. க., ப. 25). இப்படி பாரத மாதாவின் சிறந்த தன்மைகளையெல்லாம் எண்ணியெண்ணி பாரதியார் பரவசமடைகிறார். இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஒரு முக்கிய தன்மையிது (1.1.2 காண்க).

1. 5. 2. 2 தற்கால நிலையின் சோகச் சித்திரம்

ஒரு காலத்தில் எல்லாத் துறைகளிலும் சிறப்புற்று புகழ் பெற்று விளங்கிய பாரதம் தற்காலத்தில் (பாரதியார் காலத்தில்) அடிமை வாழ்வு பெற்று பெரும் வீழ்ச்சியடைந்ததாகக் காட்சி அளித்தது. இதைக் கண்டு துயரமுற்ற பாரதியார் அந்நிலையின் எத்தனையோ சோகச் சித்திரங்கள் வரைந்துள்ளார்.

புன்னகையு மின்னிசையு மெங்கொளித்துப் போயினவோ,
இன்னலொடு கண்ணிருப்பாகி விட்டனவே!
ஆணெலாம் பெண்ணாய் அரிவையெலாம் விலங்காய்
மாணெலாம் பாழாகி மங்கிவிட்டதிந் நாடே.
வேதவுப நிடத மெய்நூல்களெல்லாம் போய்
பேதைக் கதைகள் பிதற்றுவரிந் நாட்டினிலே!
செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டினிலே
வந்தே தீப்பஞ்ச மரபாகி விட்டதுவே !

— ம. பா. க., ப. 7

இவ்வாறு செல்வத்தையும், சுகங்களையும் வீரத்தையும் அறிவையும் இழந்து வாழும் நாடு பரிதாபத்துக்குரியது. அதன் மக்கள் அவல நிலை எல்லையற்ற வருத்தம் கொடுப்பதாகும்.

நெஞ்சு பொறுக்கு திலையே — இந்த
நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்

என்று துயரடையும் கவிஞர் பாமர மக்களின் அஞ்சியஞ்சி வாழ்தல், மூடநம்பிக்கைகள், நோய்கள். அறிவின்மை, சாதி வேற்றுமைகள், வறுமை இவற்றையெல்லாம் கண்டு இந்தப் புண்ணிய நாட்டினிலே, இவர் பொறியற்ற விலங்குகளைப் போல் வாழ்கின்றனரே'யென்று பரிதாபப் படுகிறார் (ம பா. க., ப. 35).

வலிமையற்ற தோளினளாய், பொலிவிலா முகத்தினளாய், பொறியிழந்த விழியினளாய், ஒலியிழந்த குரலினளாய், ஒளியிழந்த மேனியளாய், கிலி பிடித்த நெஞ்சினளாய், கீழ்நிலையே வேண்டிக் கொண்டிருக்கும் பாரதத்தை பாரதி போ, போ என்று விரட்டுகிறார் என்றால் அவர் உள்ளம் எவ்வளவு துன்பப்பட்டிருக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். இந்நிலையை எடுத்துக்காட்டி அவர் நிரந்தரமாக பத்திரிகைகளிலும் எழுதிக் கொண்டிருந்தார்.

1. 5. 2. 3. விழித்தெழ ஊக்கம்

மக்கள் அவல நிலையை அனுபவித்தறிந்த உடன் அம் மக்களுக்கு விழித்தெழுந்து சுதந்திரம் பெற்று வாழ்க்கையை சிறப்புறச் செய்ய ஊக்கம் கொடுக்கிறார் பாரதியார். ஆனால் இந்த ஊக்குவித்தல் அனேகமாக நேரடியான போருக்கோ புரட்சிக்கோ தூண்டலாக அமையவில்லை. வருகின்ற பாரத மாதாவின் வாழ்த்தாகவோ (ம. பா. க., ப. 36), வருங்கால இந்தியாவைப் பற்றிய கற்பனைகளாகவோ தான் இருக்கின்றது. 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே, பள்ளு பாடுவோமே' என்றும், 'பறையருக்குமிங்கு தீயர் புலயருக்கும் விடுதலை'யென்றும் நம்பிக்கையுடன் பாடும் பாரதியார் சுதந்திரப் போருக்குத் தூண்டவில்லை. 'சுதந்திரப் பெருமை' (ம. பா. க., பக். 48-49), 'சுதந்திரப் பயிர்', 'சுதந்திர தாகம்', 'சுதந்திர தேவியின் துதி' முதலிய கவிதைகளில் சுதந்திரத்தின் பெருமையைப் பாடி அதைப் பெறுவதற்குப் பேரார்வம் காட்டப்பட்டுள்ளது.

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ — என்றும்
ஆரமுதுண்ணுதற்காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?
மண்ணிலின் பங்களை விரும்பி சுதந்திரத்தின்
மாண்பினையிழப்பாரோ?

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?

என்று பாரதியார் எழுப்பும் கேள்விகள் தூங்குவோரை எழுப்பவும், சுதந்திர உணர்ச்சியிழந்தோர்க்கு உணர்ச்சி கொடுக்கவும் சக்தியுடையவை.

இப்படி ஊக்கம் கொடுத்த பாரதியார் நேரடிப் போருக்குத் தூண்டவில்லை. மனித வாழ்க்கையின் சிறப்பினைத் தெரிந்த பாரதியார் இரத்தப் போருக்கு எதிர் என்பது அவர் ஓரிடத்தில் யதுகிரி அம்மாவிடம் சொன்னதிலிருந்து தெரிகிறது. "இரத்த வெள்ளம் பெருக்கி அதனால் சுகமடையலாம் என்பது என் எண்ணத்திற்கு நேர் விரோதம்" (யதுகிரி அம்மாள், 1954-1958, ப. 38) அச்சமில்லை அச்சமில்லை என்று மார் தட்டிக் கூறிய பாரதி என்றுமே ஆயுதப் புரட்சியைத் தூண்டியதில்லை. எதிலும் அச்சமில்லாத அவர் உயிரினத்திடம் அன்பு வைத்திருந்ததே இதற்குக் காரணம்.

1. 5. 2. 4. சுதந்திர பாரதத்தின் கற்பனை

சுதந்திர பாரதம் எவ்விதம் இருக்க வேண்டும் என்று பாரதி நினைவிலே கனவு கண்டார். பாரத மக்கள் உள்ளங்களிலே உரு வெடுத்திருந்த உன்னத வாழ்வின் கனவுகள் முழுதுமே அவர் கவிதைகளில் காணலாம். ஜாதி மதங்களைப் பாராத, எக்குலத்தின ராயினும் சமமாகக் கருதுகின்ற, ஒற்றுமைப் பட்ட, எப்பதம் வாய்த் திடுமேலும் யாவரும் பொதுவாக அனுபவிக்கும் ஒரு பாரதம் அவர் குறிக்கோள் ('வந்தே மாதரம்', ம.ப.க., ப.9). எல்லாத் தொழில்களும் வளர்ந்து, பற்பல பொருள்கள் உற்பத்தி செய்து, எட்டுத் திசைகளி லும் சென்றவை விற்று விஞ்ஞான அறிவுகளையும், காவியமும் ஓவி யமும் மற்ற எல்லாப் படைப்புத் திறன்களையும் வளர்த்து முழுச் செல்வத்துடன் நீதியிலும் அறநெறியிலும் வாழும் சமுதாயத்தை பாரதி விரும்பினார் ('பாரத தேசம்', ம.பா.க., பக். 20-22). வாழ்க் கையின் இன்பங்களும், அறநெறிகள் அத்தனையும் பொருந்திய வெற்றிகொண்ட இளைய பாரதத்தை வரவேற்க அவர் ஆவலுடன் காத்திருந்தார் ("வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்", ம.பா.க., ப.36). நாம் நிறுவ வேண்டிய சமுதாயத்தின் தன்மைகளையும் பாமர மக்களின் கனவுகளையும் பற்றி முழுமையாகத் தெரிந்திருந்த ஒரே அரசியல் தலைவர் மகாத்மா காந்தி. இவற்றை நன்கறிந்து கவிதை மூலம் தெளிவாகக் கூறிய ஒரே இந்தியக் கவிஞர் மகாகவி பாரதியார்.

1. 5. 2. 5. நாட்டுப்பற்று

இந்தப் பரந்த காட்சியும், தீவிரமான உணர்ச்சிகளும், அபார மான படைப்பாற்றலும் பாரதியாருக்குக் கொடுத்தது அவர் நிகரற்ற நாட்டுப் பற்று. பாரதியார் இந்தப் புண்ணிய பூமிமேல் எவ்வளவு பற்று வைத்திருந்தார் என்று கல்கி ஒரு நிகழ்ச்சியின்மூலம் காட்டி யிருக்கிறார். கடையம் கிராமத்தில் பாரதியார் வாழும்போது ஒருநாள்

இரயில் ஏறும்பொழுது கீழே விழுந்து விட்டார். பக்கத்திலிருந் தவர்கள் அலறியடித்து அவரைத் தூக்கிவிட முயன்றனர். ஆனால் பாரதி சொன்னாராம் "தூக்காதே, கிட்ட வராதே; ஆஹா! இந்தப் புண்ணிய பூமியிலே படுப்பதற்கு இந்தப் பாரத நாட்டின் புழுதியிலே புரள்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டாமா? எத்தனை பெரி யோர்கள், எத்தனை மகான்கள், எவ்வளவு கற்புக்கரசிகள், எவ் வளவு மகாகவிகள், கலைஞர்கள், அவதார புருஷர்கள் வாழ்ந்த தேசம் இது? இப்பேர்பட்ட தாய்நாட்டின் மண்ணில் இன்னும் கொஞ் சம் புரண்டு விட்டு வருகிறேன். எல்லாரும் எட்ட நில்லுங்கள்" என்று கூறி உண்மையிலேயே புரண்டாராம் (கல்கி, 1954, 17). இந்தச் சம்பவம் உண்மையா என்று சிலர் ஐயப்படலாம் என்று கருதி, பாரதியின் தேசபக்தி வெறியைப் பார்க்கும்போது அது நடந் திருக்கக் கூடும் என்று சொல்கிறார் கல்கி.

இந்திய நாட்டிடம் பற்று வைத்திருந்தது போல், ஒருகால் அதை விட அதிகமாகப் பாரதியார் தமிழ்நாட்டிடமும் வைத்திருந்தார் என் பதை மறக்க முடியாது. தமிழ்நாடும், தமிழ் மொழியும் அவர் உள்ளத்துக்கு இன்ப மயமானது. தமிழ்நாட்டின் பெயரே காதில் தேன்சுவை கொடுப்பது. அதன் முனிவர்களும் கவிஞர்களும் ஞானி களும் அவருக்கு ஆனந்தக் களிப்பு கொடுக்கின்றனர் ('செந்தமிழ் நாடு', ம.பா.க., பக். 40–41) (பார்க்கவும் 2).

ஒரு காலத்தில் செல்வத்திலும் கல்வியிலும் இலக்கியப் படைப்பி லும் சிறந்து நின்ற நமிழ் நாடு இவற்றையெல்லாம் இழந்திருப்பதைக் கண்டு 'விதியே, விதியே, தமிழ்ச் சாதியை, என்செய நினைத்தாய், எனக்குரையாயோ?' என்று சொல்லி வருந்துகிறார் (தமிழ்ச்சாதி, ம.பா.க., ப. 44). தமிழ் தற்பொழுது என்ன நிலையில் இருக்கிற தென்றும் அது எவ்வித மறுமலர்ச்சியை அடைய வேண்டும் என்றும் காட்டும் கவிதைகளும் கட்டுரைகளும் பல (பார்க்கவும் 1.6.1.2.).

1. 6. மறுமலர்ச்சிக் கருத்துகள்

1.6.0. பாரதியார் கற்பனை செய்த சுதந்திரம் முழு சுதந்திரம். அதாவது அது அரசியல் சுதந்திரம் மட்டுமல்லாமல், தனி மனிதனும், சமுதாயமும், நாடும், மனித இனம் முழுவதும், தம் சிறப்புத் தன்மை களையும், உள்ளாற்றல்களையும், படைப்புத் திறன்களையும், தடை யின்றி வளர்த்து மறுமலர்ச்சி அடைந்து, வாழ்க்கையை இன்ப மய மாக்க முழு வாய்ப்பு அளிக்கும் சுதந்திரம். 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்' என்றும், 'பறையருக்குமிங்கு தீயர் புலைய ருக்கும் விடுதலை' என்றும் அவர் சொல்லும்பொழுதும் அனைவருக் கும் இன்பம் தருவதும், சமதர்மத்தையும் நீதி நெறியையும் அடிப்படை யாகக் கொண்டு வளர்ச்சி அடைவதுமான ஒரு சமுதாயத்தையே கனவில் கண்டார். இந்தச் சமுதாய வளர்ச்சி நம் வாழ்க்கைத் தத்துவ மரபுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்றும் கருதினார். அதனால் அவர் கவிதை சமுதாயத்தை முழுதும்

உடைத்து வார்த்து புது உருவம் கொடுக்கும் புரட்சிக் கவிதை யாகாமல், பரம்பரை மரபுகளின் அடிப்படையிலே சமுதாயத்தைக் கட்டி உயர்த்தும் மறுமலர்ச்சிக் கவிதையாகியுள்ளது.

1. 6. 1. பழங்காலப் பெருமையைப் போற்றுதல்

மறுமலர்ச்சி இலக்கியத்தின் அடிப்படைப் பண்பு பழமையின் பெருமையை உணர்ந்து போற்றுவது. கவிதையில் இதை வீண் தற்பெருமை யென்று கருத முடியாது. ஏனென்றால் ஜவர்ஹர்லால் நேரு கூறுவது போல் (*1946: 1983; 144-45*) இந்தப் பழங்காலச் சிறப்பின் புகழ்தல் தற்பொழுது அவலநிலை அடைந்திருக்கும் சமுதாயத்துக்கு ஆறுதலும், தன்னம்பிக்கையும், ஊக்கமும் அளிக்க வல்லதாக இருக்கும். முக்கியமாக நம் நாட்டுக்கு ஒரு நீண்ட வரலாறிருந்து, அந்த வரலாறும் அதையொட்டிய இலக்கியங்களும் நம் முன்னோர் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சிறப்புற்றிருந்ததன் சான்று தரும் பொழுது அவற்றின் நினைவு தற்பெருமையுடன் ஊக்கமும் தருகின்றது. பழங்கால வரலாற்றின் இவ்வாற்றலை பாரதியார் மறுமலர்ச்சிக்கு ஊக்கம் கொடுக்க முற்றிலும் பயன்படுத்தியிருக்கிறார். பாரதியார் முன் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்த தமிழ் மக்களின் வரலாறும் இருந்தது. பழங்கால இந்தியாவின் பன்முக மேன்மை கொண்ட வரலாறும் இருந்தது. இரண்டுமே பாரதிக்கு ஊக்கம் கொடுத்தன. இது வேறு மொழிகளின் மறுமலர்ச்சி கவிஞர்கள் பெறாத — பாரதியார் மட்டும் பெற்ற ஒரு வாய்ப்பு. அன்னிய மொழிக் கவிஞர்களும் அவர் பிரதேசங்களின் இயற்கை எழிலையும், மக்கள் சாதனைகளையும், இலக்கியத் திறன்களையும் புகழ்த்தியெழுதி தம் மக்களுக்கு ஊக்கம் கொடுத்திருக்கின்றனர். ஆகிலும் இவ்வளவு நீண்டகாலப் பண்பாட்டு வரலாறு அவர்கள் முன் இருக்கவில்லை.

1. 6. 1. 1. பாரதப் பெருமை

பாரதத்தைப் பாருக்குள்ளே நல்ல நாடாகக் கண்டு அதன் இயற்கைச் செல்வங்களையும், மக்கள் சாதனைகளையும் பண்பாட்டுச் சிறப்பினையும் புகழ்ந்து பாடுகிறார் பாரதியார் (பாரத தேசம், பாரத நாடு, வந்தே மாதரம், எங்கள் நாடு, ஜய பாரத, எங்கள் தாய்' முதலிய பாடல்கள், ம. பா. கா., பக். 18-31). புற வாழ்க்கையின் சாதனைகளைத் தவிர நிலையான இன்ப வாழ்வினை தரும் சிந்தனைப் பாணியும் அவர் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது.

ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்
    உலகின்பக் கேணி என்றே — மிக
நன்று பல்வேதம் வரைந்ததை பாரத
    நாயகி தன்திருக்கை
சித்தமய மிவ்வுலகம் உறுதிநம்
    சித்தத்தில் ஓங்காவிட்டால் — துன்பம்
அத்தனையும் வெல்லாம் — என்றும்
    அன்பு சிவம் உலகத்துயர் யாவையும்
அன்பினிற் போகும் — என்றும்

உலக வாழ்வினை இன்ப மயமாக்கும் அறிவினைப் பெற்றிருந்த பாரதத்தைப் புகழ்ந்து பாரதி பாடிய பாடல்கள் நம்பிக்கையும், புத்துணர்ச்சியும் தருவனவாகும். எந்த இன்னலிலும் ஏழ்மை யிலும் பிறர் சூழ்ச் செயல்களிலும் அழிந்து போகாத அறமும், உண்மையும் ஞான நூல்களும் உடைய பாரத அன்னை வாழ்த்தப் பட்டாள்.

1. 6. 1. 2. தமிழ்நாட்டுப் பெருமை

அதே நேரத்தில் செந்தமிழ் நாட்டின் இயற்கை வளமும், சிந்தனைச் செல்வங்களும் கூட புது நம்பிக்கை தருவனவாகக் காட்சி அளித்தன. ஆதி சிவனால் பெறப்பட்டு, ஆரிய மைந்தன் அகத்தியனால் போற்றப்பட்டு, தெள்ளு தமிழ்ப் புலவர்களிலிருந்து தீஞ்சுவைக் காவியங்கள் பல பெற்று, தரணியெங்கும் புகழ்ந்திட வாழ்த்த தமிழும் கூட மீண்டும் நாம் வாழ்வோம், மீண்டும் நாம் உயர்வோம் என்ற நம்பிக்கை தருகின்றது. அந்த மொழி 'வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழவேண்டுமென்று பாரதியார் வாழ்த்துகின்றார்.

1. 6. 2. வீழ்ச்சியில் ஏக்கம்

பாரதமும் தமிழ்நாடும் இத்துணைச் செல்வமும், புகழும் பெற்றி ருந்த போதிலும் அவற்றின் தற்கால அவல நிலைமைக்கு முன் கண்ணை மூடிக்கொண்டு தற்புகழ்ச்சியில் மறந்திருக்க முடியாது. குறைகளை உணராவிடில் திருந்தும் வாய்ப்பேயில்லை. ஆகவே நாட்டின் நிலையைக் கண்டு துயரடைந்த பாரதியார் வீழ்ச்சியை மிகத் தெளிவாக விளக்கி உள்ளத்தை அதிரச் செய்தார்; உண்மை யறிந்து விழித்து எழச்செய்தார். நிலை கெட்ட மனிதரை நினைத் தாலே நெஞ்சு பொறுக்காத பாரதியார், அவர்கள் அச்சம், மூட நம்பிக்கைகள், அறிவின்மை, வறுமை, நோய், வலிமையின்மை இப்படி அவர்கள் குறைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கூறி, இத்தகைய வலிமையற்ற, பொலிவில்லாத பாரதம் போகவென்று சபித்து, ஒரு ஒளி படைத்த பாரதத்தை வரவேற்கத் தயாராக நின் றார் (பாரத ஜனங்களின் தற்கால நிலைமை, போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும் ம. பா. க., பக். 33-36).

அதே போல் தமிழினுடையவும், தற்கால நிலையைக் கண்டும் — அதைவிட ஏனையோர் அதைப் பற்றி நினைப்பதை எண்ணியும், பாரதியார், கலக்கமடைகிறார். ஆனால் நம்பிக்கையிழக்கவில்லை. சாத்திரங்கள் பல தந்து, தரணியெங்கும் புகழ்ந்திட வாழ்ந்த தமிழைப் பற்றி 'கொன்றிடல் போலொரு வார்த்தை கூறத் தகாதவன் கூறினதை'க் கண்டார் அவர், என்ன வார்த்தை அது?

புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவதில்லை — அவை
சொல்லுந்திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

— தமிழ்த்தாய், ம. பா. க., ப. 42

தற்காலத்தில் உருவெடுத்த நிலைமையும் மனப்போக்குகளையும் பாரதியார் நன்கு உணர்ந்திருந்தார் என்று தெரிகிறது. உண்மைகளை மறைத்துப் பயனில்லை. திறமை இருந்தும் தமிழுக்கு இந்நிலை நேர்ந்தது. ஆகவே தமிழன்னை சொல்லுகிறாள்,

என்றந்த பேதை உரைத்தாள் — ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் — இன்று
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

— ம. பா. க., ப. 42

பாரதியாரும் தற்புகழ்ச்சியாக பழங்கதைகள் கூறிக் கொண்டிருப்பதன் பயனின்மை எடுத்துக்காட்டி தமிழ் வளர்ச்சிக்குத் திசை காட்டினார்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணங்கச் செய்தல் வேண்டும்.

(—தமிழ், ம. பா. க., ப. 43)

1. 6. 3. ஒற்றுமையும் வளர்ச்சியும்

1.6.3.0. நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வரலாற்றின் காரணமாகவும், சமுதாய அமைப்பின் சீரிழப்பின் காரணமாகவும், நாம் ஒற்றுமை இழந்திருந்ததே, நாம் விஞ்ஞானத்திலும், பொருளாதார வளர்ச்சியிலும் பின் தங்கக் காரணமாயிற்று.

தொழிலின் அடிப்படையில் ஏற்பட்ட வர்ணாசிரமும், பிறப்பின் அடிப்படையிலாகி சிலருக்கு அதிகம் உரிமைகள் கொடுத்து மற்றவர் உரிமைகளைப் பறித்திருந்தது. வெவ்வேறு காலங்களில் எழுந்து பரவிய புத்தமும், சமணரும், இஸ்லாமும் ஒவ்வொன்றும் தனிமையில் சிறந்த கொள்கைகளைத் தந்தனவாயினும் பொதுவாகச் சமுதாயத்தில் பிளவுகளும் வேற்றுமைகளும்தான் அதிகமாயின.

அரசியலமைப்பைப் பார்த்தால் எக்காலத்திலும் இந்தியா ஓர் அரசின் கீழ் இருந்ததில்லை. ஹர்ஷவர்த்தனுக்குப் பின் வட இந்தியாவில் எந்தப் பேரரசும் வளராததால் நாடு முழுதும் சிற்றரசர்கள் தம்மில் போர் செய்து கொண்டிருந்தனர். தென்னாட்டின் நிலையும் சிறந்த தாக இருக்கவில்லை. இவ்விதம் அரசியல் அதிகாரங்களிலும், சாதி மதங்களிலும் இருந்த வேற்றுமைத் தகாத போட்டிகளிலும் பொரு ளாதார வேற்றுமைகளிலும் முடிவடைந்து எல்லாவித வளர்ச்சிகளும் குன்றியிருக்கும் நிலையில் தான் ஆங்கில அரசு நிறுவப்பட்டது. இப்படி வேற்றுமைகள் இருந்தும் இந்திய மக்கள் முழுதையும் ஒன்றாக இணைப்பதும், அவர்களுக்கு ஒரு குறிக்கோள் கொடுப்பது மானமெல்லிய பண்பாட்டொற்றுமை அடியொழுக்காய் ஒழுகிக் கொண்டிருந்தது. மொழி வேற்றுமை கூட இந்தப் பண்பாட்டொற்று மையை அழிக்க முடியவில்லை. இந்தியா முழுதும் ஆங்கில அரசு நிறுவப்பட்டு செய்தித் தொடர்பு ஏற்பட்டதும் இந்தப் பண்பாட்டு ஒற்றுமையை நன்கறிந்து வளர்க்கவும் அதன் அடிப்படையில் சமுதாய அமைப்புகளைச் சீர்படுத்தவும் முடிந்தது. ஒற்றுமைச் சக்திகளை இயக்கி சமுதாய முன்னேற்றத்துக்கு நம் கவிஞர்கள் செய்த தொண்டு மிகப் பெரிது. அதிலும் பாரதியார் கவிதைகளின் ஆற்றல் நிகரற்றது.

சாதி மதங்கள் அடிப்படையிலுள்ள வேற்றுமையை அவர் அடி யோடு மறுத்தார். சிறு பாப்பாவுக்குக் கொடுக்கும் உபதேசத்தி லிருந்த அரசியல் விடுதலை பெற்று வளர வேண்டிய சாதாரண நாட்டு மக்கள் வரைக்கும் அவர் கொடுத்த உபதேசங்களில் ஒன்று மூடநம்பிக்கையும் அநீதியும் அடிப்படையாகக் கொண்ட சாதி மத வேற்றுமைகளை அகற்றி ஒற்றுமை காண வேண்டும் என்பதே யாகும்.

சாதிகள் இல்லையடி பாப்பா! — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி — அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

— பாப்பாப் பாட்டு, ம. பா. க., ப. 169

சாதிப் பிரிவுகள் சொல்லி — அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் — அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக் கொடுமைகள் வேண்டாம் — அன்பு
தன்னில் செழித்திடும் வையம்

— முரசு, ம. பா. க., ப. 170

ஜாதி மதங்களைப் பாரோம் — உயர்
ஜன்மமித் தேசத்திலேய்தின ராயின்

வேதியராயினு மொன்றே — அன்றி
வேறுகுலத்தின ராயினும் ஒன்றே

— வந்தே மாதரம், ம. பா. க., ப. 17

இவ்வாறு எத்தனையோ பாடல்களில் நாட்டு மக்கள் ஒற்றுமையை வேண்டிப் பாடியிருப்பதைக் காண்கிறோம். இவ் வொற்றுமைக் கொள்கை வெறும் தற்காலப் பிரசாரம் மட்டுமல்லாது திடமான அடித்தளத்தின் மேல் கட்டி அமைக்கப் பட்டுள்ளது. சமுதாயவியலில் ஒற்றுமைக்கு அடிப்படையாக உள்ள தன்மைகள் அனைத்தையும் பாரதியார் கண்டிருக்கிறார்.

1.6.3.1. முதலாவதாக 'ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள் (ம. பா. க., ப. 23) என்ற பாரதியாரின் தத்துவக் கொள்கையே ஒற்றுமைக்கு அடித்தளம் இடுகிறது. 'எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன் என்றுரைத்த கண்ணப் பெருமான்' (ம, பா. க., ப. 38) சொல்லை நினைவில் வைக்கும்போது வேற்றுமைக் கருத்துக்கே இடமில்லை. வேற்றுமை எண்ணமே மூடத்தனமாகும்

தெய்வம் பலபலச் சொல்லிப் — பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலும் ஒன்றாய் — எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்

— முரசு, ம. பா. க., ப. 170

இப்படி வேற்றுமை வளர்க்கும் ஆசாரங்களையும் மூடநம்பிக்கை களையும் கண்டித்துப் பாரதி பாடும் பாடல்களை ம. பொ. சிவஞானம் பரம்பரைக் கோட்டைகளில் எறியும் அணுகுண்டுகள் என்று கருதுகிறார் (1980, 243).

1.6.3.2. ஒருபுறம் இந்த இறைக் கொள்கை அடிப்படை ஒற்று மைக்கு ஆதாரமாகயிருக்க மறுபுறம் தூய உலக நீதியும், சமுதாய நியாயமும் ஒற்றுமையை மனித வாழ்க்கையின் தேவையாகச் செய் கிறது. 'மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கத்தை இனி 'மானிடச் சமுதாயம் ஏற்றுக் கொள்ளத் தயாராகஇல்லை (பாரத சமுதாயம், ம. பா. க., ப. 37).

தம்மி சற்றி மலிவானால் — அண்ணன்
தானடிமைக் கொள்ளலாமோ?
செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி — மக்கள்
சிற்றடிமைப் படலாமோ?

— முரசு, ம. பா. க., ப. 172

என்று கேட்கும் பாரதியார் பலம் குறைந்தவனை, பலமுடையோன் தாழ்த்துவதையும், பலம் குறைந்தவன் தானாக அடிமை நிலைமையே ஏற்றுக் கொள்வதையும் அநியாயமென்று கருதுகிறார்.

1.6.3.3. அடுத்தபடியாக இயல்பான மனித உறவுகளில் கூட ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமில்லை என்று நிறுவப்படுகிறது. மனித இனமே சகோதர தன்மையுடையது. சம தன்மையுடன் அவர் வாழ்வது நல்வாழ்விற்கு வழியாகும்.

உடன்பிறந்தவர்களைப் போலே — இவ்
வுலகால் மனித ரெல்லோரும்

***

பாருக்குள்ளே சமதன்மை — தொடர்
பற்றுஞ் சகோதரத்தன்மை
யாருக்கும் தீமை செய்யாது — புவி
யெங்கும் விடுதலை செய்யும்

என்று முரசு கொட்டிச் சொல்லும் பாரதியின் சொற்கள் தமிழர்களுக்கும் இந்தியர்களுக்கும் மட்டுமல்ல, இன்று நிரந்தரம் போரிலும், பூசல்களிலும் அகப்பட்டு அமைதிக்காகத் தவித்துக் கொண்டிருக்கும் உலக மக்கள் அமைதியின் தூது வாக்கியமாக அமையத் தகுதி பெற்றதில்லை.

1.6.3.3. திடமான உயிர் நேயமும், மெய்யுணர்ச்சியும் அடிப்படையாக உள்ள ஒருமைக் கொள்கை தேசீய இயக்கத்திலும் சிறந்த உருவம் பெற்றுள்ளது. குமரி முதல் இமயம் வரையுள இடங்கள் அனைத்தும் நமதென்ற உணர்ச்சி, வேதகாலம் இன்று வரை இந்தியாவும், என்று பிறந்தவள் என்று தெரியாத தமிழ்த்தாயும் பெற்ற பேறுகள் அனைத்தும் நலம் பெற்ற பேறுகள் என்ற அபிமானம், "முப்பது கோடி முகமுடையாள் உயிர் மொய்ம்புறவொன்றுடையாள் — இவள் செப்புமொழி பதினெட்டுடையாள், எனிற் சிந்தனை ஒன்றுடையாள்' என்று நாட்டின் பன்மையிலும் ஒருமை காணும் தீவிர உணர்ச்சி இவற்றால் பாரதிக் கவிதை உண்மையாக இந்தியாவின் ஆவியின் கவிதையாக உயர்ந்துள்ளது. சுதந்திரப் போராட்டத்தின் காலத்தில் இந்த ஒற்றுமையை அனுபவித்து, தாயின் மணிக்கொடிக் கீழ் செந்தமிழ் நாட்டுப் பொருநர் முதல் பஞ்சநாதத்துப் பிறந்தோன் வரை எல்லா மொழிகளும் பேசும் எல்லா வீரர்களும் அணி திரண்டிருப்பது ஒற்றுமையுணர்ச்சியின் பிரச்சினையில் நம்மைக் கொண்டு சேர்க்கின்றது. அதுபோல பாரதியின் கற்பனையில் உதித்த,

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டி விளையாடிவரும்

காட்சி யாரையும் மெய்சிலிர்க்கச் செய்வது. இந்த ஒற்றுமை இந்திய மறுமலர்ச்சிக்கு இன்றியமையாத முக்கிய தன்மையாகும்.

1. 6. 4. பொருளாதார மறுமலர்ச்சி

பாரதி கண்ட இந்திய மறுமலர்ச்சியின் ஒரு தனிப்பாங்கு, பொருளாதார வளர்ச்சி, தொண்ணூறு விழுக்காடு மக்களும் பட்டிய லில் வாழ்ந்திருந்த காலத்தில் விடுதலை பெற்றுத் தான் என்ன பயன்? ஆகவே சுதந்திரப் போரில் ஈடுபட்ட பொழுது கூட பாரதியார் பொருளாதார வளர்ச்சிக்கும் உரிய இடம் கொடுத்தார். அவர் கண்ட பொருளாதார அமைப்பின் மூன்று தன்மைகளை இங்கு எடுத்துக் கூற வேண்டும்.

1. பொருளாதார வளர்ச்சி
2. சுயமுயற்சியால் வளர்ச்சி
3. நியாயமான பங்கீடு

நிரந்தரமான முன்னேற்றமடையும் ஒரு நல்வாழ்வுச் சமுதாயத் துக்கு இவை மூன்றும் எவ்வளவு தேவை என்பதை பொருளாதார நிபுணர்கள் அறிவர்.

1. 6. 4. 1. வளர்ச்சி

பொருளாதார வளர்ச்சிக்குத் தேவை உற்பத்தியும் வணிகமும் என்பதை பாரதியார் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதிலும் எவ்வளவு நுட்பம்.

வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறுபல பொருளும் குடைந்தெடுப்போம்

(ம. பா. க., ப. 20)

இது முதல் உற்பத்தி. இயற்கையிலிருந்தே உபயோகப் பொருள் களை எடுப்பது.

பட்டினில் ஆடையும், பஞ்சில் உடையும், ஆயுதம், நல்ல காகிதம் முதல் குடைகளும், கோணிகளும் வரை செய்வது (பாரத தேசம், ம. பா. க., ப. 21) உப உற்பத்தி அல்லது வழி உற்பத்தி. அதாவது இயற்கைப் பொருள்களுக்கு வேற்றுருவம் கொடுக்கும் உபயோகப் பொருள்கள் செய்வது.

பின் இவற்றின் வணிகம்; அதிலும் உள்நாட்டு வணிகமும் வெளிநாட்டு வணிகமும்.

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளவும் வேண்டும்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை (பலபொருள்கள்) விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வரவும்

வேண்டும்.

முத்துக்குளிப்ப தொரு தென்கடலிலே
மொய்த்துவணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து

தரவும் வேண்டும். இப்படிப் பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அடிப்படைக் கருத்துக்கள் குறிக்கப்பட்டுள்ளன.

1.6.4.2. தனி முயற்சியால் வாழ்வதும், பிறரைச் சுரண்டி வாழாமலிருப்பதும், நாட்டு மொழியில் கல்வி பெற்று தொழிற்பயிற்சி பெறுவதும், நாட்டுத் தொழில்களுக்கு ஊக்கம் கொடுப்பதும் பாரதியின் பொருளாதாரக் கொள்கைகளில் உட்பட்டிருக்கின்றன. எல்லாத் தொழில்களும் நாம் வளர்த்தால் வானவரும் உதவுவார்கள் (தொழில், ம. பா. க., பக். 177–78). பயிற்சி உழுதுண்டு வாழ்வீர், பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம்' என்றும் (முரசு) உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம்' என்றும் தொழிலின் பெருமை கூறப் படுகிறது. உள்நாட்டுத் தொழிலாளர்கள் வேலையும் அவர்கள் உறபத்தி செய்யும் பொருள்களும் அவ்வளவு சிறந்தனவாக இரா விடில் கூட அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்பது பாரதியார் கருத்து. கிராமத் தையல்காரர், அம்பட்டர் போன்றவர் களைப் பற்றியும் அவர் இக்கருத்து வைத்திருந்தார். அவர்கள் தொழில் தரமானதாக இல்லையென்று நாம் விட்டுவிட்டால் அவர்க்ள் தொழிலறிவு முன்னேற வாய்ப்பே இல்லாமல் போய் விடும் என்பது அவர் கருத்து (தராசு). இன்று உள்நாட்டுப் பொருளைத் தரம் குறைந்தவையென்று கருதி அயல்நாட்டுப் பொருள்களை விரும்புவர்களுக்கும் பெரும் தொழில்களில் உள்நாட்டு அறிவை வளர்த்துப் பயன் பெறாமல் அயல்நாட்டுக் கூட்டுடன தொழில் வளர்ப்பவர்களுக்கும் இது ஒரு எச்சரிக்கை. நம் அரசியல் தலைவர் களும் பொருளாதார நிபுணர்களும் கவனிக்க வேண்டிய உண்மை.

1.6.4.2. உற்பத்தி பெருக்குவதோடு சமநிலையில் பங்கீடு செய்வதும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைச் செயலாகும். இதை பாரதியார் எளிதான, ஆனால் தெளிவான சொற்களில் முழு ஆவேசத்துடன் சொல்லியிருக்கிறார். முப்பது கோடி மக்களும் பொது உடைமை பெற்ற சமுதாயம் அவர் கனவு கண்டது. அதில் மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வாய்ப்போ, மனப்பான்மையோ இராது. எல்லாரும் ஓர் குலத்தினராகவும், எல்லாரும் இந்நாட்டு மன்னராகவும் வாழ்வர். தனியொருவனுக்குணவிலை யெனில் ஜகத் தினை அழித்திடுவோம் என்பது பாரதியின் வெறும் பயமுறுத்துதல் அல்ல, சுய உரிமைகளைப் பற்றி உணர்ந்து வரும் மக்கள் சமுதாயத்தில் மெல்ல மெல்ல உருவெடுத்து வரும் ஒரு மனோநிலை யாகும். இதன் சாற்றுகள்தான் நாம் இன்று உலகம் முழுதும் அமைதியைக் கலைக்கும் செய்திகளில் பார்க்கின்றோம். மனித இனம் — முக்கியமாக அரசியல் வாதிகளும், பொருளாதாரத் திட்டங் களிடும் நிபுணர்களும் இதை அறிந்து செயல் புரிந்தால் உலகு வாழும், இல்லையேல் பாரதி சொன்னது போல் ஒன்றாக வீழும்.

இவ்வாறு பொருளாதார மறுமலர்ச்சியின் அடிப்படைத் தன்மை களைப் பாரதியார் கவிதைகளில் விதைகளாகக் காண்கிறோம். பாரதி கவிஞர், அவர் எழுதியது கவிதை, பொருளாதாரக் கட்டுரை அல்ல. ஆகிலும் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை இத் தனை ஆழமாகக் கண்டிருப்பது அவர் சிறப்பு.

1. 6. 5. பெண் விடுதலையும் மறுமலர்ச்சியும்

சமுதாய வளர்ச்சியைப் பற்றிய பாரதியார் கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. பெண் விடுதலையையும், பெண் உரிமைகளை யும் பற்றியவை. ''ஆணும் பெண்ணும் நிகரெனக் கருதி அவள் எல்லாவிதத்திலும் மேன்மையடைந்து சமுதாயத்தில் உரிய இடம் பெற்றால்தான் சமுதாயம் மறுமலர்ச்சி அடைய முடியும் என்று பாரதியார் கருதினார்.

அக்காலத்தில் இருந்த பிரச்சினைகளில் முக்கியமானவை பெண் கல்வி பெறாமலிருத்தல், சிறு வயதிலே மணம், ஒருவன் அனேகம் கன்னியர்களை மணம் செய்து கொள்வது, இளவயதுக் கைம் பெண்கள் கூட மறுமணமின்றி வாழ்தல் இவையும் இவற்றால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியும் சமுதாய இகழ்ச்சியுமாகும். பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்தது: பெண்கள் கல்வி பெற்றால் குடும்பத்துக்கே கெடுதல் நேருமென்று நம்பிக்கை பரவி யிருந்ததாக வில்லியம்ஆதம் அவர் சிங்கப்பூர் ரிப்போர்ட்டிலும்(1835) படித்த பெண்கள் விரைவில் விதவையாவார்கள் என்று நம்பிக்கை யிருந்தாக டபிள்யூ வார்ட் ஒரு குறிப்பிலும் சொல்லிருக்கிறார்கள். (நெமாய் சாதன் போஸ், 1978). இப்படி பல மூட நம்பிக்கைகள் காரணமாக பெண் கல்வியின்றி தன் சமுதாய உரிமைகளை இழந்ததுதான் முக்கிய பிரச்சினை. ஆகவே 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்த இயக்கங்களில் பெண் கல்விக்கு முதலிடம் கொடுக்கப் பட்டிருந்தது. 1814இல் வங்காளத்தில் சின்சுராவில் முதல் பெண் கல்வி நிலையம் சதி ருஸ்தவப்பாதிரிகளால் தொடங்கப்பட்டது. பின் நாடு முழுதும் கிருஸ்தவப் பாதிரிமார்களும், இந்து சமூகச் சீர்திருத்த இயக்கத்தினரும் பெண் பள்ளிகள் தொடங்கினர். சென்ற நூற்றாண்டுப் பிற்பகுதியில் பிறந்த இலக்கியத்திலும் பெண் கல்வி யும், பெண் வாழ்வின் சீர்திருத்தமும் இடம் பெற்றன. தமிழில் பிரதாப முதலியார் சரிதம், கமலாம்பாள் சரிதம் இதற்கு ஒரு சான்று. மற்ற எல்லா மொழிகளிலும் அக்கால இலக்கியத்தின் ஒரு முக்கியப் பொருள் பெண் விடுதலையாகவே இருந்தது.

இந்த இயக்கத்திற்குப் பெரும் ஊக்கம் கொடுத்தது பாரதியார் கவிதைகள். பெண்கள் அவலநிலையிலிருந்து விடுதலை அடைந்து எல்லாத் துறைகளிலும் சிறந்து வாழ்வார்கள் என்று அவர் கருதினார் (பெண்கள் விடுதலைக்கும்மி, புதுமைப்பெண், பெண்மை, பா. நு. கா., பக். 92-98). தவிர அவர்கள் அடிப்படைத் தன்மைகளிலும் மாறுதல் வந்து அவர்கள் அச்சம், வெட்கம் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திரும்புவ தில்லையாம்

புதுமைப்பெண், பா. நு. க., ப. 90

மணமாகிச் செல்லும் யதுகிரிக்கு அவர் கொடுத்த உபதேசம் பெண்ணுரிமைப் பற்றிய அவர் பொது கருத்தேயாம். "நீ இரண்டு விட்டிற்கும் விளக்கைப்போல் பிரகாசிக்க வேண்டும்......கேவலம் அடிமைத்தனத்துக்கு ஒத்துக்கொள்ளாதே, உனக்கு உரிமை உண்டு, புத்தி உண்டு, ஸ்வதந்தரம் உண்டு. தலை நிமிர்ந்து நட......நிமிர்ந்து உட்கார். பேசுவதை ஸ்பஷ்டமாகப் பேசு. தைரியமாகப் பேசு. இதில் கற்பு கெடுவதில்லை. மேலுக்கு வேஷம் அவசியம் இல்லை" (யதுகிரி அம்மாள், 1954. 1958, 38).

பெண்கள் சம உரிமைகளையும் அவர்களை இழிவாக நடத்தும் அநியாயத்தையும் அவர் அடிக்கடிக் கூறியிருக்கிறார். "அவர்கள் செத்த யந்திரங்கள் அல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவு மல்லர். சாதாரண ஆண் மாதிரியேதான். புறவுறுப்புக்களில் மாறுதல், ஆத்மா ஒரேமாதிரியே தான். இதனை மறந்து அவர்களைச் செக்கு மாடுகளாகப் பாவிப்போர் ஒருதிறத்தார். பஞ்சுத் தலையணை களாகக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை" (தமிழ் நாட்டின் விழிப்பு, பா. க., ப. 241).

பெண்கள் விடுதலை பெற்று உயர் வாழ்வு பெற வேண்டும் என்று மட்டுமல்ல, அவர்களால் சமுதாயமும் உயர்ச்சியடையும் என்று பாரதியார் நம்புகிறார். தமிழ்க் கல்விக்கும், கலைக்கும் அவர்களே சிறப்புக் கொடுப்பார் என்று கூறி 'தேசியக் கல்வியில் தமிழ்நாட்டுக் கிளையென ஒரு கிளை ஏற்பட வேண்டும். அதன் ஆட்சி மண்டலத்தில் பாதித் தொகைக்குக் குறையாமல் தமிழ் ஸ்திரீகள் கலந்திருக்க வேண்டும்' என்று ஒரு திட்டமே நமக்குத் தருகிறார் (பா. க , ப. 371). இவற்றை நாம் அடைந்து முழு நலன் பெறுவது எப்போது என்று தெரியவில்லை.

1. 6. 6. கல்வி மறுமலர்ச்சி

பெரும்பாலான சாதாரண மக்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்ததும், பரம்பரையை மூடநம்பிக்கையுடன் பின்பற்றியிருந்ததால் எந்தவித விஞ்ஞான வளர்ச்சியும் இல்லாமல் இருந்ததும் வாழ்க்கைக்குப் பயனளிக்கும் கல்வியொன்றை வளர்க்க முயற்சி செய்யாததுமே நம் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த காரணங்கள். ஆங்கிலக் கல்வி ஓரளவு பரந்த அறிவைக் கொடுக்கவும் சிந்தனையைத் தூண்டவும் செய்தது; மறுபுறம் சுதந்திரச் சிந்தனை யாற்றலை அழிக்கவும் செய்தது. 1900-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் எச். ஏ. நிக்சல்சன் சொன்னார்.

"நீங்கள் உங்கள் செயலில் சிந்தனையைப் புகுத்த வேண்டும் என்றும், பண்பட்ட, காட்சியுடைய மனத்தினால் காணவும் கேட்கவும் வேண்டும். அதன் பயனாக நினைவிலிருக்கும் முறைகளை, கண்ணை மூடிக்கொண்டு, சிந்தனை செய்யாமல் ஏற்றுக் கொள்ளாது அவற்றைச் சீர்திருத்தி முழுமை பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் உங்களுக்குக் கல்வி தரப் படுகிறது என்று நினைவில் வைத்துப் பாருங்கள்"[1]

அதே நேரத்தில் விவேகானந்தர் அன்னியர்கள் சிந்தனையை, அன்னியர் மொழி வாயிலாக மூளைக்குள் நுழைத்துப் பட்டம் பெறுவதால் நீங்களோ, நாடோ என்ன பயன் பெற முடியும் என்ற கேள்வியும் எழுப்பினார்.[2]

அன்னை நிவேதிதாதேவியோ இரண்டுக்கும் இடையே நின்று ஒரு சமரசம் காணும் முயற்சி செய்தார். "இந்தியா அன்னிய நாட்டு நிறுவனங்களையே பின்பற்ற முடியாது. அதே நேரத்தில் அன்னிய நாட்டுக் கொள்கைகளைத் தெரியாமல் இருக்கவும் இயலாது"[1] என்றார் அவர்.

இந்த நிலையில்தான் பாரதியார் தன் கல்விக் கொள்கைகளுக்கு உருவம் கொடுத்தார், நிவேதிதாதேவி சொன்னதுபோல் அயல் நாட்டின் அறிவு வளர்ச்சியை நாம் பெறவேண்டுமென்று கருதி பாரதியார் மற்ற மொழிகளிலிருந்து அறிவு நூல்கள் தமிழில் வர வேண்டுமென்றும், புது நூல்கள் எழுதப்பட வேண்டும் என்றும் சொன்னார் (தமிழ், மா. பா. க., ப. 43). ஆனால் அறிவு வளர்ச்சி தாய்மொழியாகத்தான் வரமுடியும் என்பதும் உறுதி (பா. க., ப. 352)

தேசீயக் கல்விக்கு இருக்க வேண்டிய பாங்குகளையும், தன்மை களையும் பற்றி பாரதியார் விரிவான ஒரு திட்டமே நமக்குத்

---

1. Remember that you have purposely been educated to put thought into your work, to see and hear with a trained and observant mind, so that you may adjust and perfect the machinery, may suggest and work out improvements and not be satisfied with the blind within kin of obedience of existing routine.

—Hon. H A. Nicholson, Madras University Convocation Address, 1900, Indian Review, April 1900. p. 202.

2. 'Getting by heart the thoughts of others in a foreign language and suffing your brain with throw and taking some University Degrees, you consider yourself educated. Is this education? What is the goal of your education?...What goodwill it do you or your country at large?

—Swami Vivekananda, Education, p. 10.

தந்துள்ளார். அதில் என்னென்ன கற்பிக்க வேண்டும், எப்படிக் கற்பிக்க வேண்டும், பொருள் வசதி எவ்வாறு செய்ய வேண்டும் என்றெல்லாம் காட்டியிருக்கிறார். குடும்பக் கல்வியே தேசக் கல்விக்கு வேர் என்று கருதி வீட்டிலேயே ஒருவருக்கொருவரும் அன்புடன் வாழ்ந்து அன்பு, பொறுமை போன்ற அடிப்படைக் குணங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். (பா. க., ப. 349). வரலாறு கணிதம், விஞ்ஞானம் போன்ற அடிப்படைப் பாடங்களைத் தவிர, மதம், தொழில், உடற்பயிற்சி, யாத்திரை, பொது அறிவு இவற்றுக்கும் கல்வியில் இடம் கொடுக்க வேண்டும். கலைச் சொற்கள் கூடிய மட்டும் தமிழிலே இருக்க வேண்டும். இல்லாத இடங்களில் வட மொழிச் சொற்களோ, ஆங்கிலச் சொற்களோ பயன்படுத்தலாம். பாடப் புத்தகங்கள் தமிழில் இல்லாவிட்டால் கூட ஆசிரியர் ஆங்கில நூல்களைப் படித்து, தமிழில் கற்பிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் தேசீய கல்வி தரும் பாடசாலைகள் அமைக்க வேண்டும், கற்கும் பிள்ளைகளிடமிருந்து அரையணாகூடச் சம்பளம் வசூலிக்கக் கூடாது, கோயில் மடம், ஊருணி முதலியன போல் இவற்றையும் கிராமத்தார் அனைவரும் பொது உடைமையாகக் கருதி நடத்தவேண்டும் என்றெல்லாம் பாரதி கூறும்பொழுது, (பா. க, பக். 363—69) அவர் தேசீயக் கல்வியைப் பற்றி எவ்வளவு ஆழமாகச் சிந்தித்திருக்கிறார் என்றும், நம் நாட்டின் உண்மையான மறு மலர்ச்சிக்கு எத்தகைய கல்வி தேவையென்றும் விளங்கும். இன்று நாட்டில் கல்வியின் தரம் தாழ்ந்து கொண்டிருக்கும்போது, கொடுக் கும் கல்வியின் வாழ்க்கைப் பயன் முழுமையாய்ப் பெறாமல் இருக் கும் பொழுது, கல்வி முறையினால் பொருளாதார வேற்றுமைகள் கூடிக் கொண்டு வரும்பொழுது, பாரதியார் கூறிய அடிப்படைக் கருத்துக்களைச் செயல் முறையில் கொண்டுவர முயற்சி செய்தால் அது நம் நாட்டிற்கு உண்மையான மறுமலர்ச்சியைத் தரும்.

1. 6. 7. இலக்கிய மறுமலர்ச்சி

இதையெல்லாம் விட பாரதியாரின் பெருமைக்குக் காரணம் அவர் தமிழுக்கும். தமிழ்க் கவிதைக்கும் புத்துயிர் கொடுத்த கவிஞர் என்பதுதான். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வளர்ந்து உறுதியான இலக்கண முறைகளும் செவ்விய நடையும் பெற்றிருந்த தமிழுக்கு இவை கைத் தளைகளும் கால் விலங்குகளும் ஆகிவிட்டன. புலவர்களாகிய கவிஞர்களின் உயர்ந்த கற்பனையுலகிலும், சமயப் புலவர்களின் மெய்யியல் சிந்தனைகளிலும் ஒதுங்கி நின்ற தமிழில் சாதாரண வாழ்க்கை நிகழ்ச்சிகளும், சாதாரண வளர்ச்சிகளும்உணர்ச் சிகளும் இடம் பெறவில்லை. அவற்றை ஏந்தி நிற்கும் ஆற்றலும் தமிழ் இழந்திருந்தது. ஒருவிதமாகத் தேங்கி நின்ற தமிழைப் புதுப்

1. Iudia cannot afford to invitate foreign institutions neither can she afford to remain ignorant of foreign ideals.

—Sister Nivedita. "Aggressive Hinduism", Indian Review, March 1905, p. 164.

பொருளும், புது வடிவமும், புதுச் சிந்தனையும், புது அனுபவங்களும் கொடுத்து, அதன் தீவிர முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் ஆற்றல் பெற்றிருந்தது. மடாதிபதிகளிடமிருந்தும், புலவர்களிடமிருந்தும் தமிழை விடுதலை செய்து, சாதாரண மக்களிடையே கவிபாடச் செய்தார் பாரதியார் என்கிறார் மா. பொ. சிவஞானம் (1980, 59).

தேசீய இயக்கமும், சமுதாயப் பிரச்சினைகளும் அவருக்குப் புதிய புதிய பொருள் கொடுத்து கொண்டிருந்தன. தனி வாழ்வின் பரந்த அனுபவங்களையும், சமுதாய வாழ்வின் பல்வேறு முகங்களையும் பிரச்சினைகளையும் அவர் கவிதைக்குப் பொருளாக ஏற்றுக் கொண்டார். சாதாரண வாழ்விலிருந்தும், தன்மனப் போக்கிலிருந்தும் தான் பெற்ற அனுபவங்களையும், உணர்ச்சிகளையும் சாதாரண மக்களுக்கே பகிர்ந்து கொடுக்க சாதாரண மொழியையும் நடையையும் பயன்படுத்தினார்.

''பாரதியார் பொது மக்கள் கவி. அவரது கவிதையில் யாப்பிலக்கண பாண்டித்தியமோ, வாக்கின் ஜாலமோ, அமுத்தமோ ஆடம்பரமோ கிடையாது. அங்கே எல்லாம் நேர்மை வெட்ட வெளிச்சம். எல்லோரும் வழங்கும் சொற்கள். அவர் கூறிய விஷயங்களிலும் அபூர்வமோ அற்புதமோ யாதொன்றுமில்லை. ஆயினும் அவரது சாதாரணப் பாட்டிலும் ஒரு கம்பீரம் உண்டு பண்ணும். ஒளியும் பளபளவென்று திகழ்கின்றன'' (ப. கோதண்டராமன். 1661, 71) இவ்வாறு ஒரு ஆய்வாளர் சொல்வதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. பாரதியார் கூறியதில் அபூர்வமோ, அற்புதமோ ஆன எது இல்லையெனினும் எல்லாம் சாதாரணம் என்று சொல்ல முடியாது.

உண்மையிலே பாரதியாரின் பொருள்கள் காக்கைச் சிறகு முதல் கண்ணப் பெருமான் வரை, தெருவிலே விளையாடும் பாப்பா முதல், ஆன்ம ஒளிதேடும் சித்தர் வரை, காற்றிலே ஆடிக் கொண்டிருக்கும் தென்னங்கீற்று முதல் தேன் சுவை தரும் செந்தமிழ் வரை தன்னையே மறக்கச் செய்யும் காதல் முழுதும் ஆகும் தேவி பராசக்தி வரை இப்படி அவர் எடுத்த விஷயங்கள் எண்ணற்றவை. அவற்றுக்கெல்லாம் தகுந்த மொழி கொடுத்தார். பொருளுக்கேற்ப சொல்லாட்சி, உணர்ச்சிகளுக்கேற்ப கவிதை நடை, சிந்தனைக்கேற்ப கம்பீரம், எல்லாவற்றிலுமே ஒரு எளிமையும், அந்த எளிமையிலே மிளிரும் வலிமையும் இதுதான் பாரதிக் கவிதை. இத்தனை விதமான பொருள்களையும். உணர்ச்சிகளையும் கையாண்ட, இத்தனை விதமான சொல் நயங்களையும் நடைகளையும் பயன்படுத்திய வேறு கவிஞர்கள் உண்டா என்று தெரியவில்லை. அக்கவிதைகளின் பொருட் செறிவையும், சொல்லழகையும் பற்றிச் சொல்ல என்னிடம் சொற்கள் இல்லை. கவிமணியின் சொற்களில்தான் சொல்ல வேண்டும். அதில் சொல்லுக்குச் சொல்லழகு ஏறும், கவி துள்ளும், மறியைப் போல் துள்ளும், அதைக்கேட்டு கல்லும் கனிந்து கனி ஆகும், கன்றும் பால் உண்ணாது நிற்கும், குயிலும் கிளியும் பாட்டில்

கூவும், மயிலும் குதித்துக் குதித்து நடனமாடும், வெயிலும் மழையும் அதில் தோன்றும், மலர்கள் விரிந்து விரிந்து மணம் வீசும், அலை மேலே அலை வந்து மோதும், அலைகள் அழகான முத்துகளை அள்ளி அள்ளிக் கொட்டும். (மலரும் மாலையும், பக்.27). அந்த முத்துகள் நிகரில்லாதவை, தற்காலத் தமிழின் சிறந்த செல்வங்களாக உலகெங்கும் எடுத்துக்காட்ட தகுதி பெற்றவை. பாட்டுக்கொரு புலவனான பாரதி நாட்டுக்கொரு செல்வம், தமிழுக்கொரு தவப் புதல்வன் என்று ஐயமின்றிக் கூறலாம், அவர் கவிதை தமிழுக்கு மறுமலர்ச்சியும், தமிழ் மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சியும் தந்தது.

இரண்டாம் நாள் சொற்பொழிவு

பாரதியாரும் மைதிலிசரண் குப்தரும்

2.0. இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் தன்மைகளையும், அதோடு இணைந்த பாரதியாரின் மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் முதல் உரையில் கண்டோம். நாட்டின் மறுமலர்ச்சிக் காலத்தில் இந்திய மொழிகள் அனைத்திலும் சுதந்திரத்திற்கும் மறுமலர்ச்சிக்கும் தூண்டலாக இருந்த கவிஞர்கள் பலர் தோன்றினர் என்றும் கூறப் பட்டது. (1.1.2). இக்கவிஞர்களுள் மிக உயர்ந்த இடங்களுக் குரியவர்களும் பல தன்மைகளில் ஒற்றுமை உடையவர்களுமான இரு கவிஞர்கள் தமிழில் பாரதியாரும், இந்தியில் மைதிலிசரண் குப்தரும். இடத்தாலும் வாழ்க்கை முறைகளிலும் ஒருவருக்கொருவர் அகன்றிருந்தபோதிலும் இருவர் கவிதைகளில் காணும் ஒற்றுமை மறுமலர்ச்சிக் காலத்திலும் சுதந்திரப் போராட்டக் காலத்திலும் இந்திய இலக்கியங்களில் உருவெடுத்து வந்த சிந்தனைப்பாணிகளின் ஒற்றுமையை ஒருவாறு நிரூபிப்பதாகும். அவரவர் சுயவாழ்வின் சூழ்நிலைகளிலும், சமுதாய நிலைகளிலும், வாழ்க்கை அனுபவங் களிலும் இருந்த வேற்றுமைகள் காரணமாக அவர்கள் கவிதைகளின் பண்புகளிலும் சில வேற்றுமைகள் இருந்தபோதிலும், அவற்றில் காணும் ஒற்றுமை இந்திய இலக்கியங்களின் ஒற்றுமைக்குச் சான்றாக இருக்கிறது.

2. 0. 1. இக்காலத்தில் மற்ற இந்திய மொழிகளிலும் மறுமலர்ச்சிக் கவிஞர்கள் தோன்றி மக்களுக்கு ஊக்கமும், நம்பிக்கையும் கொடுத்தனர் என்பது எடுத்துக்கூறத் தக்கது. வங்க மொழியில் பங்கிம் சந்திர சட்டர்ஜியும் (1838—94), ரவீந்திரநாத் டாகூரும் (1861—1941), சரச்சந்திர சட்டர்ஜியும் (1876—1938), அசாமில் லட்சுமிகாந்த பேஸ்பருவாவும் (1868—1938), ரஜனிகாந்த் பர்த லோயியும், ஒரியாவில் பக்தீர் மோகன் சேனாபதி (1843—1918). பஞ்சாபியில் பாயிவீர் சங் (1872—1957) இந்தியில் பாரதேந்து அரிச்சந்திரனும் (1850—1883), பிரேம்சந்தும் (1880—1936), ஜயசங்கர் பிரசாத்தும் (1889—1937), மைதிலிசரண் குப்தரும் (1886—1963), உர்துவில் நசீர் அஹதும் (1936—1912), முகம்மத் இக்பாலும் மிர்ச முகம்மத் ருஸ்வாவும் (1858—1931), குஜராத்தியில் நர்மதும் (1833—1886), கோவர்த்தன் ராமும் (1855—1907), மராத்தியில் ஜி. ஜி. அகர்கர் (1856—1895). விஷ்ணு சிப்குகர் (1879—1931), கேசவ சுதர், அசயுத் கொலஹத்கர் (1879—1931) முதலியோரும், தமிழில் வேதநாயகம்

பிள்ளை (1820—1889) ராஜம் அய்யர் (1872—98) மாதவையா (1874—1926), சுப்பிரமணிய பாரதி (1882—1921) இவர்களும். மலையாளத்தில் சந்துமேனனும் (1847—1899) குமாரன் ஆசானும் வள்ளத்தோளும் தெலுங்கில் வீரேசலிங்கமும் (1848—1919), அப்பாராவும், (1861—1915), கன்னடாவில் கோவிந்தப்பையும், டி. ஆர். பேந்த்ரேயும் தம் மொழிகளின் இலக்கியங்களுக்கு புத்துயிர் கொடுத்து தாமும் சிறப்பு பெற்றனர். தம் மொழிகளுக்கும் பெருமைத் தேடித் தந்தனர்.

தென்னகத்தே தமிழின் தேசியக்கவி சுப்பிரமணிய பாரதி வடநாட்டிலே இந்தியின் சிறந்த தேசியக் கவிஞர் மைதிலிசரண் குப்தர், இருவருடைய படைப்புக்களை ஒப்பிட்டு ஆராய்வதே இந்த இரண்டாவது உரையின் நோக்கம். இருவரும் இந்தியா அடிமை வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற முயற்சி செய்யும் காலத்தில் தம் கவிதைகளினால் மக்களுக்கு ஊக்கம் கொடுத்தனர். இருவரும் இந்தியப் பண்பாட்டில் பெரும் பற்றுடையவர். ஆகவே இருவருடைய கவிதைகளில் பல ஒற்றுமைகள் காணவும்.

2. 0. 2. வாழ்க்கை வரலாறு

சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசிய இயக்கங்களால் கவரப் பட்டு நாட்டின் நிலையைப் பற்றியும், மக்களின் விழிப்புக்காகவும் எழுதிய இப் பெருங்கவிஞர்கள் காவியப் பொருளிலும், காவிய நோக்கிலும் ஒற்றுமையுடையோர் ஆயினும் அவர்கள் வாழ்க்கை வரலாறு ஒன்றுக்கொன்று மிகவும் மாறுபட்டிருக்கின்றன. முக்கிய வேற்றுமை என்னவென்றால் பாரதியார் வெறும் 39 ஆண்டுகள் வாழ்ந்தார். எண்ணிலாத துன்பங்களுக்கிடையே ஒரு புயல்போல் வாழ்ந்து தேசிய இயக்கத்திற்கு ஊக்கம் கொடுப்பவராக இருந்து, தமிழுக்குப் புரட்சிகரமான வளர்ச்சி கொடுத்து அழியாக் கவிதை களின் ஒருபெரும் கருவூலத்தைத் தந்து சென்றார். ஆனால் மைதிலி சரண் குப்தர் ஏறத்தாழ 78 ஆண்டுகள் வாழ்ந்து சுதந்திரப்போட்டக் காலத்தையும் அதற்குப் பின் பல ஆண்டுகள் சுதந்திர இந்தியாவின் வாழ்க்கையையும் கண்டு, இந்நீண்ட காலத்தில் அதிகம் துன்பங்கள் அனுபவிக்காது, சுகமாக வாழ்ந்து, பல அரசாங்க வெகுமதிகளும் பெற்று இந்தியப் பண்பாட்டின் சிறந்த தன்மைகளையும், தேசிய இயக்கத்தின் பல்வேறு முகங்களையும் காட்டும் பெரும் கவிதைக் களஞ்சியத்தைத் தந்தார். இந்தப் பெரும் வேற்றுமை இருந்த போதிலும் தேசியக் கவிஞர் என்ற புகழுக்குத் தகுதிபெற்ற இரு கவிஞர்களுடையவும் அரசியல்—சமுதாயச் சூழ்நிலைகள் பலவும், அவர்கள் உணர்ச்சிகளும் பல ஒருமைகளையும் காட்டுகின்றன. இவ்வுணர்ச்சிகளிலிருந்து உருவெடுத்த அவர்கள் கவிதைகளின் ஒப்பாய்வு இந்திய அரசியல் சமுதாய இயக்கங்களின் பல தன்மை களையும். இலக்கியத்தில் அவற்றின் தாக்குதல்களையும் அறிய உதவும். அவர் வாழ்க்கை வரலாறுகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

2. 1. பாரதியார் வாழக்கை

சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி ஜில்லாவில் எட்டய புரத்தில் 1882 ஆம் ஆண்டு 11 ஆம் நாள் சின்னசாமி அய்யருக்கும், லட்சுமி அம்மாளுக்கும் தவப்புதல்வராகப் பிறந்தார். தாய் தந்தையர் அவரை அன்புடன் சுப்பையா என்று அழைத்து வந்தனர். சுப்பையா ஐந்துவயது ஆவதற்கு முன்னேயே தாயார் அவரைப் பெருந்துயரத்தி லாழ்த்தி விண்ணுலகெய்தினார். அடுத்த ஆண்டில் தந்தையார் மறுமணம் செய்து கொண்டார். சிற்றன்னை வள்ளியம்மாள் சுப்பையாவிடம் அன்பாகவேயிருந்தார்.

இளவயதில் பள்ளிப் படிப்பில் பற்று அதிகமில்லாமலும், அதிக மறதியுடனும் இருந்த சுப்பையா (செல்லம்மா பாரதி, 1944—1955, 4, 5) சிறந்த கற்பனையும் படைப்புத்திறனும் உடையவராக இருந்தார். சுயசரிதையில் பாரதியார்,

தூண்டு நூற்கணத்தோடு தனியனாய்த்
    தோழமை பிறிதின்றி வருந்தினேன்
அன்ன போழ்தினி லூற்ற கனவினை
    அந்தமிழ்ச் சொலில் எவ்வணம் சொல்லுகேன்?
சொன்ன தீங்கன வங்குத் துயிலிடைத்
    தோய்ந்தன்று, நனவிடை தோய்ந்ததால்
மென்னடைக் கனியின் சொற்கருவிழி
    மேனியெங்கும் நறுமலர் வீசிய
கன்னியென்றுறு தெய்வதமொன்றனைக்
    கண்டு காதல் வெறியிற் கலந்தனன்

(மா. பா. க., ப. 206)

என்பதிலிருந்து அவர் இளவயதில் எவ்வாறு தோழமையின்றித் தனிமையிலிருந்து உள்ளனுபவங்களைத் தீவிரமாக அனுபவிக்க வாய்ப்பு பெற்றார் என்றும், அவர் கவிதையுள்ளம் எந்நிலையில் வளர்ச்சி அவடந்ததென்றும் புலன்படும்.

அன்பெனும் பெருவெள்ளம் இழுக்குமேல்
    அதனை யாவர் பிழைத்திட வல்லதே

(மா. பா. க. ப. 206)

என்ற அடிகளில் அவர் பிற்கால வாழ்க்கைக்கும் கவிதைக்கும் திசை கொடுத்த அடிப்படை உணர்ச்சி என்னவென்பதற்கு இலக்கணம் அமைந்துள்ளது. 1893-இல் எட்டயபுரத்தில் புலவர்கள் அவையில் பாரதி பாடிய கவிதைகளைக் கேட்டு வியப்படைந்த அறிஞர்கள் வாணிதேவியின் வரம்பெற்ற அச்சிறுவனுக்கு 'பாரதி' என்ற பட்டம் கொடுத்து சிறப்பித்தனர். பின் பற்றிப் படிப்புக் காலத்திலும் அவர் படைப்பாற்றலும் இலக்கிய அறிவும், சிந்தனையும் விரைவில் வளர்ந்து வந்தது.

1897இல் பாரதியார் செல்லப்ப அய்யர் புதல்வி செல்லம்மாளை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டார். அடுத்த ஆண்டில் தந்தையார் உயிரிழந்தார். இக்காலத்திலிருந்தே பாரதியார் வாழ்வில் அநிச்சய நிலையும், துன்பங்களும் கொண்ட ஒரு காலம் தொடங்கியது.

2. 1. 2. காசிவாசம்

இந்நிலையில் பாரதியார் 1898இல் அத்தை குப்பம்மாளுடன் காசியில் சென்று அங்கே தங்கினார். காசி வாசம் அவருக்கு ஒரு அனுக்கிரகமாகவே அமைந்தது. அவர் காட்சி விரிவடையவும், சிந்தனை வளரவும் இது பெரிதும் பயன்பட்டது. அங்குக் கல்லூரியில் சேர்ந்து இந்தி, வடமொழி முதலியவையும் கற்று அலகாபாத் பல்கலைக் கழகத்தின் பிரவேச பரீட்சை முதல் வகுப்பில் தேறினார் (செல்லம்மா பாரதி, 1944—1955, 16). அக்காலத்திலேயே அவர் தன் உடைகளையும், ஆசாரங்களையும் மாற்றிக் கொண்டார். அந்தணர் ஆசாரங்களை விட்டு அன்னிய ஜாதியினரோடு சேர்ந்து உலாவுவதும், வங்காளி 'கிராப்', பெரிய மீசை, தலையில் முண்டாசு ஆகியவற்றோடு இருப்பதும் மாமன் கிருஷ்ண சிவத்துக்குப் பிடிக்கவில்லை. ஆனால் ஒரு தடவை பூசை வேளையில் பாரதியார் 'திருவெம்பாவை' பாடியதைக் கேட்டு பாரதியிடம் அதிக அன்பைச் செலுத்தத் தொடங்கினார்.

2. 1. 3. மீண்டும் தமிழகத்தில்

1902இல் அவர் மீண்டும் எட்டயபுரத்துக்கு வந்து இலக்கியத்திலும் அரசியலிலும் ஈடுபாடு கொண்டு வாழத் தொடங்கினார். சிறிது காலம் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்த பின் சென்னைக்குச் சென்று 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் உதவியாசிரியராகப் பணி புரிந்தார். ஆசிரியர் சுப்பிரமணிய அய்யரிடம் அப்போது பெற்ற பயிற்சி, அவர் பிற்காலத்தில் சிறந்த பத்திரிகை ஆசிரியராக இருந்து பல பத்திரிகைகளை நடத்த அடிகோலியது.

1905இல் வங்கப் பிரிவினையின் காலத்திலிருந்து பாரதியார் அரசியலில் ஈடுபட்டார். தீவிரவாதியாகப் பல இயக்கங்களில் பங்கு கொண்டார். தன் கருத்துக்களைத் தடையின்றி வெளியிட 'இந்தியா' என்ற பத்திரிகை தொடங்கினார். தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்பி இப்பத்திரிகை விடுதலைப் போரில் தனி இடம் பெற்றது. ந. திருமலாச்சாரி, மண்டபம் ஸ்ரீனிவாஸாச்சாரி, துரைசாமி அய்யர், வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலியோர் இக்காலத்தில் அவர் நண்பர்களாக இருந்தனர்.

2. 1. 4. காசி—காங்கிரசு, நிவேதிதாதேவி சந்திப்பு

1906ஆம் ஆண்டு காசியில் தாதாபாய் நௌரோஜி தலைமையில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் கலந்து கொண்ட

பாரதியார் புத்துயிர் பெற்றார். அங்கு உருவெடுத்த சுயராஜ்யம் என்ற சொல் அவர் ஊனில் தேசாபிமானத்தைக் செலுத்தியது (சுந்தரம், ப. மீ., 1954—1958, 14). திரும்பும்பொழுது கல்கத்தாவினருகே டம்டமில் தங்கியிருந்த சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை நிவேதிதா தேவியைச் சந்தித்து அவர் உபதேசத்திலிருந்து ஒருவித ஆன்ம ஞானமும், பரமஞான ஆனந்தமும் பெற்றார். முதலில் பாரதியார் இந்த ஆங்கில மாதிடமிருந்து அதிகமாக ஏதும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நேரில் சந்தித்ததும் உண்டான அனுபவம் சொற்களில் சொல்ல முடியாதவை. இந்தத் தீவிர அனுபவத்தின் நிலையை ரகுநாதன் (1982) விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். நிவேதிதா தேவி சொன்ன கருத்துக்களில் இரண்டு, பாரதியார் உள்ளத்தில் ஆணிவேர்போல் இறங்கின. ஒன்று தேச மக்களை அடக்கியும் சுரண்டியும் வாழும் அன்னியரை ஒடுக்கியாவது நாட்டை விடுதலை செய்யவேண்டும். அதற்காக எத்துணைத் தியாகமும் செய்ய வேண்டும். இரண்டாவது, தன் குலவொழுக்கம் காரணமாக மனைவியைத் தன்னுடன் அழைத்து வரவில்லையென்று சொன்ன பாரதியாரிடம் சற்றுக் கோபத்துடனே பெண்மையின் பெருமை யென்னவென்றும், நாட்டிற்கும் சமூகத்திற்கும் மணிவிளக்காகவும், பரம ஞானம் பெற்று முக்திநிலை பெறுவதில் துணையாகவும் இருக்கும் மகளிரைப் புறக்கணிப்பதால் சமுதாயம் எவ்வாறு பின்தங்கி விடு மென்றும் நிவேதிதா தேவி கூறினார். இவ்விரண்டையும் பாரதியார் வேதமந்திரம் போல் ஏற்றுக்கொண்டு வாழ்க்கை முழுதும் இக் கொள்கைகளைக் கடைப்பிடித்தார். திரும்பி வந்த பாரதியின் வாழ்வு நாட்டுக்கும் சமூகத்துக்கும் அர்ப்பணம் செய்யப்பட்டதாக அமைந்தது.

2. 1. 5. சூரத் காங்கிரஸ்

1907இல் பாரதியார் காங்கிரசின் சூரத் மாநாட்டில் பங்கெடுத்து திலகரையும் அன்னிய தீவிரவாதிகளையும் ஆதரித்தார், சென்னை திரும்பியும் அவர் தீவிரவாதியாக இருந்து ஒரு தீவிரக்குழு அமைத்துக் கொண்டார். ஆயினும் அவர் கவிதைகள், ஆழ்ந்த கருத்துக்களாலும் இன்சுவையாலும் வி. கிருஷ்ணசாமி அய்யர் போன்ற மிதவாதிகளைக் கூடக் கவர்ந்தது.

சென்னையில் பாரதியார் ‘ சென்னை ஜனசங்கம்’ என்ற சங்கமும் ‘பாரத பண்டார்’ என்ற பண்டகசாலையும் நிறுவினார். சுயராஜ்ய தினம் கொண்டாடத் திட்டமிட்டு, தானே தளபதியாகச் சென்று ஊர்வலம் நடத்தினார் (சுந்தரம், ப. மீ., 1954: 1958: 19).

2. 1. 6. புதுச்சேரியில்

பாரதியார் செயல்களையும் ‘இந்தியா’ என்ற பத்திரிகையில் வந்த கட்டுரைகளையும், கேலிச் சித்திரங்களையும் கண்டு கோபம் கொண்ட ஆங்கில அரசு பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீநிவாஸனைக் கைது செய்தது. பாரதி பேரிலும் வாரண்டு பிறப்

பிக்கப்பட்டது. ஆங்கில அரசு அவருக்குப் பலவித இன்னல்களை இழைத்தது. காந்தியவாதிகளைப் போல அறப் போராட்டத்தில் ஈடுபடவும் போராட்டத்தை நிறுத்தவும் விரும்பாத பாரதியார் சில நாட்கள் தலைமறைவாகி இருந்தபின் பிரெஞ்சு ஆட்சியிலிருந்த புதுச்சேரியை அடைந்தார். 'இந்தியா' என்ற இதழும் அங்கிருந்து வெளிவரத் தொடங்கியது. அரசின் மீது தீப்பொறிகள் வாரி வீசத் தொடங்கியது. இதைப் பொறுக்க முடியாதஅரசு, பிரிட்டிஷ் இந்தியாவில் பத்திரிகை வருவதை தடை செய்தது.

பாரதியாரின் புதுச்சேரி வாழ்வில் அவர் நெருங்கிய நண்பர்களாக, இருந்த வ. ரா. (வ. ராமசாமி அய்யர்) குவளைக்கண்ணன், சுந்தரேச அய்யர், வை. கிருஷ்ணசாமி செட்டியார், பொன்னுமுருகேச பிள்ளை முதலியோரும் அவருக்கு உதவிகள் செய்து கொண்டிருந்தனர். 1910-இல் ஸ்ரீ அரவிந்தரும் புதுச்சேரியில் வந்து வாழத் தொடங்கினார். முன்னேயே அவர் நடத்திய 'கர்மயோகி' பத்திரிகையால் ஊக்கம் பெற்றிருந்த பாரதிக்கு அவர் நேரடித் தொடர்பால் அதிக உற்சாகம் கிடைத்தது. பாரதியார் பாடல்களால் ஸ்ரீ அரவிந்தரும் கவரப்பட்டார்.

2. 1. 7. படைப்பின் சிகரத்தில்

புதுச்சேரியில் சிறைவாசம் போன்ற வாழ்க்கையில், அரசியலிலிருந்தும் தேசிய இயக்கத்திலிருந்தும் ஓரளவு விடுபட்டிருந்த பாரதியாரின் உணர்ச்சி அதிகம் தீவிரமாகிக் கொண்டிருந்தது. நெருக்கடியான இந்நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தபோதுதான் அவர் மிகச் சிறந்த படைப்புகளாகிய 'கண்ணன் பாட்டு', 'குயில் பாட்டு', 'பாஞ்சாலி சபதம்' ஆகியவற்றை எழுதினார். மனித சுபாவத்தின் சில அடிப்படைத் தன்மைகளையும் அரசியல் சூழ்நிலையையும் ஆழமாகக் காண்கின்றது பாஞ்சாலி சபதம். காதல், நம்பிக்கை, அவநம்பிக்கை முதலிய இயல்பான உணர்ச்சிகளின் சிக்கல்களைத் தத்துவ நோக்கில் காணும் ஒரு கற்பனைக் கதைக் கவிதைக் குயில் பாட்டு; கண்ணன் சரிதத்தைப் பல கோணங்களிலும் பற்பல பின்னணிகளிலும் கண்டு மனித உணர்ச்சிகளின் பல்வேறு உருவங்களை வரைந்து காட்டும் கவிதைகளின் தொகுப்பு கண்ணன் பாட்டு; இவற்றில் நாம் சிந்தனையாளனையும், கவிஞனையும், மனிதனையும் ஒருங்கே காண்கிறோம்.

2. 1. 8. புதுச்சேரிக்கு வெளியே

1911-இல் கலெக்டர் ஆஷ் தீவிரவாதிகளால் மணியாச்சியில் கொல்லப்பட்டார். புதுச்சேரியில் தங்கியிருந்த தேச பக்தர்கள் சந்தேகிக்கப்பட்டனர். எனினும் அரசு அவர்களைக் கைது செய்யவில்லை. ஆனால் அவர்களுக்குப் பல துன்பங்களைக் கொடுத்தது. புதுவையில் சிறைச்சாலை போன்ற வாழ்வு பாரதிக்கு வெறுத்தது. அதிகம் செயலற்று வாழ்வதை விரும்பாத பாரதியார் மீண்டும் சென்னைக்குப் புறப்பட்டார். ஆனால் புதுச்சேரிக்கு வெளியே

வந்ததும் கைது செய்யப்பட்டார். முப்பத்து நான்கு நாள் 'ரிமாண்'டில் வைத்திருந்த பின் குற்றம் ஏதும் நிரூபிக்க முடியாததால் விடுதலை செய்யப்பட்டார். பல ஆண்டுகள் கடினமான வாழ்க்கை வாழ்ந்த பாரதியாரின் உடல்நிலை குன்றத் தொடங்கியது. ஆனாலும் அவர் அரசியல் சொற்பொழிவையும் பத்திரிகைப் பணியையும் தொடர்ந்து செய்து வந்தார்.

இறுதி

மகாகவி ஒரு விபத்தில் மிகவும் சோக மயமான இறுதி கண்டார். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் யானைக்கு வழக்கம்போல் அவர் உணவு ஊட்டும்பொழுது அதனால் தாக்கப் பட்டு காயமடைந்தார். சிகிச்சையிலிருந்த பின் அவர் 1921 செப்டம்பர் மாதம் 12 ஆம் நாள் விடிவதற்கு முன் 1-30 மணிக்கு உயிர் நீத்தார். தமிழ் மக்கள் இதயத்தில் சுதந்திரத்தின் ஒளி வீசி அவர்களுக்கு உயிரும் ஊக்கமும் கொடுத்த பாரதியார் கொஞ்ச காலம் கூட வாழ்ந்திருந்தால் தமிழன்னை இன்னும் அதிக இலக்கியச் செல்வம் பெற்றிருப்பாள். ஆனால் நாற்பது ஆண்டு மட்டும் வாழ்ந்தும் அவர் இந்தியாவின் மாபெரும் கவிஞர்களில் ஒருவராக இடம் பெற்று விட்டார்.

2. 2. மைதிலிசரண் குப்தர் வாழ்க்கை

2.2. இதைப் பார்க்கின் மைதிலிசரண் குப்தர் பெரும் பாக்கியசாலி; நீண்டகால வாழ்க்கை வாழ்ந்தவர்; அதிலும்வேண்டிய சுகங்களும், பாராட்டுகளும் பெற்று நிறைவு அடைந்தவர்; இவரது வாழ்க்கையைப் பாரதியார் வாழ்க்கையோடு ஓரளவுக்குத்தான் ஒப்பிட முடியும். ஆனால் சுதந்திர இயக்கக் காலத்தில் இருவரும் அவரவர் மொழி வளர்ச்சிக்குச் செய்த தொண்டு, மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்காக எழுதிய கவிதைகளின் நோக்கம், இந்தியாவின் பண்பாட்டுக்குப் புத்துயிர் கொடுத்த ஆர்வம் ஆகியன முற்றிலும் ஒப்பாய்வுக்கு உரியன.

மைதிலிசரண் குப்தா 1886ஆம் ஆண்டு (விக்கிரம வருடம் 1943 சிராவண மாதம் சுக்ல பட்சம் திருதீயா, திங்கட்கிழமை) ஜான்சிக்கு அடுத்த சிரகாம் என்ற கிராமத்தில் பிறந்தார். அவர் முழுப்பெயர் கனகனே மிதிலாதிப நந்தினீசரண் குப்தா என்பதாகும். இவர் எழுதத் தொடங்கியபொழுது மைதிலிசரண் குப்தா என்ற பெயர் வைத்துக் கொண்டார். தந்தை பரம வைணவ பக்தராக இருந்ததால் அவர் பண்புகளைக் குப்தரும் பெற்றுக் கொண்டார்.

பாரதியைப் போல் குப்தருக்கும் படிப்பில் முதலில் மனம் செல்ல வில்லை. ஆனால் வீட்டிலிருந்த வைணவப் பண்பாடு அவரை மிகவும் பாதித்தது. ஜான்சியில் ஆங்கிலப் படிப்புக்கு அனுப்பப் பட்டார். தந்தை அதிகப் பணம் செலவு செய்தும் கல்வியில் அதிகம் முன்னேற்றம் அடையாமல் ஆறாம் படிவத்தோடு படிப்பை நிறுத்திக்

கொண்டார். பாரதி ஆங்கிலக் கல்வியைப் பயனற்றதென்று கருதியும்அதில் சிறந்த அறிவு பெற்று எழுதி வந்தார் என்பதுதான் உண்மை, ஆனால் மைதிலிசரண் ஆங்கிலத்தில் அதிகம் கல்வி பெறவில்லை.

ஒன்பதாவது வயதில் குப்தரின் திருமணம் நடந்தது. சில ஆண்டுகளிலேயே (1903) மனைவி உயிர் துறந்தாள். அதே ஆண்டில் தந்தையும் அடுத்த ஆண்டில் தாயும் உயிரிழந்தனர். துயரத்திலாழ்ந்த கவி சிந்தனையுலகில் வாழத் தொடங்கவே அவர் கவித்திறனும் வளர்ந்தது, 1904-இல் அவர் இரண்டாவது மணம் செய்து கொண்டார்.

மைதிலிசரண் ஆறு ஏழு வயதிலேயே சிறு கவிதைகள் எழுதத் தொடங்கினார். தந்தையாரும் அதை ஊக்குவித்தார். கவிதை யெழுதப் பயன்படுத்தி வந்த விரஜ பாஷையின் ஆதிக்கம் குறைந்து இப்பொழுது இந்தியென்று கூறப்படுகிற 'கடீபோலி' வளரத் தொடங்கியிருந்த காலம் அது. குப்தரும் முதலில் 'விரஜ பாஷை'யில் தான் கவிதை எழுதினார். பின்பு காலத்தின் தேவைகளைத் தெரிந்து இந்தியில் எழுதத் தொடங்கினார். பாரதியாருக்குச் 'சுதேசமித்திரன்' உதவியதுபோல் மைதிலிசரண் வளர்ச்சியில் மகாவீர் பிரசாத் வேதி ஆசிரியராகயிருந்த 'சரசுவதி' என்ற மாதப் பத்திரிகை உதவியது. தற்கால இந்தியினுடையவும், அரசியல் சமுதாயச் சிந்தனைகள் வளர்ச்சியிலும் துவேதிக்கும் 'சரசுவதி'க்கும் உள்ள பங்கு நிகரில்லாதது.

'சரசுவதி'யிலும், பாரதமித்திரன், ராகவேந்திரன், பாடலிபுத்திரம், மோசினி எனும் பத்திரிகைகளிலும் 1905க்கும் 1910க்கும் இடையே இவரது நூற்றுக்கணக்கான கவிதைகள் வெளிவந்தன. 1909-இல் இந்தியன் பிரஸ், அலகாபாத், வெளியிட்ட 'கவிதா கலாப்' என்ற தொகுப்பில் 46 கவிதைகளில் 28 மைதிலிசரண் எழுதியவை. 1910இல் ஒரு ராஜபுரத்திர வரலாற்றுக் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுதிய 'ரங்க மே பங்க' (குதூகலத்தில் குழப்பம்) என்ற காவியமும் 1811-இல் 'ஜயத்திரவதம்' என்ற புராணகாவியமும் வெளிவந்ததோடு அவர் புகழ் எங்கும் பரவியது. இதே ஆண்டில் ஜார்ஜ் ஐந்தாம் மன்னர் முடிசூட்டு விழா நடந்தபொழுது 'தர்மராஜ்யாபிஷேகம் என்ற கவிதை (பூனாவிலிருந்து வெளியான 'இந்தி சித்திர வாரப் பத்திரிகை'யின் நவம்பர் பதிப்பில் வெளிவந்தது) எழுதி அவருக்கு வாழ்த்துக் கூறினார். ஆங்கில ஆட்சியின் நன்மைகளைப் புகழும் இக்கவிதை வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறி பாரதியார் எழுதிய கவிதையை நினைவு படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

2. 2. 2. பாரத பாரதி

1912-இல் எழுதி 1914-இல் வெளிவந்த 'பாரத பாரதி' என்ற கவிதை நூல்தான் மைதிலிசரண் குப்தரை 'தேசிய கவி' என்ற இடத்துக்குத் தகுதியுடையவர் ஆக்கியது. ஒழுங்கும் சக்தியும் வாய்ந்த

'அரிதீதிகா' யாப்பில் எழுதப்பட்டிருக்கும் இக்காவியத்தின் முதல் பகுதியில் இந்தியாவின் பண்டைக்காலப் பெருமையைப் புகழ்ந்தும் இரண்டாவது பகுதியில், அடிமை வாழ்வு வாழும் இந்தியாவின் நிலையை எடுத்துக் காட்டியும் எழுதியிருக்கிறார். மூன்றாவது பகுதியில் நாம் கனவு காணும் வருங்கால சுதந்திர பாரதத்தின் கூறுகளையும் கூறி அதற்காகப் பாடுபட ஊக்கம் கொடுத்திருக்கிறார். வைஸ்ராய் ஹார்டிஞ்சு பிரபு மீது குண்டு வீசப்படவும், திலகர் மண்டலேச் சிறையில் அடைக்கப்படவும் செய்ததால் தேசிய உணர்ச்சி உச்சநிலை அடைந்திருந்த காலத்தில் 'பாரத பாரதி' தேச பக்தர் உள்ளங்களைக் கொந்தளிக்கச் செய்தது, அரசு தடை விதித்த போதிலும் ஒவ்வொரு இளைஞரும் இதன் ஒரு பிரதியை வைத்துக்கொண்டு பாரதத் தாய்க்கு விடுதலை கொடுக்கப் போராடியதாகக் கூறப்படுகிறது.

'பாரத பாரதி' வெளிவந்தபின் மைதிலிசரணரின் உடல்நிலை குன்றி 1913-இல் படுக்கையை விட்டு எழ முடியாத நிலையை அடைந்தார், சில மாதங்களில் உடல்நிலை தேறியபோதிலும் துன்பங்கள் குறையவில்லை. 1914-இல் முதல் மனைவியின் ஒரு புதல்வியும், இரண்டாவது மனைவியின் இரு குழந்தைகளும் இறந்து விட்டனர். பின் சில மாதங்கள் நோய்வாய்ப்பட்டு இரண்டாவது மனைவியும் உயிரிழந்தார். இதே காலத்தில் 'சரசுவதி'யுடனும் அது நடத்தியிருந்த இந்தியா பிரஸ் உடனும் அவர் தொடர்பும் அற்று பின் அவர் தன் கிராமத்தில் தங்கி கவிதை நூல்கள் வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

2. 2. 3. பிற நூல்கள்

பெருமளவில் அவர் நூல்கள் வெளிவந்தன. இவற்றில் பெரும்பாலானவை இந்து புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதியவையாகும். 'குருகுலம்', 'பத சங்காரம்', 'சைரந்திரி', 'நகுஷ்' போன்ற சிறு காப்பியங்களும் 'சாசேத்', 'ஜயபாரதம்' ஆகிய பெருங்காப்பியங்களும் அவருக்கு இந்தியப் பண்பாட்டின் தலைக் கவிஞர் என்ற புகழை ஈட்டிக் கொடுத்தது. பாரதியார் அன்னிய சமயங்களைத் தழுவி எழுதியதுபோல் குப்தரும் புத்த சமயக் கதைகளையொட்டி 'யசோதரா'[1], 'அனக்' என்ற காவியங்களும் சீக்கியத்தையொட்டி 'குருதேக் பகதூர்' என்ற காவியமும், இஸ்லாமிய சமயக் கதையை எடுத்து 'காபாவும் கர்பலாவும்' என்ற காவியமும் இயற்றியுள்ளார். 'ஹிந்து' காவியம் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக எழுதப்பட்டது. 'கிஸன்' (விவசாயி) பாரதியாரின் 'பிஜி தீவினிலே' போல் இந்தியாவிலிருந்து குத்தகை அடிமைகளாக வெளியே சென்று துயரப்படுவோரின் சோகம் நிறைந்த காவியம். ஊர்மிளாவைக் கதைத் தலைவியாகக் கொண்டு ராமாயணக் கதையின் அடிப்படையில் எழுதப்பட்ட 'சாதேதம்'தான் அவரது மிகச் சிறந்த காவியம். அது அவருக்கு அழியாப் புகழைத் தேடிக் கொடுத்தது.

2. 2. 4. நிறைவு பெற்ற வாழ்க்கை

குப்தர் எழுதத் தொடங்கிய காலத்திலேயே மக்கள் அவரைத் தேசிய கவி என்று போற்றத் தொடங்கியிருந்தனர். சுதந்திரம் பெற்ற பின் இந்திய அரசு அவரை லோக்சபாவின் உறுப்பினராக்கிச் சிறப்பித்தது; 1952 முதல் 64 வரை அவர் உறுப்பினராக இருந்தார்.

வெகுமதிகளும், பரிசுகளும் தேடிவரும் அதிருஷ்டம் அவருக்குக் கிடைத்தது. இந்துஸ்தானி அகாதமி, சாகித்திய சம்மேளனம் இவற்றின் பரிசுகளும், சாகித்திய சம்மேளனத்தின் 'சாகித்திய வாசஸ்பதி' (1946) ஆக்ரா பல்கலைக் கழகத்தின் 'டி. லிட்.' (1948), இந்திய அரசின் 'பத்மபூஷண்' (1954) என்ற வெகுமதிகளும் அவர் பெற்றார்; இவ்விதம் நிறைவு பெற்ற வாழ்க்கை வாழ்ந்த மைதிலி சரண் குப்தர் 1964 டிசம்பர் 12ஆம் நாள் நோயினால் இறந்தார்.

2. 3. பாரதியும் குப்தரும்

சுப்பிரமணிய பாரதியும் மைதிலிசரண் குப்தரும் வாழ்ந்திருந்த சூழ்நிலைகளிலும் அவர் தனிப் பண்புகளிலும் சில வேற்றுமைகள் உள்ளன என்பதும், அவற்றின் தாக்குதல்களால் அவர்கள் கவிதையின் பாங்குகளும் சற்று மாறுபட்டிருந்தன என்பதும் இயல்பு. ஆனாலும் தற்கால இந்திய அரசியல்—சமுதாய வாழ்வின் அடியொழுக்குகளையும், அவற்றுக்கு திசை கொடுத்த சக்திகளை யும், தற்கால இந்தியக் கவிதையின் உயிர்த்துடிப்புகளையும் இருவர் கவிதைகளிலும் காண முடியும் என்பதும் எடுத்துச் சொல்லத்தக்கது.

2. 3. 1. சூழ்நிலைகள்

பாரதியார் அரசியல் உலகில் நேரடித் தொடர்பு கொண்டும் ஈடு பாடு வைத்தும் பல விபத்துக்களையும் சகித்து வாழந்தார். ஆனால் மைதிலீசரண் குப்தருக்கு அரசியலில் அவ்வளவு நேரடித் தொடர்பு இருக்கவில்லை.

2. வட இந்தியாவில் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தீவிரமாகப் பரவியிருந்ததால் அதன் பாதிப்புகள் குப்தரின் கவிதைகளிலும் அதிகமாக இருந்தது. பாரதியார் அதிகம் பரந்த சூழ்நிலைகளில் வாழ்ந்து தன் நோக்குக்கும், சிந்தனைக்கும் அதிகப் பரப்பு கொடுத் தார்.

3. பாரதிக்கு முன் முழுவளர்ச்சி பெற்ற செழித்து வளர்ந்த தமிழ் மொழி இருந்தது; மைதிலீசரண் குப்தருக்கு முன் அத்தகைய மொழி வளம் இல்லை. எனவே, புது உருவத்திலுள்ள ஒரு மொழிக்கு உருவம் கொடுத்து, அதைக் கவிதையின் நிலையான மொழியாக்கி நிறுவும் சுமை குப்தருக்கு இருந்தது. பாரதிக்கிருந்த பிரச்சினை நன்றாகப் பண்பாட்டு திடமாக வடிவம் பெற்றிருந்ததும், உயர்தர இலக்கியப் படைப்புக்குப் பயன்பட்டு வந்ததும் ஆனால் சாதாரண வாழ்வில் அதிகம் செல்வாக்கு பெற வாய்ப்பு இல்லாததுமான மொழி

நடைக்குப் பதிலாகத் தற்கால வாழ்வின் எல்லா முகப்புக்களையும் வலுவுடன் வெளியிடும் ஆற்றல் பெற்றதும் எல்லா நிலையிலுள்ள மக்களும் ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பும் உடைய ஒரு எளிய மொழி நடையை நிறுவிப் பரப்புவது; ஆனால் மைதிலீசரணருக்கு தன் காலத்துக்கு முன்வரை அதிகம் பிரச்சாரத்திலிருந்த ஒரு மொழியையே மாற்றி, தற்கால வாழ்க்கைக்கும், புத்துணர்ச்சியுடன் வளர்ந்து கொண்டிருக்கும் இலக்கியத்துக்கும் பண்படுமாறு, அதிகம் பண்பட்டு முதிர்ச்சி அடையாத மொழிக்கு வடிவம் கொடுத்து நிலை பெறச் செய்வது.

4. பாரதிக்கு முன் தமிழ்க் கவிதையில் சமுதாய உணர்ச்சி எந்த அளவுக்கு இருந்ததோ அதைவிடப் பன்மடங்கு மைதிலீசரண் குப்தருக்கு முன் இந்தியாவில் இருந்தது. 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே பார தேற்று அரிச்சசந்திரன் (1950–85) 'பாரத ஜனனி' (பாரதத்தாய்), பாரத துர்தசா (இந்தியாவின் அவலநிலை), 'அந்தோ நகரி' (இருள் நகரம்) போன்ற படைப்புக்கள் மூலம் இலக்கியத்தில் சமுதாய வளர்ச்சியை வளர்த்து ஒரு புது யுகத்துக்கே தொடக்கம் குறித்திருந்தார். 'பாரதேற்று மண்டலம்' என்று அவர் நண்பர் குழுவும் அநேகக் கவிதைகள், நாடகங்கள் வழியாக அரசியல், சமுதாயப் பிரச்சினைகள் பலவற்றை இலக்கியப் பொருட்கள் ஆக்கியிருந்தனர். இந்தச் சமுதாய உணர்ச்சியை மீண்டும் வளர்ப்பதும், அதிகம் அழகுடன் இலக்கிய வடிவம் கொடுப்பதும்தான் மைதிலீசரணருக்குச் செய்ய வேண்டியது. பாரதிக்கோ பாரதேந்று செய்தது போல் ஒரு யுகத்தைத் தொடங்க வும் வேண்டியிருந்து, குப்தர் செய்தது போல அதற்குத் திசை கொடுக்கவும் செய்ய வேண்டியிருந்தது.

5. இருவர் தனிவாழ்வின் அனுபவங்களும் கூட மிகவும் மாறு பட்டிருந்தன. பாரதிக்கு வாழ்வின் உண்மைகளை அறிந்து மனோ பாவங்களுக்கு உருவம் கொடுக்கும் காலத்தில் காசியில் வாழ்ந்த வாழ்க்கை அவருக்குத் தேசத்தின் நாடித் துடிப்பினை அறியவும், தன் கொள்கைகளுக்குத் திசை கொடுக்கவும் உதவியது. அரசியல் புயலில் அவர் அனுபவங்கள் அவருக்குத் தீவிரமான உள்ளாற்றலை யும் தீச்சுடரின் உஷ்ணத்தையும் கொடுத்திருந்தது. புதுச்சேரியில் ஏகாந்த வாழ்வு உள்ளுலகின் பல்வேறு பாங்குகளின் ஆராய்ச்சி செய்து மனித உறவுகள் பற்றிய கவிதைகள் இயற்றவும் உதவின.[1]

---

1. A Brief stay in Kasi during the most impressionable years of his life helped him to feel the pulse of the nation's life be wealth its outward quescence, and pointed to him the way he was to go. The rough and tumble of revolutionary politics made a fire-brand of him and a decade exile at Pondicherry enabled him to dedicate himself to the muse. They were years of extra-ordinary personal strain and equally extra-ordinary creative effort. — P. Mahadevan, 1962, 23.

6. இருவருக்கும் தீவிரமான படைப்பாற்றல் இருந்தபோதிலும் பாரதிக்கு, கவிதை அதிக இயல்பாகவும், லாகவத்துடனும் வந்த தாகத் தெரிகின்றது. மைதிலீசரண் குப்தருக்கு நிரந்தரப் பயிற்சியா லும் முயற்சியாலும்தான் கவித்திறன் வளர்ந்தது. ஆரம்ப காலக் கவிதைகளை மகாவீர் பிரசாத்துவேதா எவ்வளவோ திருத்தம் செய்து சில வேளைகளில் உருவமே தெரியாத அளவுக்கு மாற்றம் செய்து தான் 'சரசுவதி'யில் வெளியிட்டார்.

7. பாரதியாரின் கவிதைகள் அதிகம் தனித்தன்மை வாய்ந்த பாட்டுகள். பலவற்றில் முற்றிலும் புதிய கருத்துக்களும், உணர்ச்சி களும் உள்ளன. மைதிலீசரண் குப்தர் கவிதைகள் எளிய பாங்கும் புராணக் கதைகளை அடிப்படையாகவும் கொண்டவை. அவற்றைத் தற்கால வாழ்க்கைக்கேற்ப வடிவமைத்திருப்பதும், அவற்றில் ஆங்காங்கு தற்கால வாழ்வைப் பற்றிய தன் கருத்துக்களையும் தன் கொள்கைகளையும் செருகி அமைத்திருப்பதும்தான் அவர் சிறப்பு.

8. மைதிலீசரண் குப்தர் வைணவ சமயத்தில் முழுப் பற்று வைத்து அதன் ஆசாரங்களை எள்ளளவு தவறாமல் கடைப்பிடித்து வந்தார். உண்பதிலும் உடுப்பதிலும் கூட ஆசாரங்களைப் பின் பற்றியிருந்தார். ஒரு சமயம் அவர் வீட்டில் தங்கியிருந்த ஓர் உற வினருக்குச் சட்டை தைக்கப்பட்டது. அவர் புதுச்சட்டையைப் போடப் போனபொழுது மைதிலீசரண் தடுத்துச் சொன்னார். நீ ஒரு வைணவன் வீட்டில் தங்கியிருக்கிறாய். இப்படிச் சட்டை போட எப்படி அனுமதிப்போம்?" பின் அவர் சட்டையை வாங்கிச் சென்று, அடுத்த வீட்டு முற்றத்தில் நின்ற துளசிச் செடியை ஆசாரப்படி அதனால் தொட்டு விட்டுப் பிறகு உறவினருக்கு அணியக் கொடுத் தார். (ரிஷ ஜைமினி கௌசிக் பருவா, 1959, 144). இதிலிருந்து அவர் எவ்வளவு மரபுப்பற்றுடையவர் என்பது விளங்கும். இதோடு காசியில் கிருஷ்ண சிவம் வீட்டில் தங்கியிருந்த பாரதியார் வேண்டு மென்றே தன் வேடத்திலும் உடையிலும் வகுத்துக் கொண்ட மாறுதல்களையும் பார்த்தால் பாரதியின் சுதந்திர மனப்பான்மையும், ஆசாரப் பற்றின்மையும் தெளிவாகும்.

இவ்வாறு சூழ்நிலைகளிலும் தனித் தன்மைகளிலும் வேற்றுமை இருந்த போதிலும் தேசீயக் கவிஞர்கள் என்ற முறையில் அவர் களிடையேயிருந்த ஒற்றுமைகள் குறிப்பிடத்தக்கன.

2. 4. இந்தியப் பண்பாட்டின் பெருங்கவிஞர்கள்

இந்திய வரலாற்றின் ஒரு முக்கியமான நிலைத் திரிபு காலத்தில் நாட்டு மக்களின் நிலைமையையும், விருப்பங்களும் வருங் காலத்தைப் பற்றி அவர்கள் கண்ட கனவுகளையும் ஏறத்தாழ முழுமையாகக் காட்டி கால கட்டத்தில் பிரதிநிதிகளாகும் சிறப்பு இருவருக்குமுண்டு.

2. 4. 1. நாட்டுப்பற்று

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என்று தமிழ்நாட்டிலும், 'ஜனினீ ஜன்ம பூமிச் சஸ்வர்

காதபி கரீயஸீ' (தாயும் தாய் நாடும் சுவர்க்கத்தைவிடச் சிறந்தது) என்று வட நாட்டிலும் கூறப்படுகிறது. நம் கவிஞர்களும்தாய்நாட்டின் இப்பெருமையை அறிந்து அதை வானளவு புகழ்ந்திருக்கின்றனர். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியிருந்த இந்நாட்டிலே சிந்தையில் தோன்றிய ஆயிரமாயிரம் எண்ணங்களை மனதில் கொண்டு வந்தனை கூறுகிறார் பாரதியார் (வந்தே மாதரம், ம. பா. க. ப. 18) ஞானத்திலும், யோகத்திலும் போகத்திலும் ஆக்கத்திலும் அதன் சித்திகளையும் பெருமையுடன் தெரிவிக்கின்றார்.

மைதிலீசரண் குப்தரின் "பாரத பாரதி"யின் முதல் பகுதி முழுதும் பாரத நாட்டின் புகழ் பாடுவதாகும்.

பூமியில் இயற்கையின் விளையாட்டெங்கே?
எழில் மிகும் இமயமும் கங்கையும் இருப்பதெங்கே?
நாடுகள் அனைத்திலும் சிறப்புற்ற நாடும் எங்கே?
இருடிகளின் பூமியெங்கே? இங்கே தான் பாரத நாட்டிலே
தான்

இது புண்ணிய பூமி, ஆரியர் இங்கு வசிப்பவர்கள், கல்வியிலும் கலையிலும் இது சிறந்து நீங்காதிருந்து செல்வம் இங்கு செழித்திருந்தது. முனிவர்கள் உபதேசங்கள் இங்கு அமைதியான வாழ்க்கையைத் தந்தது. இப்படி நாட்டின் புகழ் பாடுவதில் மைதிலீசரண் குப்தர் சலிக்கவேயில்லை, மனதிலும் சொல்லிலும் செயலிலும் கடவுளைக் கண்டு பிரம்மானந்தம் பெற்று வாழ்ந்தனர் மக்கள். அவர்கள் தமக்காக வாழவில்லை, செயலிழந்து இருக்கவில்லை. உலக நன்மைக்காக வாழ்ந்த பாரதம் உலகுக்கே எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த பாரதம் எல்லாத் துறைகளிலேயும் அறிவு பெற்று எழுந்த பாரதம் என்றெல்லாம் புகழ்ந்து பாடுவதையும் பாரதியோடு ஒப்பிடலாம். இருவரும் தம் தாய் நாட்டினைப் புண்ணிய பூமியாகக் கருதிப் போற்றினர் (பார்க்கவும்: 1. 5, 2. 5).

2. 4. 2. ஆரியநாடு

இருவரும் இந்தியாவின் பழங்காலப் பெருமைகளை வரைந்து காட்டும்பொழுது அதை 'ஆரிய நாடு' என்றும் அதில் வசிப்பவர்கள் 'ஆரியர்கள் என்றும் கூறினர்.

ஆரிய பூமியில் தாரிரும் நர
சூரியரும் சொலும் விரியவாசகம்—வந்தே மாதரம்

(வந்தே மாதரம், மா. பா. க., ப. 18)

அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரியராவியின் வில்

(பாரதமாதா, ம. பா. க., ப. 23)

ஆரிய நாட்டினர் ஆண்மை யோடியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து திக்கோங்குக

(வாழிய செந்தமிழ், ம. பா. க., ப. 48)

ஆரிய நாட்டின் அறிவும் பெருமையும்

(தமிழ்ச்சாதி, ம. பா. க., ப. 48)

ஆரிய வாழ்வினை ஆதரிப்போனே

(சுதந்திரதாகம், ம. பா. க., ப. 50)

ஆரிய: நீயும் நின் அறம் மறந்தாயோ:

(சுதந்திர தாகம். ம. பா. க., ப. 50)

அணியணியாயவர் நிற்கும் இந்த ஆரியக் காட்சியோர் ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ?

(தாயின் மணிக்கொடி, ம. பா. க., ப. 32) என்று பாரதியாரும்,

புண்ணியபூமியிது, இங்கு வசிப்பவர் ஆரியர்[1]
தன்னலத்துக்காய் வாழாதவர் ஆரியவர்களே[1]
நற்செயல் செய் ஆரியர்கள் எத்தலைவந்தனர் இங்கே[2]

என்று மைதிலிசரண் குப்தரும் சொல்லும்பொழுது அவர்கள் 'ஆரிய'ச் சொல்லை ஓர் இனப்பெயர்ச் சொல்லாகப் பயன்படுத்தியிருக்கி றார்கள். பாரதியார் ஐயமறக் கூறுகின்றார்.

பேரிமய வெற்புமுதல் பெண்குமரி ஈறாகும்
ஆரிய நாடென்றே அறி:

(பாரததேவியின் திருத்தசாங்கம், ம. பா. க., ப. 30)

அக்காலத்தில் தென்னகத்திலோ வடஇந்தியாவிலோ இந்தக் குறுகிய இனப்பெயர் என்ற பொருளில் 'ஆரியச் சொல்' பயன் படுத்தப்படவில்லை. வேறு பல இந்தியக் கவிஞர்களும் அதைப் பரந்த பொருளில்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். பிற்காலத்து இந்திக் கவிதையில் இச்சொல் அநேகமாக வழக்கம் குறைந்து மறைந்து போயிற்று என்றே கூறவேண்டும்.

2. 4. 3. ஆன்மீகமும் அன்பும்

இந்தியாவின் தனிச்செல்வம் ஆன்மீகச் சிந்தனை அல்லது உள்ளுலக வாழ்வின் சிறப்பாகும். தொன்றுதொட்டு புலனின்பங்

---

1. यह पुण्य भूमि प्रसिद्ध है , इसके निवासी आर्य हैं ।
— भारत भारती ।

1. वे आर्य ही थे , कभी अपने लिए जीते न थे ।
— भारत भारती ।

2. सत्कार्य भूषण आर्य गण जितने यहाँ पर हैं ॥
— भारत भारती ।

களையும். புறச்செல்வங்களையும்விடச் சிறந்தது மனத்தூய்மையும், உளவாழ்வின் சீரும் என்று கருதப்பட்டு வந்தது. இரு கவிஞர்களும் இன்னும் உயர்நிலையில் இது மறைப்பொருள் ஞானமாகவும், அதனால் ஏற்படும் ஆனந்தமாகவும் தென்படும் இந்தியாவின் ஆன்மீக ஞானத்தை எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

நாம் வெளிவாழ்வின் உயர்வுக்காகச் சாகவில்லை
உள்ளுலகில் அமுதக்கடலிலே ஆழ்ந்திடுவோம்

(பாரதி, பாரதி, ப. 20)

ஜட உலகால் நமக்கென்ன, சைதன்யத்தில்
சேர்ந்திருந்தோம்

(பாரதி பாரதி, ப 20)

எனப் பல இடங்களில் குப்தர் ஆன்மீக வாழ்வைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

பாரதியாரோ—ஞானத்திலே பரமோனத்திலே பிறந்த நாடென்றும், ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள், உலகின்பக்கேணி என்ற கருத்தினை அறிந்த நாடென்றும், யோகத்திலே நிகரற்றவள் என்றும் இந்தியாவின் மறைப்பொருள் சித்திகளைப் பற்றிச் சொல்லியிருப்பது மட்டுமல்லாமல் அந்த ஞானத்தையும் ஆன்மீக உணர்ச்சியையும் பற்றியும் பல பாட்டுகள் பாடியிருக்கிறார்.

ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனும் வேதமெலாம்—என்றும்
ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே

(அறிவே தெய்வம், ம. ப. க., ப. 165)

உள்ளும் புறமுமாய் உள்ள தெலாந்தானாகும்
வெள்ள மாதன்றுண்டாமமனைத் தெய்வமென்பார்வேதியரே
காணுவன நெஞ்சிற் கருதுவன, உட்கருத்தைப்
பேணுவன யாவும் பிறப்ப தந்த வெள்ளத்தே

(பிரமவ வெள்ளம், ம. பா. க., ப. 165)

வாலில் பறக்கின்ற புள்ளெலாம் நான்
.........என்று தொடங்கி
நானெனும் பாய்யை நடத்துவோன் நான்
ஞானச்சுடர் வானில் செல்லுவோன் நான்

இப்படிப் பல பாடல்களில் மெய்யறிவின் தன்மைகள் தெளிவாகத் தென்படுகின்றன (அடுத்த உரையில் இது அதிகம் விளக்கப்படும்.)

மைதிலீசரண் குப்தருக்கும் பாரதியாருக்கும் இடையே ஓர் அடிப்படை வேற்றுமையென்னவெனில், குப்தர் ஆன்ம அனுபவத்திலும்,

மறைப்பொருள் அறிவிலும் நாம் சிறப்புப் பெற்றிருந்தோம் என்று கூறியிருக்கின்றாரே தவிர அந்த ஞானத்தின் உருவத்தைக் காட்டவில்லை. பாரதியின் கவிதையில் அந்த ஞானத்தின் நிலை விளக்கப் பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த மெய்ஞான நிலையில் பல வற்றைத் தாமே அனுபவித்ததாகக்கூடத் தோன்றுகிறது. மைதிலீ சரணர் சமய ஆசார மரபுகளைப் பின்பற்றிய ஒரு பக்தர். பாரதியார் புறத்தோற்றங்களையும், ஆசார மரபுகளையும் உதறியெறிந்து விட்டு உண்மையைத் தேடிச் சென்று, விளக்க முடியாத ஒரு தனி அனுபவம் பெற்ற ஞானி. இந்த ஞானமும் உள் அனுபவமும் இந்தியாவின் தொன்றுதொட்டு நிலைத்து வரும் பரம்பரையைச் சார்ந்தது. பாரதியார் அதற்குக் காலத்திற்கேற்ப புதுமை கொடுத்தார்.

இந்த நோக்கின் காரணம் இரு கவிஞர்களும் மனித இனத்தை ஒன்றாகக் காண்கின்றனர்.

'ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்' என்பது பாரதியார் கருத்து. குப்தரும் சொன்னார் ''மனிதர் யாவரும் உறவினர் இதுவே ஞானம் ஆதி புருஷன் சுயம்பூவாகிய தந்தையனன்' என்று (பாரத பாரதி, ப. 17).

பரம்பொருள் பற்றிய கருத்து ஆன்மீக உயர்ச்சி பெறும் வழி மட்டுமாய் இராமல், மனித இனத்தின் ஒற்றுமையை அறியவும், அது மூலம் சமூக வாழ்வில் யாவரும் நலன் பெறவும் உதவுகிறது.

2. 4. 5. பழமைப் பற்றின்மை

அடிப்படையான வாழ்க்கை நோக்கினையும், ஆன்மீகக் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்ட போதிலும் இரு கவிஞர்களும் பழமையை மூட நம்பிக்கையோடு கட்டிப்பிடித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. எவ்வளவு மரபுப் பற்றுடையவராயிருந்து மைதிலீ சரண குப்தர் பழமையே நல்லதென்று சொல்லி விரும்பலாகாது என்று பல கவிதைகளிலும் அழுத்தமாகக் கூறினார்.

பழமைதான் நல்லதென்ற எண்ணமே தவறாகும்
நிலைதான் எவ்விதமோ அவ்விதமே சரியாகும்[1]

(பாரதபாரதி, ப. 160)

பழைய அச்சிலேயே
புதிய சமுதாயம்
வார்த்திடவும் இயலாது[2]

(பூமி பாகம், ப. 21)

---

1. प्राचीन बातें ही भली हैं , यह विचार अलीक है
जैसी अवस्था हो जहाँ वैसी व्यवस्था ठीक है।

2. सदा पुराने साँचे में
नया समाज नहीं डल सकता।

ஆசார மரபுகளிலும் மூடநம்பிக்கைகளிலும் மூழ்கிக் கிடந்து முன்னேற்றம் காண மலிந்த சமுதாயத்தில் குப்தர் திரும்பத்திரும்ப இதை வற்புறுத்தினார், ''காலத்தின் நிலையைப் பார்த்து நாம் நடக்க வேண்டும், காற்று மாறி வீசினால் நாமும் மாற வேண்டும், உலகின் ஒழுக்குக்கு எதிராகப் படகு ஓட முடியாது, ஆகவே பழங் காரியங்கள் இப்பொழுது, செயல்பட முடியாது' என்பது அவர் கருத்து. வாழ்க்கையின் நெறிமுறைகளும், நம்பிக்கைகளும், கொள்கைகளும் மாறிக் கொண்டிருப்பதுதான் இயல்பு. இக்கருத்தை ஏற்காமல் வாழ்வு முன்னேற முடியாது. பாரதியாரும் இதே கருத்தைச் சொல்லுகிறார்.

காலத்திற்கேற்ற வகைகள் — அவ்வக்
காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் — எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை

—உயிர்பெற்ற தமிழர் பாட்டு,
(ம. பா. க., ப. 12)

முதுமையால் தளர்ச்சியுற்று, வளர்ச்சியிழந்து, நோய்வாய்ப் பட்டுச் சீரழிந்த சமுதாயத்தைப் புத்துயிர் கொடுத்து மாற்றவேண்டும் என்று இருவரும் கருதினர். இதற்காகப் புரட்சிகரமான திட்டங்கள் ஏதும் நம்முன் வைக்காத போதிலும் அக்காலத்தின் சிந்தனை வளர்ச்சியைப் பார்க்கும்பொழுது பாரதியும், குப்தரும் சொன்னது அவர்கள் முன்னேற்ற நோக்குக்குச் சான்று என்று கருதலாம்.

2. 4. 6. தற்கால நிலை

வீழ்ச்சி அடைந்திருந்த சமுதாயத்தைக் கண்டு துயரம் அடைந் தனர் இருவரும். 'ஒரு காலத்தில் தேன் ஒழுகியிருந்த இந்நாட்டில் கொடும் பஞ்சத்தில் ஆட்சி நடக்கின்றது. பொன்னும் நன்மணிகளும் நிறைந்திருந்த இந்நாட்டின் மக்கள் இன்று சோற்றுக்குத் தவிக்கி றார்கள்' என்று வருத்தப்பட்டார் பாரதி.

செந்தேனும் பாலும் தெவிட்டி நின்ற நாட்டினிலே
வந்தே தீப்பஞ்ச மரபாகி விட்டதுவே
பொன்னு மணியுமிகப் பொங்கிநின்ற இந்நாட்டில்
அன்ன மின்றி நானா மழிவாகனெத்தனையோ?

எனது தாய் நாட்டின் முன்னாட் பெருமையும்
இன்னாட் சிறுமையும், (ம. பா. க., ப. 7)

மைதிலிசரணரும் இவ்வீழ்ச்சியை வரைந்து காட்டுகிறார்.

தேவைக்கு மிஞ்சியும்
அன்னவும் தனவும் இருந்த விந்நாட்டில்
சுவர்ண பாரதமென உலகறிந்த விந்நாட்டில்
கொடுவறுமைதான் ஆடுகின்ற திந்நாளில்

—பாரத பாரதி, ப. 87.

உலகு முழுதும் வணிகம் செய்திருந்த நாடு இன்று அன்னியர் உதவியை நாடி நிற்கின்றது. வறுமையில் வாடிய மக்களும், அவர்கள் ஆடையில்லாத பிள்ளைகளும் தெருவெல்லாம் அலைந்து திரிகின்றனர். மரத்தடியில் வாழும் அவர்கள் குளிரிலும் மழையிலும் படும் பாடு சகிக்கவியலாது—குப்தரின் இச்சொற்கள் பாரதியாரின் 'நெஞ்சு பொறுக்குதிலையே' என்ற பாடலை நினைவு படுத்துகின்றன; வறுமையின் கொடுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள பிஜி தீவிலே கரும்புத் தோட்டத்தில் சென்று அதிகம் துன்பங்கள் அனுபவிக்கும் இந்தியரைப் பற்றி பாரதி 'பிஜி தீவிலே' என்ற கவிதை எழுதினார். இதே பொருளைக் கருவாக்கி ஒரு குடும்பத்தின் சோகக் கதையாக மைதிலிசரண் 'கிசான்' (விவசாயி) என்ற சிறு காவியம் படைத்தார்.

2. 4. 7. சமயம்

பொருளாதார நிலை மட்டுமல்ல சமய நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளாக மாறிச் சீரழிந்து விட்டதை இரு கவிஞர்களும் கண்டனர். உண்மையான சமயக் கருத்துக்களைப் புறக்கணித்து விட்டு தன்னலத்துக்காக வாழ்தல் (பா. பா., ப. 125), பெரும் சபைகளில் சமய உரைகள் ஆற்றிவிட்டு, அவற்றுக்கு மாறாக நடந்து கொள்ளும் ஆசாரியர்கள் பித்தலாட்டம் (பா. பா., பக். 180—81), கோயில்களில் பூசாரிகளும் பண்டாக்களும் செய்யும் ஏமாற்றங்கள் (பா. பா., பக்.194—96) போன்றவைகளை மைதிலிசரண் விரிவாகக் காட்டி சமுதாயத்தின் மனச்சாட்சியை எழுப்ப முயன்றிருக்கிறார். பாரத பாரதி வெளியிடப்பட்ட காலத்தில் வட இந்தியாவிலிருந்த சமூக நிலையைப் பார்த்தால் இது ஒருபெரும் சாதனை என்று தெரியும்.

பாரதியாரும், சமயமென்றும் சாத்திரமென்றும் சொல்லி மக்களை ஏமாற்றவும் பிரித்து வைக்கவும் செய்பவர்களை இனம் காட்டித் தருகின்றார்.

நால்வகைக் குலத்தார் நண்ணுமோர் சாதியில்
அறிவுத் தலைமை யாற்றிருந்தலைவர்
மற்றிவர் வகுப்பதே சாத்திரமாகும்
இவர்தாம்
உடலும் உள்ளமும் தம் வசமிலராய்
நெறிபிழைத் திகழ்வுறு நிலைமையில் வீழினும்
பெரிதிலை, பின்னும் மருந்திதற்குண்டு

—தமிழ்ச்சாதி, (ம, பா. க., ப. 46)

என்று சொல்லி சமூதாயத்தை ஏமாற்றி வாழ்பவரை எடுத்துக் காட்டியுள்ளார்.

சாத்திரங்கள் ஒன்றும் காணார் — பொய்ச்
சாத்திர பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே

கோத்திரம் ஒன்றாயிருந்தாலும் — ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்

—பாரத ஜனங்களின் தற்கால நிலைமை, (ம. பா. க., ப. 34)

என்ற பாடலில் படிப்பின்றி ஏமாந்து வாழும் பாமர மக்களின் நிலையைக் காட்டி பரிதவிக்கின்றார். மைதிலிசரண்குப்தர் இழி குலத்தோர் என்றும் தீண்டப்படாதோர் என்றும் கூறப்படும் இனத் தாருக்குச் சமுதாயம் செய்யும் கொடுமைகளை எடுத்துக்காட்டி 'அனக்' (அனகன்) என்ற ஒரு காவியமே எழுதியிருக்கின்றார், 'யாரை நம்பி இந்தச் சமுதாயம் வாழ்கின்றதோ அவர்களை இந்த அவல நிலையிலிருந்து விடுவித்துப் பாதுகாக்காவிடில், சமுதாயம் வேரோடு அழிந்து போகும்' (அனக், ப. 46) என்பது குப்தரின் முடிபு.

2. 4. 8. பெண் விடுதலை

இரு கவிஞர்களும் சமுதாய முன்னேற்றத்துக்கு இன்றியமை யாததைக் கருதி, மிகவும் ஆர்வத்துடன் வற்புறுத்திய ஒன்று பெண் விடுதலை. தமிழில் சங்ககால இலக்கியத்திலும், வடமொழியில் வேத கால இலக்கியத்திலும் ஆண்களோடு பெண்களும் சம உரிமை பெற்று இல்லறம் நடத்தும் நிலையைப் பார்க்கலாம், ஆனால் வரலாற்றுக் காரணங்கள் பலவற்றால் பெண்கள் அந்த இடத்தை இழக்க நேர்ந்தது. பொது வாழ்க்கையில் அவர்களுக்குரிய இடமும், உரிமைகளும் குறைந்தன. எத்தனையோ கட்டுப்பாடுகளுக்கு அடங்கி வீட்டிற்குள் இருக்கவும் சாதாரண கல்வி பெறக் கூட முடியாத நிலை அடையவும் நேர்ந்தது. பத்தொன்பதாம் நூற் றாண்டில் பெண் ஒரு விதத்தில் அடிமையாகவும், வெறும் போகப் பொருளாகவும் கருதப்பட்டாள். ஆங்கில அரசு சில சீர்திருத்தங்கள் செய்தபோதிலும் பெண்ணின் நிலைமையில் அடிப்படை மாற்றங்கள் ஏதும் வரவில்லை. சீர்திருத்த இயக்கங்கள் இதில் மிக்க கவனம் செலுத்தின. இதனாலும் புரட்சிகரமான மாற்றங்கள் வராதபோதிலும் பெண்ணின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும், அவள் வாழ்க்கை முன்னேற்றமடையாவிடில் சமுதாயத்தின் முன் னேற்றமும் குன்றி விடும் என்ற எண்ணமும் எழுந்தன. இந்த மாறுதலின் எதிரொலி தற்கால இந்திய மொழிகளின் இலக்கியங்களில் காணலாம். பெண் விடுதலை இயக்கத்தின் காலத்தில் மிகவும் தீவிர உணர்ச்சியோடும், ஆர்வத்தோடும் எழுதிய இரு கவிஞர்கள் பாரதியாரும் மைதிலிசரண் குப்தரும்.

முதலிலே, பெண்ணுக்கிருந்த பழங்காலப் பெருமையை இருவரும் நினைவுப்படுத்தினர்.

மதுரத்தே மொழி மங்கையர் உண்மை நேர்
மாதவப் பெரியோருடனொப் புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய
முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்

—புதுமைப்பெண், ம. பா. க., பக். 173—74

மனித இனத்தின் தாய்
இன்ப அமைதியின் தோற்றுவாய்
ஈசா. அப்பெண்ணினத்துக்கென்ன அவலநிலை!
இங்கே பிறந்தனர் கார்கிகள் எத்தனையோ
மைத்ரேயிகள் எத்தனையோ?
அந்நாட்டில் தவிக்கின்றார் கல்வியிலாப்
பெண்மணிகள் இந்நாளில்.

— பாரத பாரதி, ப. 135

இவ்வீழ்ச்சி அவர்களின் குறையால் நேர்ந்ததல்ல. மூடர்களாகிய நாமே அவர்களை வீழ்ச்சியடையச் செய்தோம் என்று ஒரே குரலில் இருவரும் கூறுகின்றனர்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் — புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் — நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்

—முரசு, ம. பா. க., ப. 170

அவர்களின் குறைதானென்ன?
குணங்களோ குன்றவில்லை
அவர் என்ன செய்வார்
நாமே கொடுத்தோம் மடமை

—பாரத பாரதி, ப. 135

மாதர்மேல் என்ன அநீதி செய்யப்படுகிறது; எவ்வளவுகொடுமை செய்யப்படுகிறது; மாடுகளைப்போல் பெண்கள் வைக்கப் படுகின்றனர் என்று பாரதியார் கருதினால், குப்தரும் நாம் விலங்குகளை விடத் தாழ்ந்த நிலையில் வைக்கிறோம் என்று கூறுகிறார்.

மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார், அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி

பெண்கள் விடுதலை கும்மி, ம. பா. கா., ப. 176

கவனின்றோம் நாம்
வளர்தும் மிருகங்களையும் பறவைகளையும்
ஆனால் பார்க்கின்றோமா
பெண்களின் அவலநிலை தனையும்?

பாரத பாரதி, ப. 138

குறிப்பிடத்தக்க ஒரு வேற்றுமை என்னவென்றால் பாரதியின் பெண்ணுக்கு இந்தப் பரம்பரை வழக்கங்களை முறியடித்துத் தன்

உரிமைகளை நிலைநாட்டும் ஆற்றலும் துணிச்சலும் வந்து விட்டது. குப்தர் பெண்களுக்கு அவ்வளவாக வரவில்லை. பாரதியார் பெண்,

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று (மா. பா. க. ப. 176)

சொல்லி சம உரிமை பெற மட்டுமல்ல, சாத்திரங்கள் பல கற்கவும், சவுகரியங்கள் பல செய்யவும், மூத்த பொய்மைகள் யாவும் அழிக்கவும், மூடக்கெடுகள் யாவும் தகர்க்கவும், உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும், நாற்றிசை நாடுகள் யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்து பாரத தேசம் ஓங்க உழைத்திடவும் முனைந்து முன்னேறுகிறாள். மைதிலிசரண் குப்தரின் பெண் அதிக உரிமை பெற்ற போதிலும் இவ்வளவு தைரியம் காட்டவில்லை. அனேகமாக அவள் ஒரு 'கிருகலட்சுமி'யாகவே பிறந்த குணங்கள் பெற்று' விளங்குகின்றாள்.

பெண்ணின் பெருமையையும் ஆற்றலையும் காட்டி பாரதியார் 'பாஞ்சாலி சபத'மும், மைதிலிசரண் குப்தர் 'சாகேதம்', 'யசோதரா' என்ற காவியங்களும் எழுதியிருக்கின்றனர். பாஞ்சாலி சபதம் ஒரு புறம் சுதந்திர ஆற்றல் உடைய பாரதத்தாயின் ஒளி மிக்க கதையானால் மறுபுறம் பெண்ணின் தனி உள்ளாற்றலின் ஆன்ம பலத்தின் கதையுமாகும். குப்தரின் 'சாகேதம்' இராமரும் சீதையும் வனவாசத்துக்குச் சென்றபொழுது அயோத்தியில் விட்டுச் செல்லப்பட்ட ஊர்மிளாவை முக்கியமாகக் கொண்டு எழுதப்பட்ட பெருங்காப்பியம் யசோதரா. புத்த பகவான் ஞானம் தேடிச் சென்றபோது அரண்மனையில் விட்டுச் சென்ற யசோதராவைப் பற்றி எழுதப்பட்ட குறுங்காவியம். தனிநிலையில் விட்டுச் செல்லப்பட்ட இப்பெண்கள் மனநிலையைக் கவிஞர்கள் புறக்கணித்திருப்பதைச் சுட்டிக்காட்டி மகாகவி ரவீந்திரநாதர் ஒரு கட்டுரை வெளியிட்டார். இதைக் கண்ட மைதிலிசரண் இக்காப்பியங்களை எழுதினார். பழம் பண்பாட்டில் காணும் சிறந்த பாங்குகளும், புதுமைப் பெண்ணின் சிறந்த தன்மைகளும் இவ்விரு காவியங்களிலும் மிளிர்ந்து காட்சியளிக்கின்றன.

சுதந்திர இயக்கமும், சமுதாயச் சீர்திருத்த இயக்கங்களும் நடந்து கொண்டிருந்த காலத்தில் நம் மகளிர் மனங்களில் மலர்ந்து வந்த உயர் எண்ணங்களும், நாம் அவர்கள் மேல் வைத்திருந்த நம்பிக்கையும் இரு கவிஞர்கள் கவிதைகளிலும் உண்மை வடிவம் பெற்றிருக்கின்றன.

2. 4. 9. கல்வி

பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் — ஏன், முழுச் சமுதாயமும் கல்வியில் பின் தங்கியிருந்தன. வர்ணாசிரமமும், ஜாதி முறைகளும்

காரணமாகப் பெரும்பாலோர் கல்வியை இழந்திருந்தனர். ஆங்கில ஆட்சியில் கீழ்குலத்தோர் என்று கருதப்படுவோர் சிலருக்கும் கல்வி பெறும் உரிமை கிடைத்தபோதிலும் பொதுவாகச் சமூகத்தில் கல்வி அதிகம் பரவவில்லை. பரவிய கல்வியும் வாத விவாதத்துக்குரியதாக இருந்தது. சிலர் ஆங்கிலக் கல்வியை நம் நாட்டின் ஒற்றுமைக்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏதுவாகக் கருதினர். ஆனால் பிற்கால விளைவுகளைப் பார்க்கும்போது, ஆங்கிலக் கல்வி ஓர் எல்லைக்கு மேல் பரவ முடியாத நிலையும், நம் அறிவு வளர்ச்சி ஓர் எல்லைக்கு மேல் உயரமுடியாத நிலையும் ஏற்பட்டது என்று உணரலாம். இவ் வுண்மையைப் பாரதியாரும், குப்தரும் முதலில் கண்டு கூறினர்.

தன் வீறினையும், சுதந்திரச் சிந்தனையையும் அறிவாற்றலையும் இழக்கச் செய்யும் கல்வியை இரு கவிஞர்களும் பலமாகக் கண்டித் திருக்கின்றனர். தான் பெற்ற கல்வியைப் பற்றிச் சொல்லும்பொழுது 'சுயசரிதை'யில் பாரதியார், தன் தந்தையர் நலம்நாடிச் செய்த போதிலும் தன்னைப் படுகுழியில் எறியவும், வெங்குகையில் வாழ வைக்கவும் செய்ய நேர்ந்ததென்று சொல்லுகிறார். பெற்ற கல்வியின் பயன்தானென்ன?

பொழுதெலா முங்கள் பாடத்தில் போக்கிறான்
மெய்யயர்ந்து விழிகுழிவெய்திட
வீறிழந் தெனதுள்ளம் நொய்தாகிட
ஐயம் விஞ்சிச் சுதந்திரம் நீங்கியென்
அறிவு வாரித் துரும்பென் றலைந்தால்
செலவு தந்தைக் கொராயிரஞ் சென்றது
தீதெனக்குப் பல்லாயிஞ் சேர்ந்தன

சுயசரிதை, மா. பா. க., ப. 211

கல்வியின் நோக்கம் அறிவையும், உள்ளாற்றல்களையும் வளர்த்து முழுமை பெறுவதாக இல்லாமல், வயிறை நிரப்புவதற்குச் சிறு வேலைகள் பெறத் தகுந்த 'யோக்கியதை' பெறுவது மட்டு மாயிற்று,

புதுக் கல்வி கற்றுப்
பெற்றதனால் பயன் தானென்ன?
வெறும் 'கிளர்க்கு' ஆகி வயிற்றை நிரப்புவதே
தலைகுனிந்து எழுதிக் கொண்டிருங்கள்
ஆபீசர் வாய்வசைச் சொற்கள் கேளுங்கள்

பாரத பாரதி. ப. 117

இதுதான் பெரும்பாலோர் நிலை. ஒரு சிலர் உயர் கல்வியும், விஞ்ஞானக் கல்வியும் பெறலாம். வெளிநாடு கூடச் சென்று கல்வி கற்று வரலாம். ஆனால் அவர்களாலும் நாடு பெற்ற நன்மையென்ன?

கல்விக்காய் சில்வேளை
சென்று வருகின்றார் மாணவர் அயல்நாட்டில்
திரும்பி வந்து தருகின்றார் சொற்பொழிவே
எத்தனையோ இளைஞர்கள்
சென்று வந்தார் அயல்நாடு
ஆகிலும் நாட்டில் தொழிலும் வணிகமும் பெற்றதென்ன
அவர்தம் சுய அறிவால்
நடக்கின்றனவா தொழிலாலைகள்?

—பாரத பாரதி, ப. 118

இது விவாதத்துக்குரிய விஷயமாக இருக்கலாம். ஆங்கிலக் கல்வியாலும், அன்னிய நாட்டில் பெற்ற அறிவினாலும்தான் நாம் இதுவரையிலும் பெற்ற முன்னேற்றம் பெற்றிருக்கிறோம் என்று கருதுபவர்தான் பலர். உண்மையே. இன்று நடக்கும் பெரிய தொழிலாலைகள் அனைத்தும் அன்னிய நாட்டுக் கூட்டுடன், அன்னிய நாட்டுக் கல்வி பெற்றுவந்த அறிஞர்கள் விஞ்ஞானிகள் உதவியாலும் நடக்கின்றன. இவ்வாறு இரவல் பணத்தாலும், இரவல் அறிவினாலும் தான் நாம் முன்னேறி வருகிறோம். நாம் சுயமாகப் பெற்ற அறிவு வளர்ச்சியென்ன? உலகின் அறிவு வளர்ச்சிக்கு நாம் கொடுத்த கொடையென்ன? சின்னஞ் சிறிய நாடுகள்கூட சுய முயற்சியாலும், சொந்த ஆராய்ச்சியாலும் உலகின் அறிவுவளர்ச்சிக்கு உதவியிருக்கும்பொழுது, நம் சாதனைகள் மிகவும் துச்சமானவை. அது மட்டுமல்ல. பிறர் உதவியின்றி நம் விஞ்ஞான அறிவை மேலும் வளர்க்க முடியாத ஒரு நிலைக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோமானால் சுயத்தன்மையற்ற கல்வி முறையே அதற்குக் காரணம் இந்த உண்மை அன்றே கண்டு கூறினர் நம் கவிஞர்கள்.

2.4.10. இவ்வாறு சுதந்திரம் பெற்று, சமுதாயத்தைச் சீர்திருத்தி அறத்தின் அடிப்படையில் உலகம் முழுதுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும் ஓர் இந்தியாவைக் கனவு கண்டனர் இரு கவிஞர்களும். அரசியல் சுதந்திரம் மட்டுமல்ல பொருளாதாரச் சுதந்திரமும், சம உரிமையும் நிலவினால்தான் சமுதாயம் முன்னேற முடியுமென்றும், அதில் அமைதி நிலவி மக்கள் இன்பமாக வாழ முடியுமென்றும் இருவரும் கருதினர்.

இன்று சமுதாயத்தில் பொருளாதார வேற்றுமைகளும், சாதிப் பூசல்களும், அகன்று விடவில்லை. ஒருவேளை இவை கூடிக் கொண்டிருக்கிறதென்றும், அதனால் பல பிரச்சினைகளும் உரு வெடுத்து வளர்ந்து கொண்டிருக்கின்றன என்றும் கூறினால் தவறாகாது. பணமும் அறிவும் இரவல் வாங்குவதில் முற்பட்டிருக்கும் நம் நாடு ஞான சுதந்திரம் எப்பொழுது பெறுமென்று கற்பனை செய்யவே முடியவில்லை. இந்நிலையில் மாபெரும் காட்சியினர் (Visionaries) எனப் போற்றுதற்குரிய இக்கவிஞர்கள் கவிதைகள் நமக்கு ஊக்கம் தந்து மீண்டுமொரு சுதந்திரமும், மீண்டுமொரு மலர்ச்சியும் தருமானால் பாரதியார் சொன்னதுபோல் நாம் எல்லாரும் வாழ்வோம். அதற்கேற்ற மனம் நாம் எல்லோரும் பெறுவோமென்று கூறி இவ்வுரையை முடிக்கிறேன்.

மூன்றாம் நாள் சொற்பொழிவு

மகாகவி பாரதியும் இந்தியச் சிந்தனையும்

3.0. நாம் இறந்த காலத்தில் சேர்த்த செல்வங்களை அனுபவித்தும் சுமைகளைத் தாங்கியும் வாழ்கின்றோம். தற்காலத்தின் இன்ப துன்பங்களில் மூழ்கி வாழ்க்கையின் சிக்கல்களிலும், முரண் பாடுகளிலும் போராடுகின்றோம். வருங்காலத்தைப் பற்றி கற்பனை செய்கின்றோம்; கனவு காண்கின்றோம். ஒரு சமுதாயத்தின் இப்படிப் பட்ட முக்கால அனுபவங்களை உட்கொண்டு தீவிரமாக அனு பவித்து கவிதையெனும் தொடர்புப் பொருள் வாயிலாக மற்றவர் களுக்கும் பகிர்ந்து கொடுக்கிறான் சிறந்த கவிஞன். வேறுசொற்களில் சொன்னால் சிறந்த கவிஞன்தான் வாழும் சமுதாயத்தின் முன்காலச் சிந்தனை வளத்தையும் ஏனைய சாதனைகளையும் தன்னோடு கலந்து கொள்கிறான். தற்கால வாழ்க்கையின் சலனங்களையும், பிரச்சினைகளையும் அனுபவித்து வாழ்கிறான். இவற்றின் ஆற்ற லினால் வருங்கால வாழ்விற்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கிறான் பரம்பரையின் வளமான மண்ணிலே திடமாக வேரூன்றி நிற்காத கவிஞன் செழித்து வளர முடியாது. தற்கால வாழ்வில் ஈடுபாடின்றி வாழும் எழுத்தாளன் அவன் காலத்திலேயே புறக்கணிக்கப்படுவான். தற்காலப் பிரச்சினைகளை மட்டும் கண்டு, மனிதனின் நிலையான உணர்ச்சிகளையும், பிரச்சினைகளையும் காணாத எழுத்தாளன் அவன் காலத்திற்குப் பின் விரைவிலே மறக்கப்படுவான். இவ்வாறு புறக்கணிக்கப்படாமல், மறக்கப்படாமல் மகாகவி பாரதியார் இருக் கிறார் என்றால் அதிலிருந்து நிரூபிக்கப்படுவது அவர் நம் பரம்பரைச் சிந்தனையின் இன்றியமையாத கன்னியாகவும் தற்காலக் கவிதை யின் நடுத்தூணாகவும் இருக்கிறார் என்பதுதான்.

பாரதியின் முன் அவர் சிந்தனைக்குத் திசையும் கவித்திறனுக்கு ஊக்கமும் தர நீண்டகாலத் தமிழ்ப் பண்பாட்டின் பரம்பரை இருந்தது. இளம் பருவத்தில் அவர் பெற்ற கல்வியும், தமிழ்மேல் அவருக்கிருந்த பற்றும் இப்பரம்பரையை நன்கறிந்து அதைத் தன் படைப்பின் அடிப்படையாக்க உதவின. குடும்பச் சூழ்நிலை வட மொழியைக் கற்கவும் வேதகாலம் முதல் வளர்ந்து வந்த இந்தியச் சிந்தனைப் பரம்பரையை அறியவும் வாய்பளித்தது. முக்கியமாக அறிவு வளர்ச்சி தீவிரமாக இருக்கும் காலத்தில் அவர் இருந்த காசி இந்தியப் பண்பாட்டின் மையமாக இருந்தது. அங்கு அவருக்கு வேத புராணங்களைப் பற்றியும் இந்து சமயத்தின் உயர்வு தாழ்வுகளைப்

பற்றியும் ஆழமாக அறிய வாய்ப்பு கிடைத்தது. மறுமலர்ச்சிக் காலத்தில் நாடு முழுதும் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியில் தமிழகத்தில் தமிழிலக்கியத்தின் மேன்மைகள் தெரிந்து தமிழ்ப் பற்றும் அதிகரித்தது. வட நாட்டில் இந்து சமயத்திற்கும் புத்துயிர் கிடைத்தது. இரண்டுக்கும் நேரடி சாட்சியாக இருந்தார் பாரதியார். இரண்டு பாரம்பரியங்களிலிருந்தும் சிந்தனை வளம் பெற அவர் தயங்க வில்லை. ஆனால் எந்தப் பரம்பரைக்கும் அவர் அடிமையாகவும் இல்லை.

காலத்திற்கேற்ற வகைகள்—அவ்வக்
காலத்துக்கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய்—எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை

என்று அவர் சொல்லும்பொழுது சிந்தனை வளர்ச்சியின் மாற்றத் தன்மை அவருக்கு தெரிந்திருந்ததென்பது புலப்படும்.

3.1. தமிழ்ப் பண்பாட்டுப் பரம்பரை

3. 1. 1. அறநெறி

இரண்டாயிரம் ஆண்டில் குறையாது வளர்ந்து வரும் தமிழ்ப் பண்பாட்டின் பற்பல காலங்களில் மனித இனத்துக்கே பயன்படும் நிலையான கருத்துகள் பல தோன்றியுள்ளன. 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று கருதும் பாரதியார், இந்தச் செல்வக் களஞ்சியத்திலிருந்து சிந்தனைச் செல்வம் பெற்றிருக்கிறார் என்பது உறுதி. பல கட்டுரைகளிலும் எடுத்துக்காட்டாகவோ விளக்கத்திற்காகவோ குறள்கள் கையாண்டிருக்கிறார். இதைத் தவிர தமிழ் இலக்கியம் முழுதும் அடியொழுக்காக இருந்து தமிழ் மக்கள் வாழ்க்கை நெறிகளைச் சீர்படுத்தவும், சமுதாய நீதியை உறுதிப்படுத்தவும் செய்யும் நீதி நெறிக் கொள்கை பாரதியார் சிந்தனையிலும் அடிப்படையாக உள்ளது. அழியாத் தன்மைபெற்ற திருவள்ளுவர், அவ்வையார், நாலடியார் போன்றோர் அறநெறிகளும், நீதி நெறிகளும் பாரதியார் கவிதைக்குத் திடமான அடித்தளமாக அமைந்துள்ளன. சுயாதீனம் பெறுவதோடு நில்லாமல் நாம் நம் வாழ்க்கையில் சில கொள்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டிய தேவை காட்டி பாரதியார் சொல்கிறார்.

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்"

என்ற முதுரைக்கு இணங்கியே நாம் நடக்கவேண்டும். இவ்வாறு நடக்க முடியாதவன் தான் பேடியென்று ஒப்புக்கொண்டு பின்னடைய வேண்டும் நானும் ஸ்வாரஸ்யக் கொள்கையுள்ளவன் என்று

முன் வந்து நிற்க வேண்டாம்" (பா. க., ப. 130). தேசியக் கவியென்றும், சுயராஜ்யத்துக்குப் போர் புரிந்த கவிஞர் என்றும் புகழ் பெற்ற பாரதியார் அந்தச் சுய ராஜ்யத்தைவிட வாழ்க்கை நெறிகளையே முக்கியமாகக் கருதினார் என்பது இதிலிருந்து விளங்குகிறது. ஔவையாருடைய அறிவுச் சுடர்களாகிற படைப்புகள் உபநிஷத்துக்குச் சமமாக போற்றப்பட வேண்டியவையென்றும், (பா. க., ப. 279) தமிழர் வேறு எதை இழந்தாலும் ஔவைப் பாட்டியின் நூல்களை இழக்கக் கூடாதென்றும் சொல்லி (பா. க., ப. 277) அவர் நான்கே அடிகளில் வாழ்க்கைக்கு அடிப்படையாகிய நான்கு புருஷார்த்தங்களை விளக்கியிருப்பதை எடுத்துக் காட்டுகிறார்.

ஈதலறம் தீதிலை விட்டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைத்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு

இவ்வெண்பாவுக்கு விளக்கம் கூறி இந்த நெறியே வாழ்வை இன்பமயமாக்குவது என்று துணிகிறார் (பா. க., ப. 280) பாரதியார். மேலும் முக்திக்கு விளக்கம் தரும் பொழுது கூடத் தமிழ் மரபுப்படி 'கடவுளை உள்ளத்திலிருத்தி தானென்ற கொள்கையை மாற்றி ஈசபோதத்தையெய்தி மேற்கூறிய மூன்று புருஷார்த்தங்களிலும் பொறுப்பு நீங்கியிருப்பதே முத்தி என்று விளக்கம் தருகிறார் (பா. க., ப. 282).

இவற்றையெல்லாம் பின்பற்ற வேண்டிய கொள்கைகளாக ஒப்புக் கொள்ளும்பொழுதும் இவை கண்மூடித் தனமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய செயல்கள் அல்ல என்பது 'கொள்கை'க்கு அவர் தரும் விளக்கத்திலிருந்து தெரியும். "ஒரு கொள்கையாவது, பகுத்தறிவின் துணையால் செய்யத்தக்கது. இது. செய்யத் தகாதது இது என்று ஒருவன் அறிந்து முன்பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய மனத்தால் ஒப்புக் கொள்ளும் கருமத் தொடரின் அஸ்திவாரமாகிய ஒரு கருத்தாம்'' பா. க., ப. 127). அதாவது பரம்பரையாக நாம் பெற்றுள்ள வாழ்க்கை நெறிமுறைகளைக் கூடப் பகுத்தறிவின் உதவியோடு தகுந்த முறையில்தான் பயன்படுத்த வேண்டும்.

3. 1. 2. மெய்ஞானம்

பாரம்பரியத்திலிருந்த பாரதியார் பெற்ற இன்னொன்று மெய்ஞான வேட்கையாகும். இறையறிவு சம்பந்தமான சிந்தனையில் ஈடுபட்ட திருமூலரே ஆத்மா, பரமாத்மா இவற்றின் தன்மைகளையும், இரண்டுக்குமிடையே உள்ள உறவினையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருந்தார். அவர் கற்பனைக் கதைகளையும், மூட நம்பிக்கைகளையும் தகர்த்து யோகமுறையில் மெய்ஞானம் பெறும் முறையை விளக்கி ஒரு புதுச் சிந்தனைப் பாணியைத் தொடங்கி

வைத்திருந்தார். ஞானசித்தியும், பிரணவ சமாதியும் வாயிலாக எங்குமேதங்கும் சிற்பரஞ்சோதியை அடையும் முறையைக் காட்டிய போதிலும், ஆத்மஞானத்தின் தெளிவின்மையும், சொல்லாட்சிச் சிக்கலும் காரணம் அவர் மத்திரங்கள் பல பகுத்தறிவு வழியாக அறிந்து கொள்பவையாக அமையவில்லை. ஆனால் பிற்காலத்து சித்தர்கள் பலர் பரலோகச் சித்தியைக் கருதாமல் இகலோக வாழ்வி லேயே முக்திநிலை அடையலாம் என்று நிரூபித்தனர், இந்தச் சித்தர்கள் கருத்துகளும் பாரதியாரைப் பாதித்துள்ளன. இக் கருத்துகள் தமிழ் நாட்டுச் சித்தர்களுடையது மட்டுமல்ல. உப நிடதங்களிலிருந்தே வளர்ச்சியடைந்து வரும் இந்தியச் சிந்தனையில் ஒரு ஒழுக்கு ஆகும். இச் சிந்தனையும் பாரதியார் சிந்தனைக்கு எவ்வாறு திசை கொடுத்திருந்தது என்பது பின் விளக்கப்படும். (3. 5.,1)

3. 1. 3. நாட்டு வழக்கம்

மேற்கூறிய இலக்கியப் பாரம்பரியத்தையும் ஞான பாரம்பரியத் தையும் தவிர நாட்டிலக்கியத்தின் மரபுகளும் பாரதியார் கவிதை களில் காணலாம். சிந்தனையில் நாட்டுப் பண்புகளைப் புலவர் பண்புகளிலிருந்து பிரித்துக் காட்டுவது எளிதல்ல. ஆனால் காவியப் பண்புகளில் இவற்றைத் தெளிவாகக் காணலாம்.

மொழியிலும், காவியவியல்புகளிலும் சாதாரண மக்களிடையே பரவியிருந்த மரபுகளைப் பாரதியார் ஏற்றுக்கொண்டார். சாதாரணப் பேசும் மொழி வடிவங்களிலிருந்து திசை வழக்குகளையும், கொச்சை யுருவங்களையும் தவிர்த்து, எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு தரமான மொழி வடிவம் அமைத்தது பாரதியார் சிறப்பு. இன்னும் எல்லாத் துறைகளிலும் வழங்கப் பயன்படும் ஒரு மொழி வடிவம் உருப்படுத்த வேண்டுமானால் அதற்கு அடிப்படை மாதிரியாக இருக்கும் தகைமை பெற்றது பாரதியார் மொழி. பல்வேறுதுறைகளில் விரைவில் வளர்ச்சியடைந்து வரும் தமிழ் மொழியின் வருங்கால அடிப்படை உருவம் பாரதியார் தமிழிலிருந்து அதிகம் மாறுபட் டிருக்காது என்று தோன்றுகிறது. இதற்குக் காரணம் தமிழ் இலக்கணங்களும், இலக்கியங்களும், தந்துள்ள அடிப்படை மரபுகளை முற்றிலும் புறக்கணிக்காமல், மக்கள் மொழியின் அடிப் படையில் பல மாற்றங்களும் செய்து ஒரு நடுத்தர மொழி வடிவம் அமைத்திருப்பதேயாகும். ஆகவே அதில் உயர்ந்த இலக்கிய நடைப் பண்புகள் மிகுந்து அது மக்கள் மொழியிலிருந்து அகன்று போகவும் இல்லை. வட்டார வழக்குகளும் கொச்சையுருவங்களும் பெருகி நம் நீண்ட கால இலக்கிய மொழியின் மரபுகளிலிருந்து அதிகம் விலகிப் போகவும் இல்லை.

மொழி வடிவத்தைத் தவிர யாப்பிலக்கிய, சங்கீத மரபுகளிலும் பாரதியார் இலக்கிய வழக்குகளையும், நாட்டு வழக்குகளையும் பின் பற்றியிருக்கின்றார்.

இலக்கண இலக்கிய மரபுகளைத் தவிர சங்கீத மரபுகளிலும் பாரதியார் நல்ல பயிற்சி பெற்றிருந்தார் என்பது 'சங்கீத விஷயம்' என்ற கட்டுரையில் வரும் ஆழமான கருத்துக்களிலிருந்து தெரிகிறது (பா க., பக். 211—224). சிறந்த கவிதைக்கும் சங்கீதத்துக்கும் என்ன தன்மைகள் வேண்டுமென்றும், தற்கால சங்கீதம் ஏன் தரம் தாழ்ந்து போனதென்றும் அவர் விளக்குகிறார். ரச ஞானமும், மொழியறிவும் இல்லாதவர்கள் சங்கீதத்தைக் கொலை செய்வதைப் பார்த்து அவர் வருந்துகிறார். ஆனால் சங்கீத மரபுகளைப் பின்பற்றுவதால் மட்டும் சிறந்த சங்கீதம் உருவாகாது என்று கருதுவது அவர் சுதந்திரச் சிந்தனைக்குச் சான்று. ''பிறர் துன்பத்தைக் காணும்போது தனது துன்பம்போல் எண்ணி வருந்தும் இயல்புடைய ஒருவனும் பிறர் துன்பத்தைக் கருதாத ஒருவனும் யாப்பிலக்கணம் படித்து கவிதை செய்யப் பழகுவாராயின், முந்தியவன் உண்மையான கவிதை யெழுதுவான்; பிந்தியவன் பதங்களைப் பின்னுவான். இவனுடைய தொழிலிலே கவிதையிராது. இப்படியேதான் ஒவ்வொன்றிலும், ரச ஞானமில்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் சங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள்'' (பா. க., பக். 212—213). பாரதியார் தனது இக் கருத்துக்களை முற்றிலும் பின்பற்றி எழுதியதுதான் அவர் படைப்புகள் கவிதையாகவும், சங்கீதமாகவும் சிறப்பு பெறக் காரணம்.

இப்படி மரபு சங்கீதத்தின் பண்புகளைப் பின்பற்றியதோடு அவர் நாட்டுப் பாடல்களின் சிறந்த கூறுபாடுகளையும் அறிந்து பயன்படுத்தியிருக்கிறார். சில நாட்டுப் பாடல்களில் முத்துப் போல வார்த்தைகள் அகப்படுவதும், தொழிற்பெண்களின் பாட்டு மிகவும் ரசமாகவும், இன்பம் தருவதாக இருப்பது அவர் கவனத்தைக் கவர்ந் திருக்கிறது (பா. க. ப. 128). ஆனால் கல்விப் பயிற்சியில்லாததால் நாட்டுப் பாடல்களில் குறைகளும் இருக்கின்றன. அக்குறைகளை மாற்றிச் சிறந்த கவிதை அமைக்கலாம். இந்த எண்ணத்தில்தான் அவர் பள்ளுப்பாட்டு, பண்டாரப்பாட்டு, அம்மாக்கண்ணு பாட்டு, வண்டிக்காரன் பாட்டு முதலியவற்றின் பாணியில் கவிதைகள் எழுதியிருக்கிறார்.

இவ்வாறு பாரதியார் தமிழ்நாட்டின் அறம், நீதி, நெறி, மெய் ஞானம், சங்கீதம் இவற்றின் பரம்பரைகளைப் பாதுகாத்து அவற்றுக்குப் புதுமை கொடுத்திருக்கிறார்.

3. 2. இந்தியப் பரம்பரை

தமிழ்நாட்டுப் பண்பாட்டு, இலக்கியப் பரம்பரைகளின் எல்லை களைக் கடந்து சென்று இந்தியப் பண்பாட்டின் மற்ற கூறுகளையும் பாரதியார் அறிந்து அவற்றிலிருந்து ஊக்கம் பெற்றிருந்தார். இவற்றை யெல்லாம் அவர் 'ஆரிய சம்பத்'தாகக் கருதினார். நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், காளிதாசன் சாகுந்தலம், துளசிதாசர் ராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதி

காரம், திருக்குறள், தஞ்சாவூர் கோயில், எல்லோரா குகைகள் ஆக்ரா தாஜ்மகால் இவற்றுக்கெல்லாம் பொதுப்பெயர் 'ஆரிய சம்பத்' தென்றும், உலகம் உள்ளவரையிலும் இவற்றைப் பாதுகாப்பது நம் கடமையென்றும் அவர் நம்பினார் (பா. க., பக். 54—55).

வேதங்களும், உபநிடதங்களும் புராணங்களும் வழியாக வந்துள்ள சிந்தனைகளை அவர் அலசியிருக்கிறார். முக்கியமாக பாரதியாரின் மெய்யியல் சிந்தனை இவற்றின் அடிப்படையிலேயே வளர்ந்து உருவம் பெற்றுள்ளது. அவர் தத்துவ நெறிகளை ஆராயும் முன் அவர் காலத்தின் சிந்தனை வளர்ச்சியின் பின்னணியையும் தெரிய வேண்டும்.

3. 3. பழமையும் புதுமையும்

சென்ற நூற்றாண்டில் ஆங்கிலத் தொடர்பால் நம் நாட்டில் வந்த மாறுதல்களைப் பற்றிக் கூறப்பட்டது. (*1. 1. 2.*). விஞ்ஞானக் கருத்துக்களும், பகுத்தறிவும் பரவவே ஒருபுறம் நம் பரம்பரைச் சிந்தனையின் முரண்பாடுகளும், பலவீனங்களும் தெரியவந்ததால் அவற்றை விட்டுவிட்டு முற்றிலும் மாறிய சிந்தனைப் பாணியையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்ற ஆவல் கொள்ளும் அறிஞர்கள் பலர் இருந்தனர். அதே நேரத்தில் அன்னியப் பண்பாட்டின் தாக்குதலால் நம் பண்பாடே அழிகிறதென்று கருதி எந்தத் தியாகம் செய்தும் அதைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஒரு கருத்தும் வளர்ந்து வந்தது. இதன் பயனே சிந்தனையில் மறுமலர்ச்சி இயக்கம், இதன் முழுப் பிரதிநிதியாக பாரதியாரைக் கொள்ளலாம். விவேகானந்தரும், ரவீந்திரநாத் தாகூரும் கொண்டிருந்த கருத்துக்களையும் பார்த்தால் பாரதியாரை முழுமையாகப் புரிய முடியும்.

சுவாமி விவேகானந்தர் யோகத்தின் கூறுகளை விளக்கிவிட்டுக் கூறுகிறார். "எந்த யோகமும் விவேகத்தை (பகுத்தறிவை) விட்டுவிட வேண்டுமென்று சொல்லவில்லை, நீங்கள் ஏமாந்து போய் உங்கள் விவேகத்தை எந்தவிதம் பூசாரியிடமாவது ஒப்படைக்க வேண்டுமென்று யாரும் கூறவில்லை. ...ஞானானுபதி என்பது விவேகத்தின் வளர்ச்சிதான், கவி வேகம் மூலமாகத்தான் ஏற்படுகிறது. உண்மையான சுய அனுபதி ஏதும் விவேகம் அல்லது பகுத்தறிவுக்கு எதிராக இராது. மனித இனம் யாரோ ஒருவன் அத்தாட்சியின் அடிப்படையில் இருநூறு கடவுள்களை நம்புவதைவிட நாஸ்திகம் ஆகி விடுவது நல்லது" விவேகானந்தரின் இச்சொற்களை எடுத்துக்காட்டி ஜவகர்லால் நேரு (*1946; 1983; 187—88*) வேதத்தின் ஆணைகளைக் கூடப் பகுத்தறிவின் மூலம் ஆராய்ந்துதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

வேத புராணங்களைப் பற்றி விவேகானந்தர் வைத்திருந்த கருத்தையும் பார்ப்போம். வேதம் தான் ஒரே பிரமாணம். அதன்

மேல் எல்லோருக்கும் உரிமையுண்டு. நம் வேதங்களிலிருந்து அவை யாருக்காவது உரியதல்லவவென்று சான்றுகாட்ட முடியுமா?[1] என்கிறார் விவேகானந்தர். வேதங்களில் சாதி அடிப்படையாக உள்ள உயர்வு தாழ்வுகள் இல்லை பிற்காலத்துப் புராணங்கள்தான் இந்த சாதி வேற்றுமைக்கு இடம் கொடுக்கவும், பல கற்பனைக் கதைகளால் அவற்றை நிருபிக்கவும் செய்தன. ஆகவே விவேகானந்தர் புராணங்கள், தந்திரங்கள், ஸ்மிருதிகள் போன்றவற்றை, பிரமாணங்களாகக் கொள்ளாமல் வேதங்களையே ஒப்புக் கொள்கிறார். இந்தக் கருத்து மறுமலர்ச்சிக் காலத்தில் பகுத்தறிவு வளர்ச்சியோடு வளர்ந்த கருத்தாகும்.

பாரதியார் சிந்தனையும் இதே கருத்தையொட்டித்தான் இருக்கிறது.

'உயிர் பெற்ற தமிழர் பாட்டி'ல் அவர் நேரடியாகவே சொல்லுகிறார்.

உண்மையின் பேர் தெய்வம் என்போம்—அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம்—பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்

(ம. பா.க., ப. 11)

புராணங்களைப் பகுத்தறிவுடன் ஆராய்ச்சி செய்து அவற்றை மதிப்பீடு செய்கிறார் பாரதியார்,

கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்
வடமலை தாழ்ந்ததனாலே—தெற்கில்
வந்து சமண் செயும் குட்டைமுனியும்
நதியினுள்ளே முழுகிப்போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த—திறல்
வீமனும் கற்பனை என்பது கண்டோம்

ஒருபுறம் கற்பனைக் கதைகள், மறுபுறம் ஒன்றுக்கொன்று பொருந்தாத முரண்பாடுகள் ஆகிலும் இவற்றை முற்றிலும் பயனற்றதென்று பாரதியார் இகழ்ந்து தள்ளிவிடவில்லை.

---

1. Veda is our only authority, and every one has the right to it. Can you show any authority from the Veda of ours that everyone has not the right to it!

(Vivekananda Swami, 1957, 457.

Whenever there is a difference between subsequent Paura-nika literature and the Vedas the Puranas must give way (Ibid. 231).

ஒன்று மற்றொன்றைப் பழிக்கும் ஒன்றில்
உண்மையென்றோதி மற்றொன்று பொய்யென்னும்
நன்று புராணங்கள் செய்தார்—அதில்
நல்ல கவிதைகள் பலபல தந்தார்
கவிதை மிக நல்லதேனும்—அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்
புவிதனில் வாழ்நெறி காட்டி—நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதான்

—ம. பா. க., ப. 12

பின் எழுந்த மனுஸ்மிருதிகள் போன்ற நூல்களில் சாதி வேற்றுமைகள் அதிகரித்தன, பெண்ணின் உரிமைகள் குறைந்தன. இவ்வாறு அநீதிக்குத் துணையாக நிற்கும் நூல்களைப் பாரதியார் அது சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்' என்று ஒரே அடியில் மதிப்பீடு செய்துவிட்டார்.

இவ்வாறு தற்பொழுது வளர்ந்து வந்த பகுத்தறிவியக்கத்தின் பயனாக பாரதியார் நம் பரம்பரையை முழுமையாக ஏற்றுக் கொள்ளாத போதிலும் அதைப் புறக்கணித்து விடவுமில்லை. நம் வாழ்க்கை நெறிகளை முழுதும் விட்டுவிட்டு அன்னியப் பண்பாட்டை அவர் ஏற்கவுமில்லை.

3. 4. சிந்தனைக் குழப்பம்

உண்மையாக அது ஒரு சிந்தனைக் குழப்பத்தின் காரணமாக இருந்தது. அந்தக் காலத்தில் தொடங்கிய சிந்தனைக் குழப்பம் இன்றுகூட மாறிவிட்டதாகத் தோன்றவில்லை. இந்தக் குழப்பம், புதிய அறிவும், விஞ்ஞானம். பகுத்தறிவும் தரும் மேனாட்டுச் சிந்தனையை ஏற்றுக் கொள்வதா, அல்லது நம் பரம்பரையைப் பாதுகாத்து அதற்குப் புத்துயிர் கொடுப்பதா என்பதாகும். ஆங்கிலத் தொடர்பு கொண்டு மேனாட்டுப் பண்பாட்டினை ஆதரித்தனர் பலர், புது மலர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டு பரம்பரையைப் பிடித்து நிற்க விரும்பியவரும் பலர். ஆனால் இரண்டையுமே முழுமையாக வாழ்வில் பயன்படுத்த முடியாத, அல்லது பயன்படுத்த மனமில்லாத மிகச் சிக்கலான நிலைதான் இருந்தது. இன்றும் இந்த நிலையிலிருந்து நாம் விடுதலை பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் பாரதியார் அன்றிருந்த நிலையை மிகவும் தெளிவாகக் கண்டார்.

இந்தநாள் எமது தமிழ் நாட்டிடையே
அறிவுத் தலைமை தமதெனக் கொண்டார்
தம்மிலே இருவகை தலைப்பட கண்டேன்
ஒருசார்
மேற்றிசை வாழும் வெண்ணிற மக்களின்
செயற்கையும் நடையும் தீனியும் உடையும்
கொள்கையும் மதமும் குறிகளும் நம்முடைய
வற்றினும் சிறந்தன: ஆதலின் அவற்றை

முழுதுமே தழுவி மூழ்கினல்லால்
தமிழ்ச்சாதி தரணி மீதிராது

இந்த உரையை நாம் ஒப்புக்கொண்டு.

நன்றடா! நன்று! நாமினி மேற்றிசை
வழியெலாந் தழுவி வாழ்குவம் எனிலோ,
ஏ ஏ! அஃது நமக்கிசையா: தென்பர்
'உயிர்தரு மேற்றிசை நெறிகளை உவந்துநீர்
தழுவிடா வண்ணந் தடுத்திடும் பெருந்தடை
பல, அவை நீங்கும் பான்மையவல்ல
என்றருள் புரிவர்

மேனாட்டு அறிவினைப் பாராட்டும் அறிஞர்கள் போக்கு இவ்வாறிருக்க, எப்பொழுது வாழ்ந்தார் என்றுகூடத் தெரியாத நம் மூதாதையோர் கருத்துக்களை நாம் ஏற்க வேண்டும் என்றவர்களும் சிந்தனைக் குழப்பத்தில் இருந்தனர்,

நமது மூதாதையர் நயமுறக் காட்டிய
ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும்
ஆங்கவர் காட்டிய அவ்வப் படியே
தழுவிடின் வாழவு தமிழர்க்குண்டு
எனில், அது தழுவல் இயன்றிடாவண்ணம்
கவி தடை புரிபவன், கவியின் வலியை
வெல்லலாகாது

—*தமிழ்ச்சாதி*, ம. பா. க., ப. 47

இருசாரார் போக்கையும் பார்த்த பாரதியார் 'இங்கிவ்விருதலைக் கொள்ளியினிடையே நம்மவர் எப்படி உய்வர்?' என்று கேட்டார். ஆனால் அவரிடம் கண்மூடித்தனமாக பழமையையேற்றுக் கொள்ளும் பழமைப் பற்றோ புதுமை அனைத்தையும் வரவேற்கும் தன்மையோ இருக்கவில்லை.

எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (குறள். 423)

என்று திருவள்ளுவரும்,

'பழையது என்றதனால் ஏற்கத் தகுந்ததாவதுமில்லை. புதியது என்பதனால் ஏற்கத் தகாததவாதுமில்லை[1] என்று காளிதாசர் கவிதையைப் பற்றியும் சொன்ன சொற்கொப்ப பாரதியாரும்,

---

1. **पुराणमित्येव न साधु सर्वं**
न चापि काव्यं नवमित्यवद्यम् ।

எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வீராயின்
அச்ச மொன்றில்லை (ம. பா. க,. ப. 48)

என்று மக்களுக்கு உறுதியளித்தார்.

இக்கருத்திற்கிணங்க பாரதியார் சிந்தனையும் நம் பரம்பரைச் சிந்தனையைப் பயனறிந்து ஏற்றுக் கொள்வதாகவும், மேனாட்டு அறிவில் நமக்கு உகந்தவைகளை ஏற்றுக் கொள்வதாகவும், எதிலுமே நம் சுதந்திரச் சிந்தனையால் முன்னேற்றம் காண முயற்சி செய்வதாகவும் அமைந்துள்ளது. வாழ்க்கையின் பல்வேறு புறத் தன்மைகளைப் பற்றிய பிரச்சினைகளைத் தவிர, அடிப்படைத் தத்துவங்களைப் பற்றியும் அவர் சிந்தனை செய்கிறார். சாதாரண வாழ்வில் சமுதாயம் முழுதும் இன்பம் பெறுவதெவ்வாறு என்ற கேள்விகளோடு இந்த வாழ்வின் பொருளென்ன, இதில் அழியாத் தன்மை பெறுவது எவ்வாறு என்ற ஆழமான கேள்விகளும் கேட்டு அவர் ஒரு சமுதாயச் சித்தராகவும், மெய்யியல் ஞானியாகவும் விளங்குகிறார்.

3. 5. பாரதியார் சிந்தனைப்பாணி

3. 5. 1. இறை நம்பிக்கையும் மெய்யறிவும்

இறை நம்பிக்கைப் பாரதிக்குத் திடமாக இருந்தது. இந்த நம்பிக்கை இந்திய மெய்யறிவைத் தழுவியதாகவும் இருந்தது. நீண்ட காலத் தேட்டத்துக்கும் ஆத்ம சிந்தனைக்கும் பிறகு பெற்ற உண்மை என்னவெனில் உயிரும், உலகமும், பிரபஞ்சமும், இறைவனும் எல்லாம் ஒற்றென்பதே 'நானே பிரம்மம்' (அஹம் பிரஹ்மோஸ்மி) 'அதுவேந்' (தத் த்வம் அஸி), 'உலகம் முழுதுமே பிரம்ம மயம்' (ஸர்வம் பிரம்மமயம் ஜகத்') போன்ற உபநிடதச் சொற்களில் இந்த உண்மைதான் திரும்பத் திரும்ப கூறப்படுகிறது.

இந்தக் கருத்தைப் பாரதியார் பல கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கூறியிருக்கிறார் என்பது மட்டுமல்ல, இதுவே அவரது தனிப் பண்புகளுக்கும் சிந்தனைக்கும் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

> இதுதான் வேதத்தின் கடைசியாக கருத்து. தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடைத் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன் என்பது முன்னோர் கொள்கை. உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர் அந்த உயிரே தெய்வம்
>
> ('இனி', பா. க., ப. 3)

புராணங்களில் வரும் பொய்க் கற்பனைகளைப் பழித்து விட்டுப் பரம்பொருளின் தன்மையைக் கூறுகிறார்.

எல்லையில்லாத உலகில்—இருந்
தெல்லையில் காலம் இயங்கிடும் தோற்றம்
எல்லையில்லா தனவாகும்—இவை
யாவையு மாயிவற்றுள் குயிராகி
எல்லையில் லாப்பொருள் ஒன்று—தான்
இயல்பறி வாகி இருப்பதுண்டென்றே
நீயும் அதனுடைத் தோற்றம்—இந்த
நீல நிறங்கொண்ட வானமும் ஆங்கே,
ஓயுதல் இன்றிச் சுழலும்—ஒளி
ஓங்குபல் கோடிக் கதிர்களும் அஃதே

(ம. பா. க., ப. 13)

இந்த மெய்யறிவு 'உயிர்களெலாம் தெய்வமன்றிப் பிறவொன் றில்லை' என்ற கருத்தில் மட்டுமல்ல அனுபவத்திலும் கொண்டு விடும்பொழுது அது இறையறிவு மட்டுமாக இராமல் சமுதாய அமைப்பில் ஒற்றுமைக்கும் தூண்டுதல் ஆகிறது. இந்த அனு பவத்தைப் பெற்றிருந்த பாரதியாருக்கு தவமும் யோகமும் யாகமும் எல்லாம் சமுதாயத்தினுடையவும், உயிரினத்தினுடையவும் நலனுக் காகவே அமைந்திருக்கும்.

உற்றவர் நாட்டவர் ஊரார்— இவர்க்கு
உண்மைகள் கூறி இனியனச் செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம்—இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றுமில்லை
பக்கத்திருப்பவர் துன்பம்—தன்னைப்
பார்க்க பொறாதவன் புண்ணிய மூர்த்தி
ஒக்கத்திருந்தி உலகோர்—நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவன் யோகி
ஊருக்குழைத்திடல் யோகம் — நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்

— ம. பா. க., ப. 12.

இப்படி மெய்யறிவு வேட்கை உலக வாழ்விலிருந்து பின் மாறாமல், துறவினைத் தூண்டாமல், சமுதாய நலனுக்காக உழைக்கத் தூண்டும் சத்தியாகி விடுகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வகையம்' என்றும், தமிழிலும் 'தன்னைப் போல எல்லா உயிர்களையும் யார் காண்கிறானோ அவனே உண்மையில் காட்சி பெறுகிறான் (ஆத்மவத் சர்வபூதானி யஹ் பச்யதி பைச்யதி) என்றி வடமொழி யும் நம் முன்னோர் அனுபவித்துக் கூறிய அந்த உண்மையான ஞானம் தான் பாரதியார் பெற்றிருந்தார் என்று தோன்றுகிறது.

இந்த அனுபவம் வந்தபின் கோயிலும், கும்பிடுதலும் பொரு ளற்றதாகி விடுகிறது.

''கோவிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி, தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி கும்பிடாவிட்டாலும் சரி, பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால் தெய்வம் அருள் புரியும். துளிகூட ஓர் அணுக்கூட மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாது என்று ஒருவன் பரிபூரண சித்தி அடைவானாகில் அவனே ஈசுவரன். குருவி, காக்கை, புழு, எறும்பு ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக் கூடாது'' (பா. க., ப. 40).

இந்தக் கருத்து செயல்முறைக் கருத்தாகாது என்ற ஐயம் எழலாம் என்றும் அவருக்குத் தெரியும். உலகம் முழுதும் அநியா யத்தை விட்டுச் சமீப காலத்தில் நீங்குமென்று நினைக்க ஏது இல்லை''யென்றண்ணியிராமல் ஒருவன் இக்கொள்கைகளைப் பின்பற்றுவானாயின் குறைந்தது அவனுக்காவது பயன் கிடைக்கும் என்பதில் பாரதியார் சந்தேகப்படவில்லை. இவ்வாறு ஒருவன் கலியை நொறுக்கினால் அவனைப் பலரும் பின்பற்றுவார்கள், உலகில் சத்திய யுகவும் பிறக்கும். இதுவே சமூகம் உயர்நிலை அடைய பாரதி சொல்லும் வழி.

இந்தக் கருத்து வாழ்க்கை முழுதையுமே சீர்படுத்தி இன்பம் தரும் நெறியைத் தருகிறது. இந்த அடிப்படை நெறி சமுதாயத்தின் நல்வாழ்வுக்கும் உதவுகிறது. தனி மனிதன் இன்பம் பெறவும் உதவுகிறது.

3. 6. சமூக நல்வாழ்வு

எத்தனை சாஸ்திரங்களுக்கும், ஆக்கினைகளுக்கும் கட்டுப் பட்டிருந்தும் மனிதன் துயரங்களே அனுபவித்து வருகிறானென்றால், அதற்குக் காரணம் இந்த நெறியைப் பின்பற்றாதாகும். ஆகவே 'ஒரு புதுக்கட்டுப்பாடு செய்து கொள்வோமே. அந்தக்கட்டுப்பாடு யாதெனில் — ''ஒருவர்க்கொருவர் மனத்தாலும் தீங்கு நினைப்ப தில்லை'' என்பதுதான் (பா. க. ப. 58)

இந்தக் கட்டுப்பாடு பாரதியின் சம உரிமைக் கொள்கை அல்லது சோசலிசத்துக்கு அடிப்படையாகின்றது. 'முதலாவது சிலருக்குச் சோறு மித மிஞ்சி இருக்கப் பலர் தின்னச் சோறில்லாமல் மடியும் கொடுமையைத் தீர்த்து விட வேணடும்'' என்று தொடங்கி ஒரு முழு சம உரிமைக் கொள்கையே தருகிறார் பாரதியார் (பா. க. ப. 59)

ஆனால் இதற்கும் அடிப்படை, அன்பும் கடவுள் நம்பிக் கையுமே. அன்பு கொள்கையிலிருந்தால் போதாது, செய்கையில் இருக்க வேண்டும். அன்னியருக்காக தியாகங்கள் சகிப்பதும், பறையனைக் கூட தனக்குச் சமமாகக் காண்பதும்தான் அன்பை வெளிப்படுத்தும் செயல்முறைகள் (பா. க., ப. 61)

இறைவனைத் தழுவிய கருத்துக்களும், செயல்களும் மனிதன் மூட நம்பிக்கைகளை ஏளர்த்து அவன் பகுத்தறிவைக் கெடுப்பதும்,

ஏற்றத் தாழ்வுகளுக்கும் அநியாயங்களுக்கும் காரணமாக இருப்பதும் பாரதி கண்டார். அதோடு அதே கருத்துகளும், கொள்கைகளும் நற்செயற்களைத் தூண்டி மனித இனத்துக்கு நலன் தரும் என்றும் கண்டார். இது நம் பரம்பரைச் சிந்தனைப் பாணிக்கு ஒத்ததாகும்.

3. 7. தனிவன் நிலை

இந்தச் சிந்தனை முறையில் தனி மனிதனுக்கு இடம் என்ன? மனிதனின் வாழ்வின் பொருள் என்ன? நோக்கமென்ன?

மேற்கூறிய மெய்யியல் கருத்துக்கள் பல தமிழிலும், மற்ற இந்திய மொழிகளிலும் காணும் பக்தி இலக்கியத்திலும் ஞான இலக்கியத்திலும் மிகுதியாகக் காண இயலும். ஆனால் அவற்றை இயற்றிய கவிஞர்கள் அல்லது பக்தர்கள் உலக வாழ்வுக்கப்பால் ஏதோ சிறந்த ஒன்றைப் பெற விரும்பினர். வீடு அல்லது முக்தி பலருக்கும் கடைசிக் குறிக்கோளாக இருந்தது. பாரதியாருக்கு இவ்வறவியல் கருத்து ‘வீடு’ பெறத் தூண்டுதலாக இருக்கவில்லை. ஒருக்கால் அவர் மோட்சம் என்பதைப் பற்றிக் கவலைப்படவே யில்லை. ஆகிலும் இந்த வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதெவ்வாறு என்பதைப் பற்றி உறுதியான கொள்கையொன்று வைத்திருந்தார். அழிந்து கொண்டிருக்கும் உலகில் குறிக்கோள் எதுவுமின்றி வாழும் மனிதர்களை அவர் பார்க்கிறார். இதுதான் தன் வாழ்வின் பொருளா என்ற சிந்தனை எழுகிறது.

தேடிச் சோறு நிதம் தின்று — பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி — மனம்
வாடித் துன்ப மிகவுழன்று — பிறர்
வாடப் பல செயல்கள் செய்து — நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி — கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் — பல
வேடிக்கை மனிதரைப் போலே — நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

— *யோகசித்தி, ம. பா. க., பக். 115-116*

உயிரினங்களின் பொதுப் பண்புகளைப் பின்பற்றி வாழ்ந்து சாதாரன மானிடர்களைப் போல் மாண்டு போவதில் ஒரு பெருமை யும் இல்லை. மனித வாழ்வு தாவர வாழ்விலிருந்தும், விலங்கின வாழ்விலிருந்து மாறுபட்டுச் சில செயல்கள் செய்து, சில பேறுகள் பெற்று தன் நிலை நிற்பை நியாயப்படுத்த வேண்டும். வாழ்ந்ததன் அடையாளம் அழியாதிருக்க வேண்டும்: உச்ச நிலையில் இதுவே சாகா நிலையென்று கூறலாம்.

3. 8. நான் சாகாதிருப்பேன்: ஒரு புதிர்

தனக்கு முன் இருந்த சித்தர்களைப் போல தானும் ஒரு சித்த னாக வந்ததாக பாரதியார் உரிமையுடன் சொன்னார். அது மட்டு

மல்ல. முன்னிருந்த புத்தன், சங்கரன், ராமாநுஜன், யேசு, கண்ணன், ராமன் — எல்லோருமே, இறந்து விட்டனர். ஆனால் 'பார் மீது நான் சாகாதிருப்பேன் காணீர்' என்றும் (பாரதி அறுபத் தாறு, ம. பா. க. ப. 217) நம்பிக்கையோடு கூறினார்.

முனிவர் யாக்ஞ்வல்லியர் மனைவி பெரும் புலவரான கார்க்கி, முனிவரிடம் பல உபதேசங்களும் கேட்டு விட்டு ஒரு கேள்வி எழுப்பினார். 'எதனால் நான் இறவாநிலை அடைய மாட்டேனோ அதனால் நான் என்ன செய்ய?'[1] மனிதன் தன் அபார மேதை யாலும், படைப்பாற்றலாலும் எதையெல்லாம் பெற்றிருந்தாலும் இறவாநிலை அடைவதில் வெற்றி பெறவில்லை. ஆனால் பாரதியார் நம்பிக்கையோடு கூறுகிறார் 'பார் மீது நான் சாகாதிருப்பேன்' என்று, அதே பாரதியார் இன்னொரிடத்தில் சொல்கிறார். 'தோன்றி அழிவது வாழ்க்கை' அந்த அழியும் வாழ்வில் எல்லாமே ஓர் கணத் தோற்றம் தான்.

இன்பமும் ஓர் கணத்தோற்றம் — இங்கு
இளமையும் செல்வமும் ஓர் கணத்தோற்றம்
துன்பமும் ஓர் கணத்தோற்றம் — இங்கு
தோல்வி முதுமை ஒரு கணத்தோற்றம்

உயிர் பெற்ற தமிழர் பாட்டு, ம. பா, க., ப. 13

எல்லாமே ஒரு கணத்தோற்றம் என்றால் நான் மட்டும் சாவா திருப்பேன் என்பதன் பொருள் தானென்ன? ஆத்மா (ஆவி) நிலை யானது. உடல்தான் அழிகிறது என்பது இதன் பொருளா? உடல் இழந்த பின்னும் ஆவி நிலைத்திருக்கும் என்று பாரதியார் கருதுகிறாரா?

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்
பித்த மனிதர், அவர் சொலும் சாத்திரம்
பேயுரையாம் என்றிங்கூதடா சங்கம்!

— சங்கு, ம. பா. க., ப. 154

என்பதிலிருந்து, இஃதும் அவருடைய கருத்தல்ல என்று தெரிகிறது.

இத்தரை மீதினிலேயித்த நாளினில்
இப்பொழுதே முத்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவராம்

— ம. மா. க., ப. 154

இதுவுமன்றி அவரே ஓரளவுக்கு விளக்கிக் கூறுகிறார்.

---

1. येनऽहं नामृत स्याम् किमहं तेन कुर्याम् ।

அச்சத்தை வேட்கை தனை அழித்துவிட்டால்
அப்போது சாவுமங்கே இழிந்து போகும்
மிச்சத்தைப்பின் சொல்வேன் சினத்தை முன்னே
வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை

பாரதி அறுபத்தாறு, ம. பா. க., ப. 217

இவ்வாறு உள்ளத்தின் சஞ்சலங்களை அகற்றி, உள்ளத்தின் இயல்பான இன்பநிலையைக் கெடுக்கும் அச்சம், வேட்கை, சினம் போன்ற மனக்கிளர்ச்சிகளிலிருந்து விடுதலை அடையும் நிலையே பாரதியார் விரும்பினார் என்று தோன்றுகிறது. இந்நிலையில், இன்ப துன்பங்களும், இரண்டுமில்லாத நிலையும் ஒரே நிலையில் அனுபவப் படுகிறது. பாரதியார் இதைப் பரசிவ முக்தியென்றும் சிதம்பர மென்றும் ஜீவன் முக்தியென்றும் கூறுகிறார்.

தோன்றி அழிவது வாழ்க்கை — இதில்
துன்பத் தோடின்பம் வெறுமையென் றோதும்
மூன்றில் எதுவருமேனும் — களி
மூழ்கி நடந்தால் பரசிவ முக்தி

— உயிர் பெற்ற தமிழர் பாட்டு, ம. பா. க., ப. 13

இந்தச் சிதம்பர ஞானம் அல்லது ஜீவன் முக்தி அவர் குள்ளச்சாமி யிடமிருந்து பெற்றதாகக் குறிப்பிட்டிருக்கிறார் — பா. க., ப. 21.

3. 9. வாழ்வே இன்பமயம்

மெய்யறிவு பெறுவதற்கானவோ பெற்று விட்டோ துறவி யாகும் தன்மை உடையவரல்ல பாரதியார். அனேகமாக வாழ்க்கை முழுதும் வறுமையில் கழித்த பாரதியார் என்றுமே அதில் வருத்தம் அடைய வில்லை. நேர் மாறாக, கொடிய வறுமையிலும் வீட்டில் ஏதும் இல்லாமல் மனைவி கண் கலங்கிய நேரத்தில் கூட "அசடே எதற்காக கண் கலங்கறே? நீயும் நானும் நம்முடைய குழந்தைகளும் மட்டும்தான் பட்டினி கிடப்பதாக நினைப்போ? பாரத மாதாவின் கோடிக்கணக்கான குழந்தைகள் பட்டினி கிடக்கறாங்க. அந்தக் கஷ்டத்தை நாமும் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம். அதற்காக பெருமைப்படு. சந்தோஷப்படு" (பி. சா. கணேசன், 1982, 3) என்று சொல்லும் மனநிலை அவருக்கிருந்தது. பாரத மாதாவின் கோடிக் கணக்கான மக்களோடு மட்டுமல்ல உயிரினங்கள் அனைத்தோடும் அவர் ஒன்றுபட்டு வாழ்ந்தார். அதில் இன்பமடைந்தார். வாழ்வை இன்பமயமாக்க வேண்டும் என்பது அவர் அடிப்படைக் கருத்து" நான் ஐயரைப்போல் (அதாவது வ. வே. சு. ஐயரைப் போல்) துறவு போதிக்க மாட்டேன். உலகத்தில் பிறந்து எல்ல சுகங்களையும் அனுபவித்து உலகத்திற்கு உபகாரியாக வாழ வேண்டும்" என்பதே அவர் வாழ்வின் குறிக்கோள். (யதுகிரி அம்மாள் 1954, 1958, 38). "உலக வாழ்க்கையில் மானிடராலும் மற்ற உயிர்களாலும் விரும்பப்

படும் மிகச் சிறந்த பயன் யாது? எப்போதும் மாறாத எப்போதும் குறையாத இன்பமெய்திய வாழ்தல் ... மனிதர் மட்டுமேயன்றி மற்ற எல்லா உயிர்களும் தாம் செய்யும் எல்லாத் தொழில்களையும் மேற் கூறிய ஒரே நோக்கத்தோடுதான் செயகின்றன'' (பா. க., பக். 115-15). இதுதான் பாரதியார் அடிப்படை வாழ்க்கைத் தத்துவம். இயற்கையோடு இயைந்து வாழ்தல், ஆனால் பற்றின்றி வாழ்தல் இன்பங்களையும் துன்பங்களையும் இயற்கையாக நினைந்து மன எழுச்சி களில்லாது அனுபவித்தல். எல்லாப் பொருள்களும் ஒரே விதமான மன மலர்ச்சியைத் தருகின்றன. வேற்றுமை எதுமேயில்லை 'ஜகத் சித்திரத்தில்' (ம. பா. க., ப. 259). நாரதருக்கும் இந்திரனுக்கு இடையே ஒரு உரையாடல்,

நாரதர் : எல்லா வஸ்துக்களும் எல்லா லோகங்களும் எல்லா நிலைமைகளும், எல்லாத் தன்மைகளும், எல்லா சக்திகளும், எல்லா ரூபங்களும் எல்லாம் ஒன்றுக்கொன்று சமானம்.

இந்திரன் : நீரும் கழுமையும் சமானந்தானா?

நாரதர் : ஆம்.

இந்திரன்: அமிருதபானமும் விஷபானமும் சமானமா?

நாரதர் : ஆம்.

இந்திரன் : அசுரர்களும் தேவர்களும் சமானமா?

நாரதர் : ஆம்.

இந்திரன் : ஞானமும் அஞ்ஞானமும் சமானமா?

நாரதர் : ஆம்

இந்திரன் : சுகமும் துக்கம் சமானமா?

நாரதர் : ஆம்

இந்திரன் : அதெப்படி?

நாரதர் : சர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

இவ்வாறு ஒரு உண்மையான உணர்ச்சி இருந்ததால்தான் பாரதியாருக்கு எந்தத் துயர நிலையிலும் தளராத ஆற்றலுடன் செயல் புரிந்து கொண்டு வாழவும் முடிந்தது, உள்ளத்துக்கு மலர்ச்சியும் மகிழ்ச்சியும் தரும் கவிதை நிரந்தரமாக எழுதவும் முடிந்தது.

3. 10. இயல்பான உள மலர்ச்சியின் கவிதை

எல்லாவற்றையும் விட முக்கியமானதும், பாரதியாருக்குத் தனித் தன்மை கொடுப்பதும், அவர் கவிதைக்கு அழியாச் சிறப்பு கொடுப்

பதுமாக எனக்குத் தோன்றுவது அவை இயல்பான ஒரு உள மகிழ்ச்சியிலிருந்து உதித்து, சொல்லித் தெரிவிக்க முடியாத ஒரு ஒளியைப் பரப்புகின்றன என்பதே. இயல்பாக மலர்ந்து புது மணம் பரப்புகின்ற பூக்களைப்போல், கடமையும் கட்டுப்பாடும் கவலையு மின்றி வானத்தில் பாடிப் பறந்து களிக்கும் பறவைகளைப் போல் இயல்பான மன மலர்ச்சியிலிருந்து பிறந்து மனமலர்ச்சியைத் தருவன அவை. இயற்கையோடு இசைந்து வாழ்ந்த கவிஞன் குரலில் கபட நாடகங்களும், பாசாங்குகளும் சற்றுமில்லை. அவர் கவிதையில் எந்தக் கருத்து, எந்த அனுபவம், எந்த உணர்ச்சி வெளிப்பட்டாலும் அது உண்மையான உணர்ச்சியிலிருந்து வருவதாகச் சொல்லலாம். ஆகவே அவற்றிலிருந்து அனைவரும் பெறும் உள அனுபவங்களும் ஆழமாகவும் உண்மையாகவும் இருக்கின்றன.

3. 11. இந்தியாவின் ஆத்மாவின் குரல்

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் மறுமலர்ச்சி கொடுத்தார் பாரதியார். உலகம் முழுதுக்கும், மனித இனத்துக்கும் அவர் கொடை அதிலும் பெரிது. அதுதான் தொன்றுதொட்டு இந்தியச் சிந்தனை யில் எழுந்த உண்மைக்குக் குரல் கொடுப்பது. எந்தச் சிறு உயிருக் கும் தீமையும் வேதனையும் செய்யாதே, பகுத்துண்டு வாழ்வோமா யின் உலகம் முழுதும் இன்பம் பெறும் என்று அவர் சொன்னதைக் கண்டோம்.

சிறப்பு ஈனும் செல்வம்பெறினும் பிறாக்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள் (குறள். 311)

என்றும்,

அறவினை யாதெனில் கொல்லாமைகோளல்
பிறவினை எல்லாம் தரும் (குறள். 321)

என்றும்,

பகுத்துண்டு பல்லோர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாம்தலை (குறள் 322)

என்றுந்தான் வள்ளுவரும் சொன்னார்.

இன்பக்களிப்பில் மூழ்கியிருந்த இரண்டு பறவைகளில் ஒன்றினை ஒரு வேடன் எய்து வீழ்த்தியதைப் பார்த்த வால்மீகியின் உள்ளத்திலிருந்து எழுந்த முதற்சொற்கள் ‘செய்யாதே, வேடா, செய்யாதே’ (மாநிஷாத) என்பவை. செய்யாதே வேடா, செய்யாதே இந்த கொடும் செயலைச் செய்யாதே. அந்தச் சிறு உயிருக்கு இன்னா செய்யாதே. இன்பமயமான இந்த வாழ்வின் துன்பம் விளைவித்து உன் ஆற்றலைப் பாழாக்காதே.

இதுதான் வாள்மீகியின் குரல். இதுதான் வள்ளுவரின் குரல், இதுதான் இந்தியச் சிந்தனையின் அடிப்படைக் குரல். இந்தக் குரலே பாரதியில் எதிரொலித்தது.

இன்று இந்திய மக்களுக்கு மட்டுமல்ல மனித இனத்துக்கே இந்தக் குரல் தேவையாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் பகைமையை வளர்த்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில், அழிவின் வல்லமை கொண்ட ஆயுதங்களைப் பேரரசுகள் குவித்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில், இயற்கையிலிருந்து விலகி செயற்கை வாழ்க்கையில் மூழ்கி மனிதன் திசையற்றவனாகத் திரிந்து கொண்டிருக்கும் இக்காலத்தில், ஆறுதலும் நம்பிக்கையும் தர இந்தக் குரல் தேவை. உலகமெங்கும் இதைக் கேட்க வைக்க நாம் ஏதாவது செய்ய முடியுமா? உலகம் இதைக் கேட்குமா, கேட்குமா என்ற கேள்விகளோடு நான் இந்த உரையை முடிக்கின்றேன்.

உதவி நூல்கள்

சுப்பிரமணிய பாரதியார், 1941: பாரதி நூல்கள் (வசனங்கள்), பாரதி பிரசுராலயம், சென்னை.

.............................., 1949: பாரதி நூல்கள் (காவியங்கள்), பாரதி பிரசுராலயம், சென்னை.

.............................., 1958: மகாகவி பாரதியார் கவிதைகள் (ம. பா. க.), அருணா பதிப்பகம், மதுரை.

.............................., 1969, 1971: பாரதியார் கவிதைகள், மெர்க்குரி புத்தக கம்பெனி கோயமுத்தூர்.

.............................., 1980, 1981: பாரதியார் கவிதைகள் (பார. க.), வானவில் பிரசுரம், சென்னை.

.............................., 1981: மகாகவி பாரதியாரின் கட்டுரைகள் (பா. க.), வானதி பதிப்பகம். சென்னை.

இராமானுசன், தி, 1949: வரகவி பாரதியார், ஏ. டி. என். நாகலிங்கம் அண்டு கம்பெனி, மதுரை.

கணேசன், பி. சி., 1982: ஆனந்த விகடன் இணைப்பு, 12.12.1982, சென்னை.

கனகலிங்கம், ரா.. 1947: என் குருநாதர் பாரதியார், சக்தி காரியாலயம், சென்னை.

கிருஷ்ணமூர்த்தி, 'கல்கி', 1954: பாரதி பிறந்தார், பாரதி பதிப்பகம், சென்னை.

கைலாசபதி, க., 1962: இரு மகாகவிகள், என். சி. பி. எச். சென்னை

கோதண்டராமன், ப., 1961: பாரதியுகம், இமயம் பதிப்பகம், நாகப்பட்டினம்.

சத்திதாஸன் சுப்பிரமணியன், 1961: பாரதி வாழ்வு, ஸ்ரீ வெங்கடரமணா அண்டு கம்பெனி, சென்னை.

சுத்தானந்த பாரதியார், சுவாமி., 1944: பாரதி விளக்கம், பாரதி பிரசுராலயம், சென்னை.

செல்லம்மாள் பாரதி, 1944; 1955: பாரதியார் சரித்திரம், சக்தி காரியாலயம், சென்னை.

தங்கம்மாள் பாரதி, 1947: பாரதியும் கவிதையும், புதுமைப் பதிப்பகம், காரைக்குடி.

திருவள்ளுவர், திருக்குறள்.

தேசிக விநாயகம் பிள்ளை, 1938, 1954: மலரும் மாலையும், பாரி நிலையம், சென்னை.

யதுகிரி அம்மாள், 1954, 1958: பாரதி நினைவுகள், அமுத நிலையம், சென்னை.

ரகுநாதன், 1982 ஜூன்: பாரதி சில பார்வைகள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

..........., 1982 டிசம்பர்: பாரதி காலமும் கருத்தும்.

ராஜம் கிருஷ்ணன், பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி, பாரி புத்தகப் பண்ணை, சென்னை.

ராஜு, தி.சா., 1960. பாரதி வழி, அமுத நிலையம், சென்னை.

வரதராஜ், ஜி. (பதி.), 1981: கலைக்கதிர், பாரதி நூற்றாண்டு சிறப்பிதழ், டிசம்பர் 1981, கோயமுத்தூர்.

வ. ரா., 1944, 1956: மகாகவி பாரதியார், சக்தி காரியாலம், சென்னை.

BIBLIOGRAPHY

Bharathi Tamil Sangam: 1962: Essays on Bharati, Vol. II, Bharathi Tamil Sangam, Calcutta.

Eknath Ranade (Ed): 1978: The Indian Renaissance, Vivekananda Kendra Patrika Special Volume, Vivekananda Kendra. Madras.

Govindan, M.: 1974: Poetry and Renaissance, Kumaran Asan Birth Centenary Volume, Sameeksha, Madras.

Jawaharlal Nehru: 1946, 1982: The Discovery of India, Jawaharlal Nehru Memorial Fund, New Delhi.

Mahadevan, P: 1957: Subramania Bharati, Patriot and Poet, Vetri Publishers, Madras

Meenakshisundaram, K: A Study of the Poetical Works of Subramania Bharati. Paari Nilayam, Madras.

Nair, S.K.: (Ed): 1939: Select Speeches of Notable Indians, V.V. Press, Quilon.

Pandurangan, K: 1981: 'National Literature', In Literary Heritage of the Tamils, International Institute of Tamil Studies, Madras.

Prema Nandakumar: 1968, 1979: Subramania Bharati, National Book Trust, New Delhi.

Ramakrishnan, S: 1982: Bharati Patriot Poet Prophet, New Century Book House Madras.

Subramanian, S.V and Ghadigachalam, N.: Literary Heritage of the Tamils, International Institute of Tamil Studies, Madras.

Sivagnanam, M.P. : 1980: The History of the growth of Tamil during Indian war of Independence, University of Madras, Madras.

Viswanathan, C.: 1929: Bharati and His Works, Bharati Prachuralayam, Madras.

Vivekananda, Swami: 1955: The Complete Works of Swami Vivekananda, Volume III, Advaita Ashram, Calcutta.

சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ்த்துறை - தமிழ் இலக்கியத்துறை வெளியீடுகள்

1. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்
டாக்டர். ந. சஞ்சீவி.

2. இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்
(ப. ஆ.) டாக்டர். ந. சஞ்சீவி.

3. பல்கலைப் பழந்தமிழ்
(ப. ஆ.) டாக்டர். ந. சஞ்சீவி.

4. தெய்வத் தமிழ்
(ப. ஆ.) டாக்டர். ந. சஞ்சீவி.

5. பெருங்காப்பியச் சிற்றிலக்கியப் பெருந்தமிழ்
(ப. ஆ.) டாக்டர். ந. சஞ்சீவி.

6. நாக குமார காவியம்
(ப. ஆ.) திரு. மு. சண்முகம்பிள்ளை.

7. திருவிசைப்பா — திருப்பல்லாண்டு
திரு. மு. அருணாசலம்.

8. அப்பாண்டை நாதர் உலா
(ப. ஆ.) திரு. மு. சண்முகம்பிள்ளை.

9. கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச்சுவடிகள்
திரு. மு. சண்முகம்பிள்ளை
டாக்டர். இ. சுந்தரமூர்த்தி.

10. உயராய்வு (இரண்டு தொகுதிகள்)